DR இளங்கோ & DR. ஜானகி
பல் மருத்துவர்கள்
www.illangodentistry.com
SCARBOROUGH 416 292 7004
BRAMPTON / MISSISSAUGA 905 457 1700
MARKHAM (New Location) 905 472 7223
பற்களை ஒழுங்குபடுத்தும் முறையை தமிழில் விளங்கிக்கொள்வதற்கு சரியான அலுவலகங்கள் உங்களுக்கு அருகில் - டாக்டர். இளங்கோ

For Your Rental Needs
HOME Rentals
416-703-7300 | info@ihomerentals.ca

Homelife Future Realty Inc.
"My clients are my value"
647-668-8276 | 416-629-5800
905-201-9977 (Business)
Kailain Thillainathan Sales Representative
kailain.thillai@gmail.com | homesbyraghu@gmail.com
Ragu Thillainathan Sales Representative

இவ்விடத்தில்
விளம்பரம் செய்ய
எம்மை அழையுங்கள்
416-752-1524

PYRAMID GROUP
UTHAYAN 416.301.5555
RAJ 416.843.3333
KUMAR 416.453.7777

List Your Property Free
PROPERTYMAX.LK
+94772332300

நான் எப்பொழுதும் உங்களோடு தான்
Buying-Selling-Investing
Raj Perampalam
Broker
என்னை அழையுங்கள்
Direct: 416-897-9155
Office: 905-201-9977


ALL IN ONE TAX & IMMIGRATION SERVICES
Kokulan Baskaran
Tax Consultant
Tel: 647-344-6600

Residential & Commercial
Real Estate Services
Bala Logendralingam
Realtor
Cell: 647-447-1562
RE/MAX COMMUNITY

29ம் ஆண்டில்...
29 years of publishing
www.uthayannews.ca
UTHAYAN
உதயன்
திக்கெட்டும் தமிழ் உலகில் எத்திக்கும் கதிர் வீசும் வாரச் செய்தி இதழ்
Member of National Ethnic Press and Media Council of Canada
$1.00
416-752-1524 www.uthayannews.ca
Canadian Media Circulation Audit
உதயம் 1527
CHIEF EDITOR: R.N. LOGENDRALINGAM
Friday July 11, 2025

# இனிவரும் மூன்றாண்டுகளில் மத்திய வரவு செலவுத் திட்டத்தில் நிதி ஒதுக்கீடுகளில் 25 பில்லியன்களை குறைப்பதற்கு தீர்மானித்துள்ள மார்க் கார்னியின் அரசு

## நிதி நெருக்கடிகளை சமாளிக்க கனடிய அரசு அரச அதிகாரிகள் பலரை பணியிலிருந்து நீக்குவது மற்றும் வெளி அமைப்புக்களுக்கான நிதி வழங்கலைத் கட்டுப்படுத்துவது போன்ற அவசர நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படலாம்



அடுத்த மூன்றாண்டுகளில் கனடிய மத்திய அரசின் வரவு செலவுத் திட்டத்தின் நிதி ஒதுக்கீடுகளில் 25 பில்லியன் டாலர்களை குறைப்பதற்கு மார்க் கார்னியின் அரசு தீர்மானித்துள்ளதாக ஒட்டாவா பாராளுமன்ற வளாகத்திலிருந்து கசிந்தள்ள செய்திகள் தெரிவிக்கின்றன. மேற்படி நிதி நெருக்கடிகளை சமாளிக்க கனடிய அரசு அதன் மத்திய அரசின் கீழ பணியாற்றும் அதிகாரிகள் தரத்தில் உள்ளவர்களில் பலரை பணியிலிருந்து நீக்குவது மற்றும் வெளி அமைப்புக்களுக்கான நிதி வழங்கலைத் கட்டுப்படுத்துவது போன்ற அவசர நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படலாம் எனவும் மேற்படி தகவல்களிலிருந்து அறியவந்துள்ளது.

பல காரணங்களால் அரசாங்க மட்டத்தில் இடம் பெறும் செலவு மதிப்பாய்வின் கடந்த தேர்தல் பிரச்சாரத்தின் போது பிரதமர் மார்க் கார்னி மற்றும் அமைச்சர்கள் வாக்குறுதியளித்ததை விட பிரதமர் மார்க் கார்னியின் அரசாங்கம் எவ்வாறு இரு மடங்கு சேமிப்புக்களை நோக்கமாகக் கொண்டுள்ளது என்பதை தெரிந்து கொண்ட கனடியர்கள் பலரும் தொழில் நிறுவனங்களும் தமது அதிருப்தியை வெளியிட்டுள்ளனர்.

(தொடர்ச்சி 5ம் பக்கம்)

# "தமிழர"சைப் பாதுகாக்கும் குறு நில மன்னர்கள்

- கே.பாலா -



சி.வி.கே. சிவஞானத்தை மகாராஜாவாகவும் எம்.ஏ. சுமந்திரனை மாமன்னனாகவும் கொண்ட ““தமிழரசு““ஆட்சியில் (கட்சியில்) சில குறுநில மன்னர்கள் மகாராஜாவுக்கோ மாமன்னருக்கோ கட்டுப்படாது தனித்து செயற்படுவதாகவும் இதனால் தமிழரசு ஆட்சியின் கட்டுக்கோப்பு பாதிக்கப்படுவதாகவும் ஆட்சி அதிகாரம் கேள்விக்குட்படுத்தப்படுவதாகவும் இதனால் தமிழரசு ஆட்சியின் மாண்புக்கு பங்கம் ஏற்படுவதாகவும் எனவே குறு நில மன்னர்களை கட்டுப்படுத்த வேண்டும் அல்லது அவர்களின் குறு நில ஆட்சி அதிகாரத்தை பறிக்க வேண்டுமென மகாராஜாவுக்கும் மாமன்னருக்கும் சாமரம் வீசும் சில தற்பெருமை விற்பன்னர்கள் தினமும் ஓதிக்கொண்டிருக்கின்றனர். (தொடர்ச்சி 17ம் பக்கம்)

இவ்விடத்தில்
விளம்பரம் செய்ய எம்மை அழையுங்கள்
416-752-1524

தாமோர் நகை அடைவு மாளிகை
THAMOR PAWN BROKER
107 Dundas St, East, Mississauga, ON, L5A 1W7
905-272-1222
23-8907 The Gore Rd, Brampton, ON L6P 2L1
905-794-4404
online service: www.remitbee.com

அதிவிரைவான அகதிக்கோரிக்கை விண்ணப்பங்கள் உள்ளடங்கலான சகலவிதமான Immigration சேவைகளுக்கும்
Prime Legal Services
(Eraa Supermarket Plaza)
5928 Finch Avenue E, Unit 231
905-334-6851


சரவணா பவன் சைவ உணவக
ஸ்காபுறோ கிளையில் 30 பேருக்கு மேற்படாமல்
உங்கள் விசேட கொண்டாட்டங்களை நடத்தலாம்
We Celebrate your
Special Day
at Scarborough
Saravanaa Bhavan.
கனடாவில் நான்கு கிளைகளைக் கொண்டியங்கும் சரவணா பவன் சைவ உணவகத்தின்
ஸ்காபுறோ கிளையில் இப்பொழுது 30 பேருக்கு மேற்படாமல்
உங்கள் விசேட கொண்டாட்டங்களை நடத்தலாம்.
வாரத்தில் திங்கட்கிழமை தொடக்கம் வியாழக்கிழமை வரையான நான்கு நாட்கள்
மட்டுமே இவ்வாறான கொண்டாட்டங்களை நடத்த முடியும்.
சிறப்பு உணவு வகைகளுக்கும் நீங்கள் ஆடர் செய்யலாம்.
Monday to Thursday | Maximum of 30 People
மேலதிக விபரங்களுக்கு:
+1 (437) 603-7755
என்னும் இலக்கத்தை அழைக்கவும்
*Conditions apply
SARAVANAA BHAVAN®
CANADA
WORLD'S NO.1 INDIAN VEGETARIAN RESTAURANT CHAIN
SCARBOROUGH 416 293 7755
MISSISSAUGA 905 290 0769
BRAMPTON 905 457 7575
DELTA B.C 778 578 7575

Canada
We acknowledge the financial support of the Government of Canada

Single Copy $1 Annual Subscription Price $52.00

பிரதம ஆசிரியர்: ஆர்.என்.லோகேந்திரலிங்கம்

உதயன் வெளியீட்டாளர்கள் | Uthayan Publishers

EDITOR IN CHIEF: R. N.Logendralingam
OFFICE ASSISTANT: Pirabu
GRAPHIC: Pathma, Yalini, Logan & Shanthy (Aum Sign) and Arjune
TECHNICAL: Janani and Bala
PRINTERS: Web News Printing Inc.
DISTRIBUTION: Yogarajah

Phone: 416 752 1524, Fax: 416 752 6703
4062 Ellesmere Road, Scarborough ON M1C 1J2
website: www.uthayannews.ca email: Uthayannews@yahoo.com

உதயன் கதிரோட்டம்

# உலக அரசியல் அதிகாரத்தை கைகளுக்குள் வைத்திருக்கும் "தலைவர்களும்" அவர்களது "கையாட்களும்" ஐ. நா வும் மக்கள் மீது அக்கறையே இல்லாதவர்கள்

எல்லாமாக உலகத்தில் ஆளும் வர்க்கம் என்றொரு பிரிவினரும் ஆளப்படுபவர்கள் என்றொரு இன்னொரு பிரிவினரும் உள்ளனர் என்பதை மார்க்ஸ் ஏங்கெல்ஸ், லெனின் போன்ற சமூகத்தின்மீது சோசலிசப் பார்வை கொண்ட தலைவர்கள் அன்றே கூறிவைத்தார்கள். ஒரு தேசத்திலோ அனறி உலகத்தின் எந்த மூலையிலோ நசுக்கப்படும் இனங்களுக்கு சுய நிர்ணய உரிமை வழங்கப்பட வேண்டும் என்று எழுத்திலும் நடைமுறையிலும் சிந்தித்து வலயுறுத்தியவர்களும் அவர்களே. எனினும் உலகின் வலிமையான சோசலிச நாடாக விளங்கிய ரஸ்யாவின் சோசலிச தளத்தை அழிப்பதில் முக்கிய கவனமெடுத்த அமெரிக்காவும் அதன் சார்பு நாடுகளும் இன்றுவரை சோகலிசக் கொள்கைகள் உலகின் எந்த மூலைக்கும் பரவிடக் கூடாது என்பதில் கவனமாக உள்ளன. இதன் தாக்கம் எமது இலங்கையிலும் தொடர்ந்த வண்ணம் உள்ளதை மக்கள் அறிந்திருக்கா விட்டாலும் ஆட்சியில் அமர்ந்திருப்பவர்களும் ஆட்சியில் அமரத் துடிப்பவர்களும் கவனித்த வண்ணம் உள்ளார்கள்.

சிறுபான்மை இனங்களின் அரசியல் தீர்விற்கு அவர்கள் வாழும் நாட்டுக்குள்ளேயே சுயநிர்ணய உரிமைகளைக் கொண்டவர்களாய் வாழ சட்டங்களின் மூலம் வழி செய்யப்பட வேண்டும் என்பது நியாயமான ஒன்றாகத் தெரிந்தாலும் அதை நடைமுறைப்படுத்த ஆளும் அரசியல் தலைவர்கள் என்றும் சிந்திப்பதே இல்லை. இதனால் சிறுபான்மை இனங்களின் பிரச்சனைகள் நீறு பூத்த நெருப்பாக எரிந்த வண்ணமே உள்ளன.

உலகில் அரசியல் நெருக்கடிகளால் பாதிக்கப்பட்டுள்ள சிறுபான்மை இனங்கள் பெரிதாக நம்பும் ஐக்கியநாடுகள் சபையோ அன்றி அந்த அமைப்பின் கீழ் வரும் மனித உரிமைகளுக்கான அமைப்போ சிறுபான்மையினரின் பிரச்சனைகளை ஏமாற்றும் நோக்கோடு கையாளுகின்றனவே தவிர அவர்களின் பிரச்சனைகள் அல்லது வேண்டுகோள்கள் தீர்க்கப்பட வேண்டும் என்ற அக்கறையோடும் இதய சுத்தியோடும் செயற்படுபவையாக இல்லை என்பது தற்போது ஈழத் தமிழர்களின் விடயத்திலும் குறிப்பாக தற்போது "எரயும்" பிரச்ச்னையாக உள்ள "செம்மணி புதைகுழிகள் விவகாரத்திலும் நன்கு புலப்படுவதனால் தமிழர்களாகிய நாம் புலம்பிக் கொண்டிருக்கின்றோம். ஆனால் தமிழ்த் தலைவர்களோ தங்கள் பதவிகளைத் தக்கவைத்துக் கொள்வதற்காக "போராடிக் கொண்டிருக்கின்றார்கள்.

இன்றைய முரண்பாட்டில் சிறுபான்மைச் சமூகங்களின் எதிர்ப்பரசியலானது எப்போதும் போலவே ஆளும் அரசுக்கெதிரான கட்சிகளுக்குப்பின்னும் மற்றும் பெரும்பான்மைச் சமுதாயத்தின் ஜனாதிபதிகளின் வழியில் பிளவுபட்டு நிற்கும் இன அடையாளங்கள் வெளிப்பட்டு நிற்கும் புள்ளியில் மேற்குலக-ஆசிய மூலதனத்தின்பின் அணிவகுக்கும் சிங்கள-தமிழ் ஆளும் வர்க்கம், இலங்கையில் ஜனநாயகத்தை மறுத்து நிற்கும் தெரிவில் இலங்கையின் அரசியல் எதிர்காலம் சிறுபான்மை இனங்களை வேட்டையாடப்போகிறதென்பதற்கு உதாரணமாக பல விடயங்கள் எமது கண்களுக்கு முன்பாகவே இடம்பெறுகின்றன

குறிப்பாகச் சிங்கள இனவாதத்தாலும்-ஒடுக்குமுறையாலும் தொடர்ந்து பாதிக்கப்படும் இலங்கைச் சிறுபான்மையினங்கள் தம்மைத் தொடர்ந்து பலியாக்கும் அரசியலைத் தத்தமது தலைவர்களதும்-கட்சியினதும் நலனுக்கான தெரிவின்வழி கைவிட்டவர்களாகவே தங்கள் இருப்பை தொடர்கின்றனர.

இவ்வாறான நிலையில் புலம் பெயர் தமிழர்களும் அமைப்புக்களும் தாயகத்தில் பாதிக்கப்படும் மக்களுக்கு அரணாக விளங்குவார்கள் என்று எதிர்பார்க்கப்பட்டாலும் அவையும் ஆரோக்கியமானதாக இல்லை என்பதே வெளிச்சமாகத் தெரிகின்றது. இவ்வாறான நிலையில் செம்மணி விவகாரத்தை வெற்றிகரமாகக் கையாளும் "கைதேர்ந்தவர்களின்" பங்களிப்பு ஈழத்தமிழர்களுக்கு தற்போது அவசியமான தொன்றாக விளங்குகின்றது.

Magha



Val Morin
முருகன் தேர் தரிசனம்
July 19 & 20
(Saturday & Sunday)
Scarborough – Ajax and Markham selected stops
Hotel + AC Bus – Only 199 CAD per person
For Tickets: Tam 416-317-0052 / 647-821-7895



வல்மொறின் முருகன் ஆலய வருடாந்த தேர் உற்சவத்திற்கான விசேட சொகுசு பஸ் சேவை - TORONTO வில் இருந்து.....
யூலை 19ம் 20ம் திகதிகளில் சனி ஞாயிறு தினங்களில்
ஹோட்டல் மற்றும் சொகுசு பஸ் கட்டணங்கள் 199.00 டாலர்கள் மட்டுமே.
பக்தர்ளை ஏற்றும் இடங்கள்: Ajax-Markham- Scarborough-Vaughan-Etobicoke-Brampton ஆகியனவாகும் .பயணச் சீட்டுகளுக்கு அழைக்க வேண்டிய தொலைபேசி இலக்கங்கள்: 416.317.0052 / 647.821.7895

Sapphire Banquet & Catering
Specializing in Videography & Photography
- Anniversary Party - Birthdays
- Graduation Party
- Bridal Shower - Engagement - Wedding Showers
SHIVA SUBRAMANIAM (647) 406-4868

Space for Rent
நடனம் பயில்வதற்கு
வாடகைக்கு இடம் உண்டு.
(பழைய தமிழ்ப் பூங்கா இருந்த இடம் - மார்க்கம்)
5 வயதிற்கு
மேற்பட்டோருக்கான இசை வகுப்புக்கள் நடைபெறுகின்றன.
(ஓகன், கிற்றார், றம்) ஆர்வம் உள்ளவர்கள் தொடர்பு கொள்ளலாம்
Raj - (416) 454-1893

இலங்கை செய்திகள் Sri Lanka News

# செம்மணி மனிதப் புதைகுழி தடயவியல் அகழ்வாய்வு, மூன்றாவது பகுதிக்கும் நீட்டிக்கப்பட்டது!



போரினால் பாதிக்கப்பட்ட வடக்கில், புதிதாக கண்டுபிடிக்கப்பட்ட மனித புதைகுழியின், மனித எச்சங்களின் எண்ணிக்கையின் அடிப்படையில் நாட்டில் நான்காவது இடத்தில் உள்ளது.

2025 மே மாத நடுப்பகுதியில் இருந்து செம்மணி சித்துப்பாத்தி மனித புதைகுழியில் மேற்கொள்ளப்பட்ட அகழ்வாராய்ச்சிகளில் இதுவரை 56 மனித எலும்புக்கூடுகள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன, அவற்றில் சிறுவர்களின் எலும்புக்கூடுகள் அடங்கும்.

முன்னர் அடையாளம் காணப்பட்ட நான்காவது பெரிய புதைகுழி, 52 எலும்புக்கூடுகள் அகழ்ந்து எடுக்கப்பட்ட, முல்லைத்தீவு மாவட்டத்தில் உள்ள கொக்குத்தொடுவாய் மனித புதைகுழி ஆகும்.

நீதிமன்றத்தால் குற்றம் நிகழ்ந்த இடமாக அறிவிக்கப்பட்டுள்ள சித்துப்பாத்தி மனித புதைகுழியில் கண்டறியப்பட்ட 56 மனித எலும்புக்கூடுகளில், மூன்றாம் கட்ட அகழ்வாராய்ச்சியின் 13ஆவது நாளான இன்றைய தினம் (ஜூலை 8) வரையில் 50 எலும்புக்கூடுகள் அகழ்ந்தெடுக்கப்பட்டுள்ளன.

தற்போது புதைகுழியில் மூன்று இடங்களில் இருந்து மனித எலும்புக்கூடுகள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன.

மேலும் தடயவியல் தொல்பொருள் ஆய்வாளர் பேராசிரியர் ராஜ் சோமதேவ மனித எலும்புக்கூடுகள் இன்னும் புதைக்கப்பட்ட இடங்களை அடையாளம் கண்டு நீதிமன்றத்திற்கு அறிக்கை அளித்ததை அடுத்து, ஜூன் 2 புதன்கிழமை இரண்டாவது இடத்தில் அகழ்வு ஆரம்பமானது.

இதற்கு "தடயவியல் அகழாய்வுத்தளம் தளம் 2" என பெயரிடப்பட்டுள்ளது.

அந்த இடத்தில் கண்டறியப்பட்ட மனித எலும்புக்கூடுகளின் எண்ணிக்கை மூன்று என பாதிக்கப்பட்டவர்கள் சார்பில் முன்னிலையாகும் சட்டத்தரணி ரணிதா ஞானராஜா குறிப்பிடுகின்றார்.

"தடயவியல் அகழாய்வுத்தளம் தளம் 2 இல் அடையாளப்படுத்தப்பட்ட பகுதியில் 3 எலும்பு எச்சங்கள் இன்னும் அகழ்ந்து எடுக்கப்படவில்லை. நாளை அது அகழ்வுக்கு இலக்கமிடப்படும். அதன் பின்னர் அகழ்வு இடம்பெறும்."

அகழ்வாராய்ச்சிப் பணிகள் ஆரம்பமான முதல் இடத்திற்கு தடயவியல் அகழாய்வுத்தளம் தளம் 1 எனவும், வரவிருக்கும் மழைக்காலத்தை சமாளிக்க வாய்க்கால் தோண்டும்போது மனித எச்சங்கள் கண்டுபிடிக்கப்பட்ட இடத்திற்கு தடயவியல் அகழாய்வுத்தளம் தளம் 3 எனவும் பெயரிடப்பட்டுள்ளதாக, தடயவியல், மானுடவியல் மற்றும் தடயவியல் தொல்பொருளியல் துறையில் சிறப்புப் பயிற்சி பெற்ற சட்டத்தரணி ரணிதா ஞானராஜா யாழ்ப்பாணத்தில் ஊடகவியலாளர்களிடம் தெரிவித்தார்.



முதல் தடயவியல் அகழாய்வுத்தளத்தில் 20 மீற்றர் தொலைவில் 11 மீற்றர் அகலமும் நீளமும் கொண்ட ஒரு புதிய கான் ஒன்று தோண்டப்பட்டுள்ளது, இது செம்மணி மனித புதைகுழியின் பரந்த தன்மையைப் பற்றிய ஒரு சிந்தனையை ஏற்படுத்திக்கொள்ள முடியுமென மனித உரிமைகள் சட்டத்தரணி கே.எஸ். ரத்னவேல் ஊடகங்களிடம் தெரிவித்தார்.

இதுவரை மீட்கப்பட்ட எலும்புக் கூடுகளுக்கு மேலதிகமாக, துணிகள், இரண்டு காலணிகள், ஒரு சிறு குழந்தையினுடையது என நம்பப்படும் இரண்டு வளையல்கள் மற்றும் ஒரு பொம்மை உள்ளிட்ட கருவிகளும் நீதிமன்றத்தின் உத்தரவின் பேரில் சட்ட வைத்திய அதிகாரி வைத்தியர் செல்லையா பிரணவனின் மேற்பார்வையின் கீழ் யாழ்ப்பாண வைத்தியசாலையில் சேமிக்கப்பட்டுள்ளன.

இலங்கையில் கண்டுபிடிக்கப்பட்ட அண்மைய மனித புதைகுழியின் அகழ்வாராய்ச்சி சர்வதேச தரத்திற்கு அமைய பாரபட்சமின்றி மேற்கொள்ளப்பட வேண்டும் என்ற பாதிக்கப்பட்டவர்களின் தொடர்ச்சியான கோரிக்கையை ஐக்கிய நாடுகள் சபை அண்மையில் அங்கீகரித்தது.

ஐ.நா மனித உரிமைகள் உயர்ஸ்தானிகர் வோல்கர் டர்க், ஜூன் 25 அன்று, யாழ்ப்பாணத்தில் உள்ள சித்துப்பாத்தி மனித புதைகுழிக்கு அருகில், மனித புதைகுழிகள் பற்றிய உண்மையை வெளிக்கொண்டுவர தடயவியல் நிபுணத்துவம் கொண்ட சுயாதீன நிபுணர்களால் விரிவான, வலுவான விசாரணை தேவை எனக் கூறியிருந்தார்.

மனித உரிமைகள் ஆணையாளரை மனித புதைகுழியை ஆய்வு செய்ய அனுமதிப்பதாக பகிரங்கமாக உறுதியளித்த அரசாங்கம், அதைத் தடுப்பதற்கான தோல்வியுற்ற, திட்டமிட்ட முயற்சி என்ற கடுமையான குற்றச்சாட்டுகளை இப்போது எதிர்கொள்கிறது.

இலங்கையில் இதுவரை கண்டுபிடிக்கப்பட்ட மிகப்பெரிய புதைகுழி மன்னாரில் உள்ள சதொச புதைகுழி ஆகும், அங்கு 28 சிறுவர்களின் எலும்புகள் உட்பட 376 எலும்புக்கூடுகள் அகழ்ந்து எடுக்கப்பட்டன.

2013 ஆம் ஆண்டில், இலங்கையில் கண்டுபிடிக்கப்பட்ட இரண்டாவது பெரிய புதைகுழியாகக் கருதப்படும் மாத்தளை வைத்தியசாலைக்கு அருகிலுள்ள ஒரு இடத்திலிருந்து 155 எலும்புக்கூடுகள் மீட்கப்பட்டன. இலங்கையில் மூன்றாவது பெரிய புதைகுழி மன்னாரில் உள்ள திருக்கேதீஸ்வரம் புதைகுழி ஆகும், அங்கு அதே ஆண்டில் 82 மனித எலும்புக்கூடுகள் மீட்கப்பட்டன.

கொக்குத்தொடுவாய் புதைகுழியிலிருந்து 52 பேரின் எலும்புக்கூடுகள் மீட்கப்பட்ட பின்னர் அகழ்வாராய்ச்சி பணிகள் நிறைவடைந்தன. ஒரு வருடத்திற்கு முன்னர், கொழும்பு துறைமுகத்திற்கு செல்லும் புதிய அதிவேக வீதியின் நிர்மாணத்திற்காக நிலம் தோண்டப்பட்டபோது, ஜூலை 13, 2024 அன்று முதல் மனித எச்சங்கள் கண்டுபிடிக்கப்பட்டன. கொழும்பு துறைமுகத்தில் உள்ள பழைய செயலக வளாகத்தில் இருந்து மீட்கப்பட்ட மொத்த மனித எலும்புகளின் எண்ணிக்கை இன்னும் அறிவிக்கப்படவில்லை.

இந்தப் மனித புதைகுழிகள் அனைத்தும் தற்செயலாகக் கண்டுபிடிக்கப்பட்டன.

# செம்மணி விடயம் குறித்து வழக்கு தாக்கல் செய்தவருக்கு அச்சுறுத்தல்!

செம்மணி விடயம் குறித்து நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்த, குறித்த மயானத்தின் நிர்வாகசபை உறுப்பினரான திரு. கிருபாகரன் தனக்கு தொடர்ந்து அச்சுறுத்தல்கள் விடுக்கப்பட்டு வருவதாக தெரிவித்துள்ளார்.

8ம் திகதி அன்றையதினம் செவ்வாய்க்கிழமையன்று செம்மணி பகுதியில் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார். அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில், மர்ம வாகனம் செம்மணியை நோட்டமிடுவதாக ஊடகங்களில் செய்திகள் வெளிவந்தன. அந்த செய்திகள் முற்றும் முழுதாக உண்மை. அந்த மர்ம வாகனமானது எனது வீட்டு அருகாமையிலும் வந்திருந்தது. வழக்காளியான என்னை அச்சுறுத்துவதே இதன் நோக்கமாகும்.

வழக்கு தொடர்பாக 1995 - 2000 வரையான காலப்பகுதியில் இங்கே கடுமையான செய்தி தணிக்கைகள் இருந்த நிலையில் நீதிமன்ற செயற்பாடுகளும் பொலிஸ் செயல்பாடுகளும் இல்லாது நிர்வாக ரீதியான செயல்பாடுகள் அனைத்தும் இராணுவத்தின் வசம் இருந்ததால் மக்கள் தாமாக முன்வந்து எந்த சாட்சியங்களையும் பதியவில்லை.

இவ்வாறான சூழ்நிலையில் நான் இந்த விடயத்தை இன்று கையில் எடுத்ததால் அரியாலை பகுதியில் இருக்கின்ற பாதிக்கப்பட்ட மக்கள் தமது சாட்சியங்களை எனக்கு தந்து கொண்டிருக்கின்ற நிலையிலே இந்த சாட்சியங்களை அச்சுறுத்துகின்ற அல்லது இந்த சாட்சியங்கள் சாட்சி கூற வருவதை தடுப்பதாக இந்த செயல்பாடு காணப்படுகிறது.

அதாவது 1998ஆம் ஆண்டு முதலாவது குற்றவாளியான சோமரத்ன ராஜபக்ச வழங்கிய புதைகுழிகள் தொடர்பான அறிக்கையிலே, பதினைந்தாவது புதைக்கிழியாக குறிப்பிடப்பட்ட ஏ-9 வீதி, பொன்னம்பலம் சந்திக்கு அருகாமையில் இருக்கின்ற இராணுவ முகாமுக்கு அருகில் இருக்கின்ற கிணற்றிலிருந்து அகழ்வு இடம் பெற்றது. அதற்குப் பின்னால் இப்போதும் இராணுவ முகாம் இருக்கின்றது. அந்த இராணுவ முகாம் அமைந்துள்ள தனியார் காணிக்குள் தான் அந்த மர்ம வாகனம் சென்றது. இதனை நான் அவதானித்தேன்.



நான் வசிக்கின்ற வீட்டுக்கான வீதியானது எனது வீட்டுடனேயே முடிவடைகின்றது. ஆகையால் வேறொரு வாகனம் அந்த ஒழுங்கைக்கு வருவதற்கான அவசியம் இல்லை. இரண்டு வாகனங்கள் இவ்வாறு வந்திருந்தது. இதனை நேரில் கண்ட ஒருவர் எனக்கு தெரிவித்திருக்கின்றார்.

ஆகவே எவ்வாறான அச்சுறுத்தல்கள், எவ்வாறான செயற்பாடுகள் நடந்தாலும் இந்த வழக்கில் நான் உறுதியாக இருக்கின்றேன். மக்களும் உறுதியாக தமது சாட்சியங்களை தருகின்றார்கள். இதன்மூலம் பல உண்மைகள் வெளிவருகின்றன. அதனை நாங்கள் நீதிமன்ற செயற்பாட்டுக்கு சமர்ப்பித்து தொடர்ந்து தமிழ் மக்களுக்கான நீதிக்கான அனைத்து செயல்பாடுகளையும் முன்னெடுப்பேன் என்றார்.


ஊடக வெளியீடு
PRESS RELEASE
நல்லூர் பிரதேச சபை
NALLUR PRADESHIYA SABHA
07.07.2025

# நல்லூர் பிரதேச சபைக்குட்பட்ட பகுதிகளுக்குள் காணப்படும் விடுதிகளைப் பதிவு செய்தல் தொடர்பாக தவிசாளரின் அறிவிப்பு!

நல்லூர் பிரதேச சபைக்குட்பட்ட பகுதிகளுக்குள் காணப்படும் அனைத்து விடுதிகள், தனியார் மாணவர் விடுதிகள், வீடுகளில் அறை கொடுத்து பணம் பெற்றுக்கொள்ளும் வீட்டின் உரிமையாளர்கள் மற்றும் வீடுகளை நாளாந்த வாரந்த மாதாந்த அடிப்படையில் வாடகைக்கு வழங்குபவர்கள் அனைவரும் எதிர்வரும் 30.07.2025 ஆம் திகதி மாலை 4 மணிக்கு முன்னர் நல்லூர் பிரதேச சபையில் பதிவுகளை மேற்கொள்ள வேண்டும் என நல்லூர் பிரதேச சபையின் தவிசாளர் ப.மயூரன் தெரிவித்துள்ளார்.

இதற்கான விண்ணப்பப்படிவங்களை நல்லூர் பிரதேச சபையின் தலைமைக் காரியாலயம், கொக்குவில் உப அலுவலகம், நல்லூர் உப அலுவலகம் ஆகியவற்றில் பெற்றுக்கொள்ள முடியும். பெற்றுக்கொண்ட விண்ணப்பப்படிவங்களினை பூரணப்படுத்தி எதிர்வரும் 30.07.2025 புதன் கிழமை மாலை 4 மணிக்கு முன்னர் மேற்குறிப்பிட்ட அலுவலகங்களில் ஒப்படைக்க வேண்டும்.

நல்லூர் பிரதேச சபையின் இவ் பகிரங்க அறிவித்தலினை உதாசீனம் செய்து தங்களுடைய விடுதிகளை நல்லூர் பிரதேச சபையில் குறித்த காலப்பகுதிக்குள் பதிவு செய்யாமல் இருப்பவர்கள் மீது உரிய சட்ட நடவடிக்கைகளை நல்லூர் பிரதேச சபை மேற்கொள்ளும்.

அருகில் காணப்படும் விரைவு எதிர்வினை முகவரியினை (QR Code) வருடல் (Scan) செய்வதன் மூலமும் விண்ணப்பப்படிவத்தினை பதிவிறக்கிக் கொள்ளமுடியும் என அவர் மேலும் தெரிவித்தார்.

# இனிவரும் மூன்றாண்டுகளில் மத்திய வரவு செலவுத் திட்டத்தில் நிதி ஒதுக்கீடுகளில் 25 பில்லியன்களை குறைப்பதற்கு தீர்மானித்துள்ள மார்க் கார்னியின் அரசு

## நிதி நெருக்கடிகளை சமாளிக்க கனடிய அரசு அரச அதிகாரிகள் பலரை பணியிலிருந்து நீக்குவது மற்றும் வெளி அமைப்புக்களுக்கான நிதி வழங்கலைத் கட்டுப்படுத்துவது போன்ற அவசர நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படலாம்

(முன் பக்கத் தொடர்ச்சி)

ஒட்டாவாவின் செலவு அதிகரிப்பானது கனேடிய இராணுவத்தை நோக்கியதாக உள்ளதால் எந்தெந்த மத்திய அரசின் செலவீனங்களை கட்டுப்படுத்தலாம் என்பதில் மார்க் கார்னியின் அரசும் நிதி அமைச்சகமும் திணிடாடுவதாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது. கனடிய அரசிற்கான வரவு செலவுத் திட்டத்தை தயாரிப்பதற்காக அமர்த்தப்பட்டுள்ள தனியார் நிறுவனம் ஒன்றின் பிரதிநிதி இந்த "வெட்டுக்கள்" தொடர்பாக கருத்துக்களை வெளியிடுகையில் மத்திய அரசின் ஆடீலாசனைகளின் படி, வெட்டுக்கள் மற்றும் வேலை இழப்புகளை எதிர்கொள்ளக்கூடும் என்பதையும் இது காட்டுகிறது அஎன்றும் மேலும் பொருளாதாரத்தை வளர்ப்பதற்கான வழிகளில் "அதிக முதலீடு செய்ய" முளையும் அரசாங்க நடவடிக்கைகளின் பிரகாரம் "குறைவாக செலவழிக்க" மார்க் கார்னி அரசாங்கத்தின் அமைச்சர் பலர் பிரதமருக்கு உறுதியளித்துள்ளார்கள் என்றும் நம்பப்படுகின்றது.

9ம் திகதி புதன்கிழமை ஒரு நேர்காணலில், கனடிய பாராளுமன்ற வரவு செலவுத் திட்டத்தின் பொறுப்பதிகாரி யவ்ஸ் கிரோக்ஸ், கருத்துத் தெரிவிக்கையில் "நிதி விரயத்தை தடுத்து நிதியை சேமிக்கும் பயிற்சியின் பெரிய நோக்கம் என்பது நிச்சயம் செய்து முடிக்கப் கூடியது" என்று கூறினார், ஆனால் விளைவுகள் . "அரசு ஊழியர்களுக்கும் கனேடியர்களுக்கும் எவ்வளவு வேதனையை ஏற்படுத்தும் என்பது அரசாங்கம் உணர்ந்து கொண்ட ஒரு விஷயம்" என்றும் அவர் கூறினார்.

கனடிய மத்திய அரசின் பொது சேவையின் அளவை குறைப்பதற்கு இந்த ஆண்டின் தொடக்கத்தில் பிரதமர் மார்க் கார்னி உறுதியாகத் தெரிவித்திருந்த போதும், ஒட்டாவா மாநகர வணிக நிறுவனங்கள் மற்றுமு் , அரசாங்கம் அல்லாத அமைப்புகள் மற்றும் மத்திய அரசின் நிதியுதவி பெறும் மற்றவர்கள் போன்ற வெளிப்புற அமைப்புகளுக்கு மானியங்களையும் பங்களிப்புகளையும் குறைக்கும் வரை, மக்களுக்கு சோதனை-களை ஏற்படுத்துவது கிட்டத்தட்ட தவிர்க்க முடியாததாக இருக்கும் "என்று ஜிரோக்ஸ் தெரிவித்துள்ளார். அத்துடன் இரண்டு வகையான நிதி வெட்டுக்களும் இணைந்து அதன் பாதிப்பை அதிகமாக்கும் என்றும் தெரிவித்தார்.



இவ்வாறிருக்க, கடந்த மாதம், இந்த ஆண்டு பாதுகாப்புக்காக கூடுதலாக 9 பில்லியன் டாலர்கள் ஒதுக்கப்பட்ட பின்னர், பிர-தமர் மார்க் கார்னி வழங்கிய ஒரு புதிய நேட்டோ நாடுகளுக்கான உறுதிமொழியில் கனடாவின் மொத்த உள்நாட்டு வருமானத்தில் 3.5 சதவீதத்திற்கு சமமானதை 2035 க்குள் உபகரணங்கள் மற்றும் பணியாளர்கள் போன்ற "முக்கிய" இராணுவத்துறையின் தேவைகளுக்காக செலவழிக்க கையெழுத்திட்டார், ஜி.டி.பி-யில் மேலும் 1.5 சதவீதம் ஜி.டி.பி-ஆர்-தொடர்புடைய முதலீட்டில் இராணுவப் பயன்பாடு. அடுத்த தசாப்தத்தில் கனடாவின் மொத்த உள்நாட்டு உற்பத்தி எவ்வாறு வளர்கிறது என்பதைப் பொறுத்து, அந்த உறுதிப்பாட்டை பூர்த்தி செய்ய அரசாங்கம் 40 பில்லியன் டாலர்கள் வருடாந்த நிதியை இராணுவம் மற்றும் பாதுகாப்புத் துறைக்கு வழங்கவேண்டும் என்றும் அவர் தெரிவித்திருந்தார்.

அதே நேரத்தில், அடுத்த மூன்று ஆண்டுகளில் அரசாங்கத்தின் செயல்பாட்டு செலவு வரவு செலவுத் திட்டத்தை சமநிலைப்படுத்துவதாக பிரதமர் மார்க் கார்னி உறுதியளித்துள்ளார், மாகாணங்கள் மற்றும் பல் பராமரிப்பு, குழந்தை பராமரிப்பு மற்றும் பிறப்பு கட்டுப்பாடு மற்றும் நீரிழிவு மருந்துகளுக்கான பொது பாதுகாப்பு போன்ற திட்டங்களுக்கான அரசாங்கத்தின் கொடுப்பனவுகளை குறைக்காமல். வரவிருக்கும் ஆண்டுகளில் மற்ற பகுதிகளிலிருந்து நிதி வளங்களைப் பெற்றுக் கொள்ள முடியும் என்றும் சில அமைச்சர்கள் உறுதியளித்துள்ளனர் என்றும் அறியப்படுகின்றது

எனினும் 2028-29 காலப்பகுதிக்குள் வருடாந்த சேமிப்புக்கான ஒட்டுமொத்த இலக்கு முழு அரசாங்கத்திலும் சுமார் 25 பில்லியன் டாலர் என்று அதிகாரிகள் தெரிவித்தனர். ஏப்ரல் 28 தேர்தல் பிரச்சாரத்தின்போது மார்க் கார்னி தலைமையிலான வேட்பாளர்கள் உறுதியளித்ததைப்போன்று கனடாவின் பொருளாதாரத்தை செப்பனிட்டுக் கொள்ளலாம் என மார்க் கார்னியின் அரசாங்கம் நம்புவதாகவும் ஒட்டாவாவிலுள்ள பொருளாதார நிபுணர்கள் கருத்துத் தெரிவித்துள்ளார்கள் எனவும் கூறப்படுகின்றது



இலங்கை செய்திகள்
Sri Lanka News

# யாழ்ப்பாணம் செம்மணியில் புதைக்கப்பட்ட தமிழர்களுக்கு நீதி வழங்க வேண்டி மேலூரில் நாம் தமிழர் கட்சியினர் ஆர்ப்பாட்டம்

## மத்திய, மாநில அரசுகள் செம்மணி படுகொலைக்கு பன்னாட்டு நீதி விசாரணை நடத்த குரல் கொடுக்க வேண்டும் என வலியுறுத்தல்



(05-07-2025)

மதுரை மாவட்டம் மேலூர் பேருந்து நிலையம் முன்பாக, இலங்கை யாழ்பாணம் பகுதியில் உள்ள செம்மணி பகுதியில் தமிழர்கள் மீது நிகழ்த்தப்பட்ட படுகொலைகள் மீது ஐ.நா மனித உரிமை ஆணையம் உரிய விசாரணை மேற்கொண்டு நடவடிக்கை எடுக்க வேண்டும் என வலியுறுத்தி நாம் தமிழர் கட்சியின் சார்பில், தமிழர் மக்கள் இயக்கம், தமிழ்த் தேசியப் பேரியக்கம் சார்பில் 5ம் திகதியன்று சனிக்கிழமை கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.




இலங்கையில் தமிழர்கள் மீது தொடர்ந்து இனப்படுகொலை நிகழ்த்தப்பட்டு வருகின்ற நிலையில், இது குறித்து அப்போதைய தமிழக முதல்வர் கருணாநிதி தலைமையிலான தி.மு.க அரசு முதல் இப்போது உள்ள ஸ்டாலின் தலைமையிலான திமுக அரசு வரை எந்தவித கண்டன குரல் எழுப்பி, உரிய நடவடிக்கை எடுக்காமல் மௌனமாக இருந்து வருவதாக குற்றம் சாட்டினர்.

தொடர்ந்து, இலங்கை அரசு மீது ஐ.நா மனித உரிமை ஆணையம் உடனடியாக நடவடிக்கை எடுக்க முன்வர வேண்டும்.

பன்னாட்டு நீதிமன்ற விசாரணை நடத்தி சிங்கள ராணுவ குற்றவாளிகள் தண்டிக்கப்பட வேண்டும்.

இந்திய அரசு வழக்கம் போல கள்ள மவுனம் காக்காமல் பன்னாட்டு விசாரணை நடத்த குரல் கொடுக்க வேண்டும். தமிழ்நாடு அரசு சட்டமன்றத்தில் தமிழக மக்களின் உணர்வை பிரதிபலிக்கும் வகையில் இலங்கை அரசை கண்டித்து தீர்மானம் நிறைவேற்ற வேண்டும் என வலியுறுத்தி பல்வேறு கண்டன கோஷங்களை எழுப்பி ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

இந்த ஆர்ப்பாட்டத்தில் நாம் தமிழர் கட்சி, தமிழர் மக்கள் இயக்கம் மற்றும் தமிழ் தேசிய பேரியக்கம் சார்பில் நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்.

# பொலிசாரின் சமிக்ஞையை மீறிய மணல் ஏற்றிய டிப்பர் மீது பொலிசார் துப்பாக்கிச் சூடு!




7ம் திகதி திங்கட்கிழமை அன்றையதினம் பொலிசாரின் சமிக்ஞையை மீறி, மணல் ஏற்றிச் சென்ற டிப்பர் மீது பொலிசாரால் துப்பாக்கிச் சூடு மேற்கொள்ளப்பட்டுள்ளது.



கிளிநொச்சி - தர்மபுரம் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட கல்லாறுப் பகுதியில் அன்றிரவு சட்டவிரோதமாக அனுமதிப் பத்திரம் இன்றி மணல் ஏற்றிச் சென்ற டிப்பரானது பொலிஸ் சமிக்ஞையை மீறி சென்றபோதே. இவ்வாறு பயணித்த டிப்பர் மீதே துப்பாக்கிச் சூடு மேற்கொள்ளப் பட்டுள்ளது.

இரவு 9.30 மணியளவில் மணல் ஏற்றிய டிப்பர் வாகனத்தை புளியம்பொக்கனை சந்தியில் வைத்து பொலிசார் மறித்து சோதனை செய்ய முற்பட்டனர்.

பொலிசாரின் சமிக்ஞையை மீறி சென்ற டிப்பர் மீது பொலிசார் துப்பாக்கி பிரயோகம் மேற்கொண்டனர். பொலிசாரின் துப்பாக்கி பிரயோகத்தில் டிப்பர் வாகனம் காற்று போன நிலையில் டிப்பர் வாகனத்தை விட்டு சாரதி தப்பியோடியுள்ளார். டிப்பர் வாகனத்தை மீட்ட பொலிசார் சாரதியை தேடி வருகின்றனர்.

# கிழக்கின் பழங்குடி மக்களின் காணிகளை வனத்துறையினர் அபகரிக்க திட்டமிடுவதாக குற்றச்சாட்டு



## வன பாதுகாப்புத் திணைக்கள அதிகாரிகள், பழங்குடி மக்களின் 13 குடிசைகளை தீயிட்டு கொளுத்தியதோடு, உணவுக்காக சேகரித்த பாசிப்பயறு, நிலக்கடலை மற்றும் நெல் ஆகியவற்றை எடுத்துச் சென்ற கொடுமை

கிழக்கு மாகாணத்தில் வசிக்கும் பழங்குடியின தமிழ் மக்கள் குழுவை இடம்பெயர்த்து அவர்களின் காணியை அபகரிக்க முயற்சிப்பதாக வன பாதுகாப்புத் திணைக்களம் மீது குற்றம் சாட்டப்பட்டுள்ளது.

வடக்கு மற்றும் கிழக்கில் உள்ள தமிழ் மக்களின் பாரம்பரிய காணிகளை வன பாதுகாப்புத் திணைக்களம் சூறையாடியுள்ளதாக தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் ஒப்புக்கொண்ட சில நாட்களுக்குப் பின்னர், இந்தத் திணைக்களம் மீதான குற்றச்சாட்டு வந்துள்ளது.

மட்டக்களப்பு வாகரை பிரதேச செயலகப் பிரதேசத்திற்குட்பட்ட தேக்கஞ்சேனை, நாவற்குளம் மற்றும் சம்பக்கலப்பை ஆகிய கிராமங்களில் சுமார் 70 ஆண்டுகளாக வசிக்கும் சுமார் 150 தமிழ் பேசும் பழங்குடி குடும்பங்களை தங்கள் காணியை விட்டு வெளியேறுமாறு வன பாதுகாப்புத் திணைக்கள அதிகாரிகள் தொடர்ந்து அச்சுறுத்தி வருவதாகக் குற்றம் சாட்டுகின்றனர்.

தேக்கஞ்சேனையில் வசிக்கும் பழங்குடியின மக்கள் குழு வன பாதுகாப்புத் திணைக்கள அதிகாரிகளின் அச்சுறுத்தல் குறித்து 7ம் திகதி அன்றைய தினம் வாகரை பிரதேச செயலாளருக்கு எழுத்துப்பூர்வமாகத் தெரிவிக்க நடவடிக்கை எடுத்ததாக பிரதேச ஊடகவியலாளர்கள் தெரிவிக்கின்றனர்.

கடிதத்தை ஏற்றுக்கொண்ட வாகரை பிரதேச செயலாளர், இந்த விடயத்தை ஆராய்ந்து உடனடியாக அறிக்கை சமர்ப்பிக்குமாறு பிரதேச கிராம அலுவலருக்கு அறிவுறுத்தியுள்ளார்.

தேக்கஞ்சேனை, நாவற்குளம் மற்றும் சம்பக்கலப்பை ஆகிய கிராமங்களில் வசிக்கும் பழங்குடி மக்கள், காட்டில் தேன் சேகரித்தல், நன்னீர் மீன்பிடி மற்றும் நெல், நிலக்கடலை மற்றும் மரவள்ளிக் கிழங்கு உள்ளிட்ட பயிர்ச்செய்கை ஊடாக வாழ்க்கையை நடத்தி வருகின்றனர்.



இந்த வருடத்தில் கடந்த ஆறு மாதங்களாக வன பாதுகாப்புத் திணைக்கள அதிகாரிகள் பல சந்தர்ப்பங்களில் தங்களை காணியைவிட்டு வெளியேறுமாறு அச்சுறுத்தியுள்ளதாக அவர்கள் குற்றம் சாட்டுகின்றனர்.

தேன் எடுக்க காட்டுக்குள் நுழைய விசேட அதிரடிப்படையினர் அனுமதிக்காமையால், தாங்கள் ஏற்கனவே வாழ்வாதார நெருக்கடியை எதிர்கொண்டுள்ளதாக அவர்கள் மேலும் கூறுகின்றனர்.

இதேபோன்ற பழங்குடி மக்கள் வசிக்கும் கல்லரிப்புச் சேனை நான்காம் கட்டை, மூன்றாம் கட்டை கிராமங்களில் பெப்ரவரி 2025 இல், சோதனை நடவடிக்கையில் ஈடுபட்ட வன பாதுகாப்புத் திணைக்கள அதிகாரிகள், பழங்குடி மக்கள் வாழ்ந்த 13 குடிசைகளை தீயிட்டு கொளுத்தியதோடு, அவர்கள் உணவுக்காக சேகரித்த பாசிப்பயறு, நிலக்கடலை மற்றும் நெல் ஆகியவற்றை எடுத்துச் சென்றதாகவும் பிரதேச ஊடகவியலாளர்கள் தெரிவிக்கின்றனர்.

இது தொடர்பாக வாகரை பொலிஸில் முறைப்பாடு செய்து நான்கு மாதங்கள் கடந்துள்ள போதிலும், எந்த பலனும் கிடைக்கவில்லை எனவும் அவர்கள் மேலும் கூறுகின்றனர்.

2012 முதல் வனப் பாதுகாப்பு மற்றும் வனச் சட்டங்களின் கீழ் கூகள் வரைபடங்களைப் பயன்படுத்தி மக்களால் பயன்படுத்தப்பட்ட ஏராளமான காணிகள் கையகப்படுத்தப்பட்டுள்ளதாக, போக்குவரத்து, நெடுஞ்சாலைகள், துறைமுகங்கள் மற்றும் சிவில் விமானப் போக்குவரத்து அமைச்சர் பிமல் ரத்நாயக்க அண்மையில் யாழ்ப்பாணத்தில், கூறியிருந்தார்.

கையகப்படுத்தப்பட்ட காணிகளை வன பாதுகாப்புத் திணைக்களம் ஆய்வு செய்து, காடுகளுக்கு தீங்கு விளைவிக்காத வகையில் மக்களுக்கு வழங்கும் எனவும் அமைச்சர் உறுதியளித்திருந்தார்.

வடக்கு மற்றும் கிழக்கில் உள்ள தமிழ் மக்களின் காணிகளை வலுக்கட்டாயமாக கையகப்படுத்துவது தொடர்பாக, முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க, 1985ஆம் ஆண்டில் வனப் பாதுகாப்புத் திணைக்களம் தன்வசம் உள்ள வரைபடத்தின்படி செயல்பட வேண்டும் என்ற கருத்தை வெளியிட்டிருந்தார்.

முப்படைகள், மகாவலி அபிவிருத்தி அதிகார சபை, சுற்றுலா அபிவிருத்தி அதிகாரச் சபை, தொல்லியல் திணைக்களம் மற்றும் வன பாதுகாப்புத் திணைக்களம் மற்றும் வனஜீவராசிகள் திணைக்களம் ஆகியவை வடக்கு மற்றும் கிழக்கில் உள்ள தமிழ் மக்களின் காணிகளை வலுக்கட்டாயமாக கையகப் படுத்துவதாக தொடர்ந்து குற்றம் சாட்டப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

# கனடா பீல் பிரதேச குடும்ப மன்றத்தின் 16 வது ஆண்டு விழா





**- சுலோச்சனா அருண்**

சொப்கா என்று அழைக்கப்படும் கனடாவில் கடந்த 16 வருடங்களாக இயங்கும் பீல் பிரதேச குடும்ப மன்றத்தின் ஆண்டு விழா சென்ற ஞாயிற்றுக் கிழமை மிசசாகா காவ்த்ரா வீதியில் உள்ள ஜான் போல் போலாந்து கலாச்சார மையத்தின் பார்வையாளர் மண்டபத்தில் சிறப்பாக நடைபெற்றது. முக்கிய சில பிரமுகர்களால் மங்கள விளக்கு ஏற்றி வைத்ததைத் தொடர்ந்து தமிழ்தாய் வாழ்த்து கனடிய தேசியப்பண் ஆகியன இசைக்கப்பெற்றன. அகவணக்கத்தைத் தொடர்ந்து வரவேற்பு நடனமும் வரவேற்பு உரையும் இடம் பெற்றன.

வரவேற்பு உரையை செல்வி றுவிங்கா ஸ்ரீசண்முகதாசன் மற்றும் அபிசேக் பிரபாகரன் ஆகியோர் நிகழ்த்தினர். “சொப்கா குடும்ப மன்றத்தில் அங்கத்தவராக இருப்பதால் என்ன நன்மைகள் கிடைக்கின்றன” என்ற தலைப்பில் தான் பெற்ற அனுபவங்களைக் குறிப்பிட்டு இளைய தலைமுறையினரான செல்வி கயூரி வேல்நாதன் உரையாற்றினார்.

தொடர்ந்து மன்றத் தலைவர் யாழினி விஜயகுமாரின் தலைமை உரையும், திரு. ஈசா பரா ஈசானந்தா, திவானி நாராயணமூர்த்தி ஆகியோரின் உரையும் இடம் பெற்றன. அதன்பின் முன்னாள் தலைவரும் தற்போதைய மன்ற ஆலோசகருமான குரு அரவிந்தன் அவர்களின் உரை இடம் பெற்றது.

அவர் தனது உரையில் இந்தப் 18 வருடங்களைக் கடந்து வருவதற்குக் காரணமான, இதை ஆரம்பித்து தலைமைதாங்கி நடத்திய திரு. பொன்குலேந்திரன், திரு. ஏ.யேசுதாசன், திருமதி. வாணி செந்தூரன் மற்றும் இளையதலைமுறையினரான தற்போதய தலைவர் யாழினி விஜயகுமாரையும் மற்றும் குலசேகரம் செல்லையா, குலரஜனி குலசேகரம் ஆகியோரையும் பாராட்டி உரையாற்றினார். மேலும் தனது காலத்தில்
சொப்பகா பெண் அங்கத்தவர்களுக்குச் சிறுகதைப் பயிலரங்கு நடத்தி அதன்பின் அவர்கள் எழுதிய “நீங்காத நினைவுகள்” என்ற சிறுகதைத் தொகுப்பைத் தொகுத்து வெளியிட்டிருந்ததையும், கனடாவில் வெளிவந்த 16 தமிழ் பெண் எழுத்தாளர்களின் முதலாவது சிறுகதைத் தொகுப்பு அதுதான் என்பதையும், அந்த நூல் கனடாவில் வரலாற்றுச் சாதனையை நிலைநாட்டி இருப்பதையும் நினைவு கூர்ந்தார்.

அடுத்து பிரதம விருந்தினரான சட்டத்தரணி செல்வி டிலானி மோகன் அவர்களின் உரை இடம் பெற்றது. அடுத்து முன்னாள் பொருளாளரும் மூத்த உறுப்பினருமான பாலசுப்பிரமணியம் அவர்களின் கடந்தகால பணியைப் பாராட்டி வைத்திய கலாநிதி மோகன் மற்றும் எழுத்தாளர் குரு அரவிந்தன் ஆகியோரால் கௌரவிக்கப்பட்டார்.

சிறியோர் நடனம், இளையோர் நடனம், கும்மி, கோலாட்டம், திரையிசைப் பாடல்கள், வீணை இசை போன்ற நிகழ்ச்சிகளைத் தொடர்ந்து இளைய தலைமுறைப் பெண்களால் நடிக்கப் பெற்ற நாட்டிய நாடகம் இடம் பெற்றது. கனடாவில் பிறந்து வளர்ந்த சுமார் 20 இளைய தலைமுறைப் பெண்கள் இதில் பங்கு பற்றி மிகச் சிறப்பாகத் தமிழில் உரையாடி நடித்திருந்தது பாராட்டுக்குரியது. இந்த நாடகத்தை குலரஜனி குலசேகரம் நெறிப்படுத்தி இருந்தார்.





செல்வன் அபிலாஸ் சந்திரமோகன் மற்றும் செல்வி நி-லானி கிருஸ்ணகுமார் ஆகியோர் நிகழ்ச்சியைச் சிறப்பாகக் கொண்டு நடத்தினர். மன்றச் செயலாளர் செல்வி தக்சா பாலநாதனின் நன்றி உரையைத் தொடர்ந்து வருகை தந்தோர்க்கு இரவு உணவும் வழங்கப்பட்டு, விழா இனிதே நிறைவடைந்தது.


# Thana Insurance Inc

## T20 INSURANCE

| AGE | | 25 | | 30 | | 35 | | 40 | | 45 | | 50 | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | M | F | M | F | M | F | M | F | M | F | M | F |
| 200K | T20 | 17 | 15 | 18 | 15 | 20 | 17 | 27 | 21 | 43 | 30 | 69 | 49 |
| 500K | T20 | 30 | 22 | 31 | 22 | 32 | 24 | 46 | 35 | 73 | 54 | 126 | 85 |
| 1MILL | T20 | 54 | 36 | 55 | 38 | 56 | 42 | 86 | 62 | 139 | 100 | 244 | 164 |

## PERMANENT LIFE INSURANCE (PREMIUM NEVER INCREASE)

| AGE | | 25 | | 30 | | 35 | | 40 | | 45 | | 50 | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | M | F | M | F | M | F | M | F | M | F | M | F |
| 200K | WL | 82 | 71 | 100 | 86 | 123 | 106 | 152 | 131 | 197 | 166 | 238 | 209 |
| 500K | WL | 192 | 164 | 232 | 202 | 295 | 251 | 368 | 316 | 480 | 407 | 587 | 513 |

## NON MEDICAL INSURANCE (PREMIUM NEVER INCREASE)

| AGE | | 45 | | 50 | | 55 | | 60 | | 65 | | 70 | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | M | F | M | F | M | F | M | F | M | F | M | F |
| 25K | WL | 38 | 34 | 47 | 40 | 55 | 49 | 76 | 75 | 106 | 84 | 148 | 105 |
| 50K | WL | 69 | 62 | 89 | 75 | 104 | 93 | 147 | 123 | 206 | 162 | 290 | 205 |
| 100K | WL | 133 | 118 | 172 | 144 | 202 | 179 | 289 | 241 | 406 | 319 | 475 | 405 |

## 20 YEARS TERM - NON MEDICAL INSURANCE

| AGE | | 40 | | 45 | | 50 | | 55 | | 60 | | 65 | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | M | F | M | F | M | F | M | F | M | F | M | F |
| 100K | T20 | 20 | 17 | 28 | 22 | 41 | 34 | 78 | 57 | 131 | 88 | 233 | 157 |
| 200K | T20 | 33 | 30 | 50 | 38 | 78 | 63 | 150 | 108 | 257 | 171 | 460 | 307 |

Thana Manickavasagar
Insurance Broker



THANA INSURANCE Inc.

Web : www.thana.ca
E-mail : thana7@gmail.com
Address : 80 Nashdene Road ,
unit D218,
Scarborough, ON,M1V 5E4

Cell : 416-728-5772
Office : 416-519-3896

"WE DO 100% ONLINE SERVICES,24/7."

இலங்கை செய்திகள்
Sri Lanka News

பு. கஜிந்தன்

# கடற்படையினருக்கு காணி அளப்பதற்கு அனுமதி வழங்க வேண்டாம்

## வடமராட்சி கிழக்கு பிரதேச செயலருக்கு அனுப்பப்பட்ட கடிதம்!


KIRUSHNAKOPAL KANAICHELVAN
MEMBER OF PRADESHIYA SABHA
POINT PEDRO PRADESHIYA SABHA - PULOLY



கடற்படையினருக்கு காணி அளப்பதற்கு அனுமதி வழங்க வேண்டாம் என வடமராட்சி கிழக்கு பிரதேச செயலருக்கு அனுப்பப்பட்ட கடிதம் தொடர்பாக அந்தப் பிரதேசத்தில் பல கேள்விகள் எழுந்துள்ளன.

சுண்டிக்குள பகுதியில் கடற்படையினருக்கு காணி அளப்பதற்கு அனுமதி வழங்க வேண்டாம் என வடமராட்சி கிழக்கு பிரதேச செயலருக்கு கடிதம் அனுப்பப்பட்டுள்ளது. பருத்தித்துறை பிரதேச சபை உறுப்பினர் கணைச்செல்வனால் இந்த கடிதம் அனுப்பி வைக்கப்பட்டது.

அந்த கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளதாவது, வடமராட்சி கிழக்கு பிரதேச செயலகத்தின் J/435 கிராம சேவகர் பிரிவே சுண்டிக்குள கிராமமாகும். இங்கு கடற்படையால் சில தினங்களாக நில அளவீடு செய்யப்பட்டு வருகிறது.

இது பற்றி தங்களுக்கு தெரியப்படுத்தப்பட்டதா என 07.07.2025 காலை 09.03 மணிக்கு தொலைபேசி வாயிலாக கேட்டிருந்தேன். அது வன ஜீவராசிகள் திணைக்களத்தின் எல்லைக்குள் இருக்கிறது அதற்கு எங்களிடம் அனுமதி பெற தேவையில்லை என தெரியப்படுத்தினீர்கள்.

அதையும் கடந்து கடற்படை அதிகாரிகளிடம் நாம் விவாதித்திருந்தோம். அது நில அளவையாக இருந்தாலும் சரி, நீர் அளவையாக இருந்தாலும் சரி அது பிரதேச செயலகத்திற்கு அல்லது பிரதேச சபைக்கு தெரியப்படுத்தி செய்ய வேண்டும். அதை ஏற்றுக் கொண்ட கடற்படை அதிகாரிகள் தாம் பிரதேச செயலகத்திற்கு அறிவித்து இந்த பணியை தொடர்வதாகவும் அது வரை நிறுத்தி வைப்பதாகவும் எம்மிடம் தெரியப்படுத்தினர்.

ஆகவே உங்களிடம் இது தொடர்பாக கடற்படை அதிகாரிகள் தெரியப்படுத்தும் போது நீங்கள் உடனே அனுமதியை வழங்காமல் பருத்தித்துறை பிரதேச சபை தவிசாளர், உறுப்பினர்கள் மற்றும் கிராம மட்ட பொது அமைப்பினருடன் கலந்து ஆலோசித்து இதற்கான அனுமதியை வழங்குமாறு கேட்டுக் கொள்கின்றேன் என குறிப்பிடப்பட்டுள்ளது.

# பேராசிரியர் ராஜ்சோமதேவாவினால் அடையாளப்படுத்தப்பட்ட பிரதேசமானது 2வது அகழ்வாராய்ச்சி பணிகளுக்கான பகுதியென பிரகடனம்!



செம்மணி மனிதப் புதை குழி அகழ்வின் இரண்டாவது கட்டத்தின் 13வது நாள் அகழ்வுப் பணிகள் இன்றையதினம் முன்னெடுக்கப்பட்ட நிலையில் இதுவரை 56 மனித எலும்புக்கூடுகள் அடையாளம் காணப்பட்டுள்ளதுடன் அவற்றில் 50 முழுமையாக அகழ் எடுக்கப்பட்டு நீதிமன்ற காவலுக்கு கையளிக்கப்பட்டுள்ளதாக சட்டத்தரணி ரணித்தா ஞானராஜா தெரிவித்துள்ளார்.




8ம் திகதி செவ்வாய்க்கிழமை அன்றையதினம் செம்மணி பகுதயில் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கையிலேயே அவர் இதனை தெரிவித்துள்ளார். அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில், ஏற்கனவே சந்தேகத்திற்கிடமான பகுதி என தொல்லியல் பேராசிரியர் ராஜ்சோமதுவாவினால் அடையாளமிடப்பட்ட பகுதி அகழ்வு ஆராய்ச்சி பணிகளுக்கான இரண்டாவது பிரதேசமாக நீதிமன்றத்தால் பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது.

அத்துடன் ஏற்கனவே முதலில் ஆரம்பிக்கப்பட்ட முதலாவது அகழ்வாராய்ச்சி பகுதியானது அகழ்வு ஆராய்ச்சி பணிகளுக்கான முதலாவது பகுதியாகவும் அடையாளப்படுத்துப்பட்டுள்ளது.

அடையாளப்படுத்தப்பட்ட இரண்டாவது பகுதியில் 3 மனித என்பு எச்சங்கள் துப்புரவாக்கப்பட்டிருக்கிறது. நாளைய தினத்திலிருந்து இலக்கமிடல் பணிகள் ஆரம்பமாகும்.

மனித எலும்புகளுடன் சேர்ந்த துணிகள் மற்றும் சப்பாத்து போன்ற பொருட்கள் அடையாளப்படுத்தப்பட்டு வைத்திருக்கப்பட்டுள்ளன. அவை இன்னமும் நிலத்திலிருந்து பிரித்தெடுக்கப்படவில்லை. அது பிரித்தெடுக்கப்பட்ட பின்னர் மேலதிக தகவல்கள் வழங்கப்படும் என்றார்.

# யாழ்ப்பாணம் — நீர்வேலி பகுதியில் இளம் குடும்பஸ்தர் தவறான முடிவெடுத்து உயிர்மாய்ப்பு!

8ம் திகதி அன்றையதினம் செவ்வாய்க்கிழமையன்று யாழ்ப்பாணம் - நீர்வேலி பகுதியில் இளம் குடும்பஸ்தர் ஒருவர் தூக்கில் தொங்கிய நிலையில் சடலமாக மீட்கப்பட்டுள்ளார். நீர்வேலி - அச்செழு சூரசிட்டி பகுதியை சேர்ந்த அன்ரன் சுதாகரன் (வயது 28) என்ற 2 பிள்ளைகளின் தந்தையே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

இது குறித்து மேலும் தெரியவருகையில், குறித்த நபருக்கும் அவரது மனைவிக்குமிடையே கடந்த 2ஆம் திகதி முரண்பாடு ஏற்பட்ட நிலையில் மனைவியை தாக்கியுள்ளார். இதனால் காயமடைந்த மனைவி கோப்பாய் வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று 4ஆம் திகதி வீடு திரும்பிய நிலையில் தாயார் வீட்டிற்கு சென்று அங்கிருந்துள்ளார்.

இதனால் மன விரக்தியடைந்த கணவன் தவறான முடிவெடுத்து தூக்கிட்டு உயிர்மாய்த்துள்ளார். அவரது சடலம் மீதான மரண விசாரணைகளை திடீர் மரண விசாரணை அதிகாரி ஆ.ஜெயபாலசிங்கம் மேற்கொண்டார். உடற்கூற்று பரிசோதனைகளின் பின்னர் சடலம் உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டது.

# யாழ்ப்பாணம் செம்மணியில் தோண்ட தோண்ட வெளிவரும் எலும்புக்கூடுகள்

## பல்வேறு தரப்பினரும் அதிர்ச்சியில்!



யாழ்ப்பாணம் செம்மணி சித்தப்பாத்தி இந்து மயானத்தில் தொடர்ச்சியாக அகழ்வு பணிகள் முன்னெடுக்கப்பட்டு வரும் நிலையில் அங்கு அடையாளம் காணப்படும் மற்றும் மீட்கப்படும் எலும்புக்கூடுகளின் எண்ணிக்கை நாளுக்கு நாள் அதிகரித்த வண்ணம் காணப்படுகின்றமை மக்கள் மத்தியில் அச்சத்தையும் அதிர்ச்சியையும் ஏற்படுத்தியுள்ளது.

அந்தவகையில் இரண்டாவது கட்டத்தின் 13வது நாள் அகழ்வுப் பணிகள் 7ம் திகதி அன்றையதினம் திங்கட்கிழமை முன்னெடுக்கப்பட்டன. அந்தவகையில் 56 எலும்புக்கூடுகள் இதுவரை அடையாளம் காணப்பட்டுள்ளன.





அத்துடன் 50 எலும்புக்கூடுகள் மீட்கப்பட்டுள்ளன.

யாழ்ப்பாணம் நீதிவான் ஏ.ஏ.ஆனந்தராஜா முன்னிலையில், தொல்லியல் துறை பேராசிரியர் ராஜ்சோமதேவா அவர்களின் குழுவின் பங்கேற்போடு இந்த அகழ்வுப் பணிகள் இன்றும் முன்னெடுக்கப்பட்டது.

தொல்லியல் துறை பேராசிரியர் ராஜ்சோமதேவாவினால் அடையாளப்படுத்தப்பட்ட பகுதியிலும் எலும்புக்கூடுகள் மீட்கப்பட்டுள்ளன. அந்த எலும்புக்கூடுகளானது சிக்கலான நிலையில் காணப்படுகிறது.

மேலும் முறைப்பாட்டாளரான குறித்த மயானத்தின் நிர்வாகத்தில் உள்ள திரு.கிருபாகரன், சட்டத்தரணி க.சுகாஷ், சட்டத்தரணி ரணித்தா ஆகியோர் இன்றையதினம் புதைகுழியை பார்வையிட்டனர்.

குறித்த புதைகுழி விவகாரமானது சர்வதேச ரீதியில் மிகப்பெரும் அதிர்வலைகளை ஏற்படுத்தியிருந்த நிலையில், அதற்கு நீதி வேண்டி பல்வேறு நாடுகளிலும் போராட்டங்கள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

# தற்காலிகமாக இடைநிறுத்தப்பட்ட செம்மணி அகழ்வுப் பணி!

செம்மணி - சித்துபாத்தி மனிதப் புதைகுழி அகழ்வுப் பணிகள் தற்காலிகமாக நிறுத்தப்பட்டுள்ளன.

மீண்டும் எதிர்வரும் 21ஆம் திகதி அகழ்வு பணிகளை ஆரம்பிப்பதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

24 நாட்கள் நடைபெற்ற முதலாம் மற்றும் இரண்டாம் கட்ட அகழ்வு பணிகளில், தடயவியல் அகழாய்வுத்தளம் ஒன்றில் 63 மனித எலும்புக்கூடுகளும், தடயவியல் அகழாய்வுத்தளம் இரண்டில் 2 மனித எலும்புக்கூடுகளுமாக மொத்தமாக 65 மனித எலும்புக்கூடுகள் முழுமையாக அகழ்ந்து எடுக்கப்பட்டுள்ளன.

யாழ்ப்பாணம் - செம்மணி சித்துபாத்தி இந்து மயான மனிதப் புதைகுழியின் அகழ்வு பணிகள் யாழ்ப்பாண நீதவான் நீதிமன்ற நீதிபதி ஏ.ஏ.ஆனந்தராஜாவின் முன்னிலையில், தொல்லியல் துறை பேராசிரியர் ராஜ்சோமதேவா, சட்டவைத்திய அதிகாரி செல்லையா பிரணவன் ஆகியோரின் பங்கேற்போடு முன்னெடுக்கப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

இலங்கை செய்திகள் Sri Lanka News

# ஈழத் தமிழரின் விடுதலைப் போராட்டம்: இணையற்ற ஒரு வரலாற்று ஆவணப் பதிவு



## தாழ்விலிருந்து எழுச்சிக்கு

20ம் நூற்றாண்டின் பிற்பகுதியில் உலகம் சாகசங்களுக்கும் சோதனைகளுக்கும் இடையே சுழலும்போது, இந்திய பெருங்கடலின் நடுவே அமைந்த சிறிய தீவிலொன்று - இலங்கை - அதன் வரலாற்றின் மிகக் கொடூரமான அதிகாரத்தை எழுதத் தொடங்கியது. அங்கு வாழும் தமிழர் எனப்படும் ஒரு பழமையான இனத்தின் மீது, சிங்கள இனவாத அரசு கட்டமைப்பாக நடத்திய இனஅழிப்பு, அடக்குமுறை மற்றும் நியாயத்தைப் புதைத்த பாசிசப் போக்குகள் வரலாற்றில் கருப்புப் பக்கமாக பதிந்தன.


இந்த நிலைமையில் இருந்து தமிழர் உருவாக்கிய தமிழீழ விடுதலைப் புலிகள் (LTTE) என்ற அமைப்பு, ஒவ்வொரு அடக்குமுறைக்கும் எதிராக, ஒவ்வொரு இழிவுக்கும் பதிலளிக்கும் விதமாக, தனது உணர்வுப் போரில் அடையாளமாயிற்று. இந்தக் கட்டுரை, அந்த விடுதலைப் போரின் ஆழமும், நியாயமும், அதன் தாக்கங்களும் பற்றியதொரு வரலாற்று ஆவணமாக விளங்குகிறது.

## போரின் நீதி: ஒரு தேசிய இனத்தின் உழைப்பு

ஒவ்வொரு விடுதலைப் போராட்டத்திலும், நீதிக்கான அடிப்படை கோரிக்கை முதன்மையாகவே விளங்கும். ஈழத் தமிழர்கள் எழுச்சி அடைந்தது, ஏற்றத்தாழ்வின்றி வாழும் உரிமைக்காக, தங்களின் மொழி, பண்பாடு, மதம், வாழ்க்கைமுறை ஆகியவை மதிக்கப்பட வேண்டுமென்ற அடிப்படையில் இருந்தது.

1948ல் சுதந்திரம் பெற்ற இலங்கை, தமிழர்களுக்கு அரசியலிலும், கல்வியிலும், வேலைவாய்ப்பிலும் வாய்ப்புகளை மறுத்தது. 1956ஆம் ஆண்டு "மொழிச் சட்டம்", தமிழரை இரண்டாம் நிலை குடிமக்களாக்கியது. இதிலிருந்து தொடங்கியது அடக்குமுறை அரசின் பாசிச நோக்கங்களும், தமிழர்களின் எதிர்ப்பும்.








## தமிழீழ விடுதலைப் புலிகள் - ஒரு சக்தியாக எழுச்சி பெற்றதுய

1970களில் உருவான தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பு, இராணுவ வழியே விடுதலையை நோக்கிய உணர்வுப் போரின் தூணாக இருந்தது. அதன் தொடக்கமே யுத்தம் அல்ல. தமிழீழ அரசியல் தீர்வை நாடி அமைதிப் பேச்சுவார்த்தைகளில் ஈடுபட்டதைப் போல, அரசியல் வழிமுறைகள் தோல்வியுற்ற பிறகே ஆயுதமே ஒரே வழியாகத் தோன்றியது.

கரும்புலிகள், கடற்புலிகள், வான்புலிகள் எனப் படைப்பிரிவுகள் உருவாக்கப்பட்டன. உலகில் எந்த சுயமாட்சி நாடாகாத இயக்கமும் அத்தனை தொழில்நுட்ப ரீதியாக நவீனமயமான, கட்டமைப்பான, தளபதி வழிநடத்தலில் நேர்த்தியாக இயங்கும் ராணுவ அமைப்பை உருவாக்கவில்லை.

## உயிராயுதத்தின் அவசியம்: ஏன் ஆயுதமே வழியானது?

ஏற்கெனவே நவீன ஆயுதங்களும், புலனாய்வுப் பிணையங்களும், சர்வதேச ஆதரவும் பெற்ற இலங்கை அரசை எதிர்கொள்ள வேண்டிய நிலைமையில், உயிராயுதம் தவிர்க்க முடியாத தற்காப்புப் பூஜ்ஜியம் ஆனது.

அரசு என்ற போர்வையில் இன அழிப்பு நடத்தும் ஒரு கட்டமைப்பை எதிர்த்துப் போராடும் ஒரு மக்கள் தங்களைத் தாங்களே பாதுகாக்க தற்காப்புச் சட்டத்துக்கேற்ப தங்களுக்கான ராணுவத்தையும் அரசையும் உருவாக்கியது.

## பிரமாண்ட கட்டமைப்புகள்: ஒரு தேசத்தின் வடிவம்

தமிழீழம் ஒரு இயக்கமாக மட்டும் இல்லை. அது தனிப் பேரரசாக அமைந்த ஒரு தேச வடிவமாக இருந்தது:

- தமிழீழ நீதித்துறை
- நிதி அமைப்பு மற்றும் வருவாய் துறை
- கல்வித் துறை (தமிழீழ பொது பரீட்சைகள்)
- மருத்துவ அமைப்புகள்
- புலனாய்வுத் துறை (TIS)
- பெண்கள் பாசறைகள்
- இளைஞர் இயக்கங்கள்
- ஈழத் தேசியக் கொடி, தேசிய நாணயம், தேசிய மரியாதை வழிபாடுகள்

இவை அனைத்தும் தமிழீழ விடுதலைப் போராட்டத்தின் ஒழுங்கமைந்த ஒரு நிர்வாகத்தை உலகுக்கு நிரூபித்தன.

## தளபதிகள்: போரின் புலவர்கள் ஆகப் பணியாற்றினர்

தமிழீழ விடுதலைப்புலிகளுக்கு 70-க்கும் மேற்பட்ட தளபதிகள் இருந்தனர். ஒவ்வொருவரும் ஒரு போரியல் மேதை.

- லெப் கேணல் திலீபன்
- கேணல் சங்கர்
- கேணல் சூசை
- கேணல் வேலாயுதம்
- கேணல் பாஸ்கரன்
- கேணல் கிருமி (கேணல் கிட்டு)
- கேணல் கண்ணன்
- கேணல் ருபன்
- கேணல் சங்கர் (வைத்திலிங்கம் சொர்ணலிங்கம்)
- கேணல் ரமணன்
- தமிழீழ வான் படைத் தளபதி கலிங்கன்

இவர்கள் ஒவ்வொருவரும் புலிகள் இயக்கத்தின் உள்நோக்கங்களையும், துடிப்பையும் ஒளிக்கட்டாத போரியல் அறிவியலாக மாற்றியவர்கள்.

## உலக வரலாற்றில் புலிகள் இயக்கத்தின் தாக்கங்கள்

தமிழீழ விடுதலைப்புலிகள் உலக ராணுவ வரலாற்றில்:

மிகச் சிறந்த நிலத்தடிப்படையிலான யுத்தவியல் புள்ளிகளை உருவாக்கிய இயக்கம்.

படகுகள் மூலம் கடல் தாக்குதல், ஊடுருவும் கரும்புலி தாக்குதல்கள், சர்வதேச தூதரகங்களைச் சீர்குலைக்கும் திறன்கள் ஆகியவையின் மூலம் புதிய நிலைகளில் சிக்கலான போர்களைக் கொண்டுவந்த இயக்கம்.

சிங்கள அரசு ICRC-க்கும் UN-க்கும் கூட தெரிவிக்க முடியாத பாதுகாப்பு உள்ளடக்கிய இடங்களில் சொந்தமாகத் தங்கள் ராணுவ ஆளுமைகளை நிறுவிய அமைப்பு.

தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பு ஓர் பயங்கரவாத அமைப்பாக அல்ல. அது தன் மக்கள் அடங்கிய தேசத்தை பாதுகாக்க உருவான, போரால் பிறந்த ஒரு அரசாங்கம். உலகம் ஒருபுறம் இனச்சித்துவாத அரசுகளை மன்னிக்கும் போது, மறுபுறம் இனத்தையும் அதன் உரிமையையும் காக்க முனைந்தவர்களை நியாயம் கேட்காமல் தண்டித்தது.

இன்று இளைய தலைமுறையினர் உண்மை வரலாற்றை அறிய வேண்டிய நேரம் இது. தமிழீழ விடுதலைப் போராட்டம் ஒரு நேர்த்தியான, ஒழுங்குபடுத்தப்பட்ட விடுதலை இயக்கம். அது ஒரு இனத்தின் உயிர்கொடை.

தமிழர்களின் அடையாளம், தத்தம் நாடு, தத்தம் மொழி, தத்தம் இருப்பிடம் என்பவை மட்டுமல்ல.


தத்தம் போரின் உண்மையும், வீரமும், மரியாதையும் இந்நேரத்தில் இளையருக்குப் பதிய வேண்டியதொரு வரலாற்று கடமை.

**- எழுதியவர்: ஈழத்து நிலவன் (05-07-2025)**

---

**Tamilthakaval.org**

**ஒரு இலவச சேவை -- A Free Service**




**இவ் இணையத்தளம் உலகெங்கும் பரந்து வாழும் ஈழத்தமிழ் மக்கள் தங்களுடைய உற்றார், உறவினர்களின் பிரிவுத் துயரச்செய்திகள், நினைவஞ்சலிகள் முதலியவற்றை எப்பொழுதும் ஏவ்வித சந்தாவுமின்றி இலவசமாகப் பிரசுரித்து அறிவித்தல் தரும் நோக்கத்தில் தாபிக்கப்பட்ட தொன்றாகும்.**
**மேலும் பல்வேறு முக்கிய செய்திகளைக்கூட பகிர்ந்து கொள்ளும் வசதிகளும் இதில் தரப்பட்டுள்ளன.**
**செய்திகளைப் பிரசுரிப்பதற்கான விண்ணப்ப படிவமும், நிரப்புவதற்கான விதிமுறைகளும் விவரமாக இணையத்தளத்தில் இணைக்கப்பட்டுள்ளன.**
**உங்கள் வசதிக்கமைய செய்திகளை "info@tamilthakaval.org" என்ற மின்னஞ்சல் முகவரிக்கும் அனுப்பிவைக்கலாம்.**
**மேலதிக தகவல்களுக்கு '1-866-300-1765' என்ற தொலைபேசி இலக்கத்தில் எம்முடன் தொடர்பு கொள்ளலாம்.**

**இந்த இணையத்தளத்தை சில தொண்டர்கள் ஒரு சமூக சேவையாக கருதி பொறுப்புடன் நன்கு நடாத்தி வருகின்றார்கள். இவர்கள் இப்பணியை வெற்றிகரமாக தொடருவதற்கு ஈழத்தமிழர்களாகிய உங்களின் ஆதரவு மிகவும் இன்றியமையாதது. உங்களால் இயன்றவரை செய்திகளை உடனுக்குடன் தெரிவித்து இந்த இணையத்தளத்தில் பிரசுரிப்பதற்கு உதவி செய்து இச்சமூக சேவையை மேன்மேலும் மேன்மைபடுத்த உதவுமாறு உங்கள் அனைவரையும் அன்புடன் கேட்டுக் கொள்கிறோம்.**

# செம்மணியும் ஐநாவும்

## - யாழ்ப்பாணத்திலிருந்து நிலாந்தன் எழுதுகின்றார் -



அணையா விளக்கு போராட்டம் மனித உரிமைகள் ஆணையாளரை செம்மணி வளைவுக்கு கொண்டு வந்தது. போராட்டத்தின் கோரிக்கைகள் அடங்கிய பட்டயத்தை அவர் பெற்றுக் கொண்டார்.

அக்கோரிக்கைகளில் முதலாவதாகக் காணப்படுவது செம்மணியும் உட்பட மனிதப் புதைகுழிகளை அகழ்ந்து ஆராயும் பொழுது ஐநா மனித உரிமைகள் ஆணையாளர் அலுவலகத்தின் மேற்பார்வையையும் நிபுணத்துவ உதவியையும் கேட்டிருக்கிறது. ஐநா மனித உரிமைகள் பேரவைக்குள் இயங்கும் ஓர் அலுவலகமானது இலங்கையை பொறுப்புக்கூறவைப்பதற்கு தேவையான சான்றுகளையும் சாட்சிகளையும் கடந்த நான்கு ஆண்டுகளுக்கு மேலாக சேகரித்து வருகிறது. அந்த அலுவலகத்தின் மேற்பார்வையையும் நிபுணத்துவ உதவியையும் கேட்டிருப்பதன் மூலம் அணையா விளக்கு போராட்டமானது மனிதப் புதை குழிகள் தொடர்பான விசாரணைகளுக்கு அனைத்துலக பொறிமுறையையும் நிபுணத்துவத்தையும் கோரி நிற்கின்றது. அதாவது, உள்நாட்டு பொறிமுறையை நம்பவில்லை என்று பொருள்.

ஐநாவில் *2021* ஆம் ஆண்டிலிருந்து தொடங்கி சுமார் நான்கு ஆண்டுகளுக்கு மேலாக ஒரு அலுவலகம் இயங்கி வருகிறது. அந்த அலுவலகம் ஐநா மனித உரிமைகள் ஆணையாளரின் அலுவலகத்துக்குள் இயங்கிக் கொண்டிருக்கிறது. அதன் பெயர் "ஸ்ரீலங்காவை பொறுப்புக் கூற வைப்பதற்கான நிகழ்ச்சி திட்டம்" (OSLAP) இதன்படி சான்றுகளையும் சாட்சிகளையும் அவர்கள் சேகரித்து வருகிறார்கள். ஆனால் அந்த அலுவலகத்தைச் சேர்ந்தவர்கள் இலங்கைக்குள் வருவதற்கு இன்றுவரை விசா வழங்கப்படவில்லை. ஐநா மனித உரிமைகள் ஆணையாளருடைய வருகைக்குப்பின் அந்த அலுவலகத்தைச் சேர்ந்தவர்களுக்கு விசா வழங்கப்படுமா?

ஆனால் தன்னுடைய இலங்கை வருகையின் இறுதியில் ஐநா மனித உரிமைகள் ஆணையாளர் ஊடகங்கள் மத்தியில் ஆற்றிய உரையில் அதாவது அவருடைய உத்தியோகபூர்வ நிலைப்பாட்டில், அவர் உள்நாட்டுப் பொறிமுறையை திட்டவட்டமாக நிராகரிக்கவில்லை. அனைத்துலக தராதரங்களின் அடிப்படையில் உள்நாட்டுப் பொறிமுறையை பலப்படுத்தும் உள்நோக்கமே அவரிடம் இருக்கின்றது என்று ஊகிக்கத்தக்க விதத்தில்தான் அவருடைய உத்தியோகபூர்வ நிலைபாடுகள் காணப்படுகின்றன.

அப்படியானால் கடந்த நான்கு ஆண்டுகளுக்கு மேலாக ஐநாவில் இயங்கி வரும் சான்றுகளையும் சாட்சிகளையும் சேகரிக்கும் அந்த அலுவலகத்தின் பொருள் என்ன?

சாட்சிகளையும் சான்றுகளையும் சேகரிப்பதற்கான அந்த அலுவலகத்தில் அடிப்படைப் பலவீனங்கள் உண்டு. இப்படி ஒரு பொறிமுறை உருவாக்கப்படவிருக்கிறது என்பதனை ஊகித்து *2021* ஆம் ஆண்டு ஜெனிவா கூட்டத்தொடரை முன்னிட்டு சிவில் சமூகங்கள் தமிழ்த் தேசிய நிலைப்பாட்டைக் கொண்ட கட்சிகளை ஒன்றிணைத்தன. மூன்று கூட்டங்களை தொடர்ச்சியாக நடத்தியதன் விளைவாக ஒரு கூட்டுக் கடிதம் *2021* ஜனவரி மாதம் ஐநாவுக்கு எழுதப்பட்டது.

அந்தக் கடிதத்தில் இரண்டு முக்கிய விடயங்கள் கேட்கப்பட்டன. ஒன்று, பொறுப்புக் கூறலை ஐநா. மனித உரிமைகள் பேரவையிடமிருந்து ஐநா பொதுச் சபை எடுத்துக் கொள்ள வேண்டும். அதைப் பின்னர் அனைத்துலக குற்றவியல் நீதிமன்றங்களிடம் பாரப்படுத்த வேண்டும்.

இரண்டாவது கோரிக்கை, மேற்சொன்ன பொறிமுறையானது குறிப்பிட்ட கால எல்லைக்குள் அதன் செயற்பாடுகளை முடிக்கும் விதத்தில் வினைத்திறன் மிக்கதாக இருக்க வேண்டும். அந்த பொறிமுறைக்குரிய செயற்படு காலத்தை *6* மாதங்கள் அல்லது ஒரு ஆண்டாகக் குறைக்கும்படி கஜேந்திரகுமார் வலியுறுத்தினார். அக்கூட்டுக் கடிதம் அனுப்பப்பட்ட பின் தமிழரசுக் கட்சி அந்தக் கடிதத்திற்கு எதிரான செயற்பாடுகளில் ஈடுபட்டதாக தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி அப்பொழுது குற்றம் சாட்டியது.

அக்கூட்டத் தொடரின் முடிவில் நிறைவேற்றப்பட்ட ஐநா தீர்மானம் 46/1 இன்படி ஒரு பொறிமுறை உருவாக்கப்பட்டது. ஆனால் அது தமிழ்த் தரப்பு கேட்டிருந்த ஒரு பொறிமுறை அல்ல. அதில் பின்வரும் அடிப்படைப் பலவீனங்கள் இருந்தன. முதலாவதாக, அது ஐநா மனித உரிமைகள் ஆ ணை ய ா ள ரு டை ய அலுவலகத்துக்கு உள்ளே இயங்கும் ஒரு நிகழ்ச்சி திட்டம்தான். அதாவது கூட்டுக் கடிதத்தில் கேட்டதுபோல பொறுப்புக் கூறலை அவர்கள் மனித உரிமைகள் பேரவைக்கு வெளியே கொண்டு போகவில்லை. இரண்டாவது அதற்கு ஆறு மாத அல்லது ஒரு வருட கால நிர்ணயம் செய்து அதன் நடவடிக்கைகள் வேகப்படுத்தப்படவில்லை. பதிலாக இன்றுவரை அது இயங்குகின்றது.

இப்படித்தான் இருக்கிறது தமிழ் மக்கள் பிரதிநிதிகள் கூட்டாக முன்வைக்கும் கோரிக்கைகளுக்கு ஐநாவின் பதில் வினை. அதாவது தமிழ் மக்கள் கேட்டது போல வினைத்திறன் மிக்க, முழு அளவுக்குப் பொறுப்புக் கூறவல்ல ஒரு கட்டமைப்பு உருவாக்கப்படவில்லை. ஐநா மனித உரிமைகள் பேரவைக்கு வெளியே விவகாரம் எடுத்துச் செல்லப்படவும் இல்லை.

அது தமிழ் மக்கள் கேட்டதை விட, எதிர்பார்த்ததை விட பலவீனமான ஒரு பொறிமுறை. எனினும் அப்பொறிமுறையை சேர்ந்த மனித உரிமை அலுவலர்கள் நாட்டுக்குள் வந்து சாட்சிகளையும் சான்றுகளையும் சேகரிப்பதற்கும் உறுதிப்படுத்துவதற்கும் கடந்த நான்கு ஆண்டுகளாக இலங்கை அரசாங்கங்கள் விசா வழங்கவில்லை.

இப்படிப்பட்டதோர் அரசியல் மற்றும் ராஜதந்திர பின்னணிக்குள் ஐநா மனித உரிமைகள் ஆணையாளர் இலங்கை மீது அழுத்தங்களைப் பிரயோகிக்கும் விதத்தில் வார்த்தைகளைப் பிரயோகிக்காமல் விட்டது, அவருடைய அலுவலகத்துக்குள் இயங்கும் அந்தப் பொறிமுறையை அவரே பலவீனப்படுத்துவதாக அமையுமா?

அது ஒரு பலவீனமான கட்டமைப்புத்தான். எனினும் அந்த அலுவலகமானது நீதிக்கான தமிழ் மக்களின் போராட்டத்துக்குள்ள அனைத்துலகப் பரிமாணத்தை மேலும் பலப்படுத்தியிருக்கிறது. ஏனென்றால் சான்றுகளையும் சாட்சிகளையும் சேகரிப்பது என்பது இப்பொழுது ஓர் அனைத்துலக நடைமுறையாக மாற்றப்பட்டிருக்கிறது. எனவே சான்றுகளையும் சாட்சிகளையும் சேகரிக்கும் விடயத்தில் தமிழ்மக்கள் அனைத்துலக சமூகத்தின் ஆதரவைப் பெறுவதற்குத் தேவையான அனைத்துலக நிலைமைகள் இப்பொழுது பலமாக உள்ளன.

மேலும் அந்த அலுவலகம் சேகரித்துவரும் சான்றுகள் மற்றும் சாட்சியங்களின் அடிப்படையில்தான் அண்மை ஆண்டுகளில் அமெரிக்காவிலும் கனடாவிலும் பிரித்தானியாவிலும் குறிப்பிட்ட சில படைப் பிரதானிகளுக்கும் படை அலுவலர்களுக்கும் எதிராக பயணத் தடைகள் விதிக்கப்பட்டுள்ளன.

இங்கேயும் தமிழ்த் தரப்பு நோக்கு நிலையில் இருந்து ஒரு கேள்வி உண்டு. அந்தப் படைப்பிரதானிகள் தாங்களாக அதைச் செய்யவில்லை அவர்களுக்கு உத்தரவிட்ட, அதற்கு வேண்டிய அரசியல் தீர்மானத்தை எடுத்த, அரசுக் கட்டமைப்பு உண்டு. அந்தக் கட்டமைப்பைக் குற்றஞ்சாட்டும் ஒரு நிலை இன்று வரை ஐநாவிலோ அல்லது மேற்கு நாடுகளின் ராஜதந்திர வட்டாரங்கள் மத்தியிலோ ஏற்படவில்லை. அதாவது இனப்படுகொலையைச் செய்தது ஒரு அரசுக் கட்டமைப்பு. இன அழிப்பு என்பது அந்த அரசுக் கட்டமைப்பின் கொள்கையாக இருந்தது என்ற அடிப்படையில் அந்த அரசுக் கட்டமைப்பைத் தான் விசாரிக்க வேண்டும். அதற்கு எதிராகத்தான் நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும் என்று தமிழ் தரப்பு கேட்கின்றது. ஆனால் அப்படி ஒரு வளர்ச்சி ஐநாவிலும் ஏற்படவில்லை, மேற்கு நாடுகளின் கொள்கை வகுப்பாளர்கள் மத்தியிலும் ஏற்படவில்லை.

எனினும் நீதிக்கான தமிழ் மக்களின் போராட்டத்தில் சான்றுகளையும் சாட்சிகளையும் சேகரிப்பதற்கான ஒரு கட்டமைப்பு அது தமிழ் மக்கள் கேட்டதை விட பலவீனமானது என்ற போதிலும் அனைத்துலக அளவில் ஏற்றுக்கொள்ளப்பட்டது என்பது ஒரு முன்னேற்றம்தான். இ ப் ப டி ப் ப ட் ட தோ ர் பின்னணியில்தான் செம்மணியும் உள்ளிட்ட எல்லா விடயங்களிலும் தமிழ் மக்கள் சான்றுகளையும் சாட்சிகளையும் சேகரிப்பதற்கும் பகுப்பாய்வு செய்வதற்கும் பொருத்தமான கட்டமைப்புகளை உருவாக்க வேண்டியுள்ளது.

செம்மணி தொடர்பில் மட்டுமல்ல தமிழ் மக்களிடம் பெரும்பாலான விடயங்களில் விஞ்ஞான பூர்வமாகத் தொகுக்கப்பட்ட தரவுகள் உண்டா? தன்னை பலிகடா ஆக்கிய தனது உயர் அதிகாரிகளுக்கு எதிராக ஒரு ராணுவ சார்ஜன் சொன்ன சாட்சியத்தை வைத்துதான் செம்மணியில் நானூறுக்கும் குறையாத உடல்கள் புதைக்கப்பட்டிருக்கலாம் என்று சந்தேகிக்கப்படுகிறது. இந்த விடயத்தில் செம்மணியில் எத்தனை பேர் புதைக்கப்பட்டார்கள் என்பதனை அதற்குரிய துறை சார் நிபுணர்கள் கண்டுபிடிக்கட்டும். அதேசமயம், செம்மணியில் புதைக்கப்பட்டிருக்கலாம் என்று சந்தேகிக்கப்படுகின்ற அப்பகுதியைச் சேர்ந்தவர்கள் தொடர்பான தரவுகளைத் திரட்ட வேண்டியது தமிழ் மக்களுடைய பொறுப்பு. அவ்வாறான தரவுகளைத் திரட்டும் கட்டமைப்புகள் எத்தனை தமிழ் மக்கள் மத்தியில் உண்டு?

ஆயுத மோதல்கள் முடிவுக்கு வந்து *16* ஆண்டுகளின் பின்னரும், மிகப் பலமான ஒரு புலம்பெயர்ந்த சமூகத்தைக் கொண்டிருந்த போதிலும், தமிழர்களால் ஏன் அவ்வாறான தரவுகளைத் திரட்டும் பொதுக் கட்டமைப்புக்களை உருவாக்க முடியாதிருக்கிறது? குறைந்தபட்சம் டிஜிட்டல் பரப்பிலாவது அவ்வாறு ஒரு பொதுவான தகவல் திரட்டும் வேலையைத் தொடங்கலாம்.

இன அழிப்புக்கு எதிரான நீதியைக் கோரும் போராட்டம் என்று கடந்த பதினாறு ஆண்டுகளாகச் சொல்லிக் கொண்டிருக்கிறோம். நீதிக்கான போராட்டத்தை எங்கேயிருந்து தொடங்க வேண்டும்? குற்றச் செயல்களை, குற்றவாளிகளை நிரூபிப்பதற்குத் தேவையான தகவல்களைத் திரட்டுவதில் இருந்துதான் அதைத் தொடங்க வேண்டும். அதற்குரிய கட்டமைப்புகள் எத்தனை தமிழ் மக்கள் மத்தியில் உண்டு?

போர்க்காலத்தில் காணாமல் ஆக்கப்பட்டவர்கள் அல்லது கைது செய்யப்பட்டவர்கள் தொடர்பான விடையங்களை இப்பொழுதும் ஞாபகத்தில் வைத்திருக்கும் முதிய உறவினர்கள் கிராமங்கள் தோறும் உண்டு. அவ்வாறு உறவினர்கள் தந்த தகவல்களின் அடிப்படையில்தான் செம்மணிக்கு அருகே நாவற்குழியில் *1996* ஆம் ஆண்டு ஒரு சுற்றிவளைப்பின்போது கைது செய்யப்பட்டுக் காணாமல் ஆக்கப்பட்ட 24தமிழரர்களுக்கு நீதி கேட்டு வழக்கு தொடுக்கப்பட்டது. அந்த வழக்கின் விளைவாகத்தான் அந்த வழக்கைத் தொடுத்த சட்டவாளர் கலாநிதி குருபரனுக்கு எதிராக நிர்ப்பந்தங்கள் பிரயோகிக்கப்பட்டு முடிவில் அவர் பல்கலைக்கழகத்தில் இருந்து நீங்கினார். நாட்டை விட்டும் சிறிது காலம் விலகியிருந்தார். இப்பொழுது அந்த வழக்கு ஒரு தென்னிலங்கை சட்டவாளரால் முன்னெடுக்கப்படுகின்றது. நிலைமாறு கால நீதியின் கீழ் உள்நாட்டு நிதியின் விரிவை பரிசோதிக்க முற்பட்ட வழக்குகளில் அதுவும் ஒன்று.

இப்பொழுதும்கூட அதுதான் நிலைமை. உள்நாட்டுப் பொறி முறையே பொருத்தமானது என்று கூறும் அரசாங்கத்துக்கும் உள்நாட்டுப் பொதுமுறையை அனைத்துலக தராதரத்துக்கு பலப்படுத்த வேண்டும் என்று கூறும் ஐநா அதிகாரிகளுக்கும் உள்நாட்டுப் பொறிமுறையின் இயலாமையை நிரூபிக்கத் தேவையான வழக்குகளைத் தமிழ் மக்கள் தொடுக்கலாம்.

கிரிசாந்தியின் விடயத்தில் அப்போது இருந்த அரசாங்கம் தான் நீதியாக நடந்து கொள்வதாகக் காட்டிக்கொள்ள முற்பட்டதன் விளைவாக, அதனால் பாதிக்கப்பட்ட ஒரு படை ஆள் அரசுக்கு எதிராக வாக்குமூலம் வழங்கினார். அந்த வாக்குமூலம்தான் செம்மணியை வெளியே கொண்டு வந்தது. எனவே உள்நாட்டு நீதியின் விரிவைப் பரிசோதிப்பதற்கும் உள்நாட்டு நீதியின் போதாமைகளை உணர்த்துவதற்கும் வழக்குகளைத் தொடுப்பதற்கு சட்டச் செயற்பாட்டாளர்கள் முன் வர வேண்டும்.

(தொடர்ச்சி *15* பக்கம்)

கனடிய செய்திகள் Canadian News

# LATIKA Production ஆதரவிலும் பி.எஸ். சுதாகரனின் இயக்கத்திலும் தயாரிப்பிலும் திரைக்கு வந்துள்ள "மௌனித்த பொழுது"

## கனடிய ரசிகர்கள் பார்த்து ரசித்த மற்றுமொரு "எங்கட படம்" "இதுவென்றால் அது மிகையல்ல"

**"மலையன்பன்" பார்வையில்......**

அண்மைக்காலத்தில் எமது தாயகத்திலிருந்தும் எம்மவர்கள் புலம்பெயர்ந்து வாழும் பல வெளிநாடுகளிலிருந்தும் நம்மவர்கள் தயாரிப்பில் திரைகளுக்கு வந்த பல திரைப்படங்களில் சில மாத்திரமே "எங்கட படம்" என்று பாராட்டக்கூடியவையாக அமைந்திருந்தன. இவ்வாறு "எங்கட படம்" என்று பாராட்டுவதற்குரிய அளவுகோள்கள் பல உண்டு. இந்த அளவுகோள்களை தங்கள் கைகளில் எடுத்துக் கொள்கின்ற தீவிர அல்லது ஆழமான ரசிகர்கள் தங்கள் ரசனைக்கு ஏற்ப "இது தான் எங்கட படம்" என்று தங்கள் பாராட்டும் விமர்சனத்தை வழங்குவார்கள்.

எம்மில் பலர் எதிர்பார்க்கின்ற கதைக் களம், உரையாடல் மொழி - படமாக்கப்பெற்ற இடங்கள் - ஏற்கெனவே திரைகளில் பார்த்து பாராட்டுப்பெற்ற நடிக நடிகையர்கள் - இடம்பெறும் பாடல்களில் உள்ள மண்வாசனை மற்றும் பண்பாட்டுக் கோலங்கள் ஆகியனவே "எங்கட படம்" என்று நாம் பாராட்டுவதற்கான அளவுகோள்களாக விளங்குகையில் நாம் கடந்த 6ம் திகதியன்று ஞாயிற்றுக்கிழமை மார்க்கம் நகரில் உள்ள யோர்க் சினிமா திரையரங்கில் பார்த்து மகிழ்ந்த LATIKA Production ஆதரவிலும் பி.எஸ். சுதாகரனின் தயாரிப்பிலும் இயக்கத்திலும் திரையிடப்பெற்ற "மௌனித்த பொழுது" "எங்கட படம்" என்ற பாராட்டைப் பெறுவது ஏற்புடையதாகவே விளங்குகின்றது.

அன்று இடம்பெற்ற விசேட காட்சிக்கு அழைக்கப்பெற்றவர்கள் பெருமளிவில் வந்திருந்தாலும் அன்று திரைப்படத்தைப் பார்த்துச் சென்றவர்களின் விமர்சனங்கள் இனிவரும் காட்சிகளுக்கு எம் ரசிகர்களை இழுத்துச் செல்லும் என்ற நம்பிக்கையோடு இந்த விமர்சனத்தை இங்கு பதிவு செய்கின்றோம்.

"ஒருத்தி" திரைப்படத்தை எமக்காக உருவாக்கிய பி.எஸ். சுதாகரன் மீண்டும் தனது சாத்தியமான துணிச்சலுடன் தொடர்ச்சியாக எம்மவர்களை மாத்திரம் நம்பிய வண்ணம் திரைப்படங்கள் தந்து கொண்டிருப்பது எதிர்காலத்தில் புலம்பெயர்ந்த நாடுகளில் அவரது திரைப்படத்தை காத்திருந்து பார்க்கும் ரசிகர் குழாம் களும் அதன் மூலம் இங்கு ஒரு பலமும் நம்பிக்கையும் வாய்ந்த "புலம் பெயர் தமிழ்த் திரைப் படத்துறை" ஒன்று உருவாகும் என்ற நம்பிக்கையையும் எமக்கு ஏற்படுத்தியுள்ளது.

"மௌனித்த பொழுது" திரைப்படத்தின் ஆரம்பமே ஒரு திரைக் கொண்டாட்டமாக விளங்கியது என்றால் அது மிகையாகாது. யாழ்ப்பாணம் காரைநகரில் உள்ள தமது குடும்பம் சார்ந்த ஒரு ஆலயத்தின் வருடாந்த இரதோற்சவத்திற்கு தனது சார்பாக கனடாவிலிருந்து தனது சகோதரனை அனுப்பிவிடத் தீர்மானிக்கும் மூத்த சகோதரரின் குடும்ப உரையாடல்க் காட்சி கண்களுக்கு குளிர்மையாகவும் நேர்த்தியாகவும் எமக்கு முன்னால் தோன்றியது. அடுத்ததாக எம்மை எமது தாயக மண்ணுக்கு அதுவும் கரையோரக் கிரமமான காரைநகருக்கு அழைத்துச் செல்கின்றார் பி.எஸ். சுதாகரன் குறிப்பாகச் சொல்வதானால் அடுத்து வந்த காட்சிகளில்தான் திரைப்படமே ஆரம்பமாகின்றது என்றாலும் முதலாவது கனடியக் காட்சியில் நடித்திருந்த நடிக நடிகைகள் அனைவரும் சிறப்பாக நடித்திருந்தார்கள். கதாநாயகன் ஜே மற்றும் விஜிதா ஆகியோரும் கதாநாயகனின் அண்ணனாக நடித்தவரும் இயல்பாக நடித்தார்கள். அவர்களை பி.எஸ். சுதாகரன் நன்றாக இயக்கியுள்ளார் என்பதும் தெளிவாகத் தெரிந்தது.




காரைநகரில் காட்சிகள் ஆரம்பமாகி ஒரு கலியாணப் பதிவில் நிறைவு பெறுகின்றது. பின்னர் கனடா திரும்புகின்றார் கதாநாயகன் ஜே. கதாநாயகி ஹர்சியை பதிவுத் திருமணம் செய்தவராக.

காரைகர் காட்சிகளில் பல இடங்களை மிகவும் அழகுறக் காட்டுகின்றார் இயக்குனர். குறிப்பாக கசூரினா உல்லாசக் கடற்கரை மற்றும் ஆலயங்கள், இயற்கைக் காட்சிகள். நெல்வயல்களின் பசுமை. எமது மக்களின் கடுமையான உழைப்பு ஆகியவை எமக்கு ஞாபகமூட்டும் வகையில் திரையில் தோன்றின.

அடுத்து முக்கியமாக நாம் குறிப்பிட்டுச் சொல்ல வேண்டிய "நடிப்புப் பெருந்தகை" AMRR மகேந்திரசிங்கம் அவர்கள் ஆலயத்தின் பூசகராகவும் ஒவ்வொரு வசனத்திற்கு இடையில் திருவள்ளுவப் பெருந்தகையில் குறள் வரிகளை அழகுற உச்சரித்து மகிழ்ந்து நடிப்பவராகவும் ரசிகர்களை உற்சாகப் படுத்தினார். இடையில் கதாநாகனோடு உதவி செய்யும் ஒருவராக நடித்த அவரது தாயக நண்பரின் நடிப்பாற்றல் மற்றும் உச்சரிப்பு ஆகியவை நேர்த்தியாக விளங்கி திரைப்படத்தின் நகர்வில் நம்பிக்கையை தந்தவர்களாக அங்கு தோன்றிய நடிக நடிகையர்கள் விளங்கினார்கள் என்றால் அது மிகையாகாது.

தாயக நடிகர் AMRR மகேந்திரசிங்கம் அவர்கள் ஏற்கெனவே தாயகத்தில் தயாரிக்கப்பெற்ற பல திரைப்படங்களில் நடித்தவர். கலையை மதிப்பவர். நல்ல கலைப் படங்களில் தோன்றிய கலைத்துவமாகத் தோன்றும் வல்லமையையும் விருப்பும் கொண்டவர். அவரது இயல்பானதும் அனுவத்தை வெளிக்காட்டும் நடிப்பும் "மௌனித்த பொழுது" திரைப்படத்தை சற்று தரம் உயர்த்திக் காட்டும் வல்லமை மிக்கவை என்றால் அதுவும் நியாயமானதே.

"மௌனித்த பொழுது" மீண்டும் கனடிய மண்ணில் "விடிகின்றது. அங்கு துணையைத் தேடி நிச்சயதார்த்தம் செய்தவராக அழகிய இந்த தேசத்திற்கு வந்தவருக்கு எதிர்காலம் நிச்சயமற்றதாக மாறுகின்றது. அதனால் கதாநாயகன் துசியின் வாழ்க்கையும் வழி மாறிச் செல்லுகின்றது.

தாயகக் காட்சிகளில் இல்லாத வன்முறைக் காட்சிகள் தொடர்கின்றன. இவை யதார்த்தமானவையாக தோன்றினாலும் எத்தனை ரசிகர்களின் இதயங்களை நொருக்கியிருக்கும் என்றும் குறிப்பிடலாம்.







தொடர்ந்து எமது பார்வையில் கதையை தொடர்வதிலும் பார்க்க திரைப்படத் தயாரிப்பு மற்றும் தொழில் நுட்பம் கவனித்து காட்சிப் படுத்தப்பெற்ற விடயங்கள். கவனிக்கப்படாமல் போன அம்சங்கள் ஆகியன எமது பார்வைக்கு தெரிகின்றன.

திரைப்படத்தின் ஆரம்பம் தொடக்கம் இறுதி வரை முக்கிய பாத்திரங்களில் நடிக நடிகையர்கள் தங்கள் நடிப்பை அர்ப்பணித்துள்ளார்கள் என்றே கூறவேண்டும். இனிமையான பாடல்கள் காதுகளை எட்டிய இசை மற்றும் வரிகள் ஆகியவற்றை கொண்டவையாக விளங்கியமை பாராட்டுக்குரியது.





கனடியச் சூழலில் எம்மவர்கள் மத்தியில் காணப்படும் தவறான செயற்பாடுகள், மிக விரைவாக பணம் சம்பாதித்துக் கொள்ள பின்பற்றும் சட்டத்திற்கு முரணான செயற்பாடுகள் ஆகியவை தொடர்பாகவும் காட்சிகளை நகர்த்தி இறுதியில் நிறையவே கனவுகளோடு சில திறமைகள் கொண்டவராக கனடாவில் கால்பதித்த கதாநாயகி தனது கணவர் வழி மாறிச் சென்றதனால் ரசிகர் முற்றிலும் எதிர்பாராதவகையில் சில துர்ப்பாக்கியமான காட்சிகளோடு "மௌனித்த பொழுது" நிறைவுக்கு வந்து ரசிகர்கள் இதயங்கள் இருண்டு போக திரையரங்கில் வெளிச்ச விளக்குகள் தோன்றி நாம் பார்த்தது ஒரு திரைப்படமே என்பதை ஞாபகப் படுத்தின.





இயக்குனர் பி.எஸ் சுதாகரன் தன்னிடமிருந்த மிகக் குறைந்த வளங்களைப் பயன்படுத்தியிருந்தாலும் அனுபவமும் ஆளுமையும் கொண்ட தொழில்நுட்பக் கலைஞர்களின் துணையோடு ஒரு "எங்கட படத்தை" எமக்களித்துள்ளார். அவரிடமிருந்து வரவுள்ள அடுத்த திரைப்படத்தை குறைந்தளவாவது கலைப்படங்களுக்குரிய அம்சங்களோடு எதிர்பார்க்கின்றோம் என்ற வரிகளோடு தற்காலிகமாக விடைபெறுகின்றோம்.

இயக்குனர் பி.எஸ் சுதாகரனைப் பாராட்டவும் வாழ்த்தவும் அடுத்துவரும் காட்சிகள் தொடர்பான விபரங்களுக்கும் (416) 720-9303 என்னும் தொலைபேசி இலக்கத்தை அழைக்கலாம்.

# Carefirst Family Health Team

**Accepting New Patients**
**புதிய நோயாளர்கள் ஏற்றுக் கொள்ளப்படுகின்றனர்**

- அனுபவமுள்ள தமிழ் பேசும் பெண் குடும்ப மருத்துவர் எங்களது ஸ்கார்பரோ கிளினிக்கில் இணைந்துள்ளார். (Scarborough Clinic)
- உங்களது சுகாதார சேவைகளைப்பூர்த்தி செய்ய கார்த்திருக்கிறார்.
- நீரழிவு இருப்பின் அது சம்பந்தமான கல்வித்திட்டமும் அவரால் ஒழுங்கு செய்து தரப்படும்.
- நாள்பட்ட நோய்க்கான கல்வியும் (chronic disease), மேலாண்மை திட்டங்களும் அவரால் வழங்கப்படும்.

அவர் விபரம்:

டாக்டர் அஞ்சலின் ராஜரத்தினம் (Scarborough Clinic)

டாக்டர். ராஜரத்தினம் அக்கறையும் அர்ப்பணிப்பும் கொண்ட குடும்ப மருத்துவர் ஆவர்.


**உங்கள் குடும்ப மருத்துவத்தேவை, மற்றும் டாக்டர் ராஜரத்தினத்தின் நோயாளியாக பதிவு செய்ய விரும்பினால், கீழே உள்ள QR குறியீட்டை ஸ்கேன் செய்யவும் அல்லது https://forms.office.com/r/upqD0q5TGL க்குச் சென்று படிவத்தை நிரப்பவும் உங்கள் சுயவிவரத்தை உருவாக்க எங்களுக்கு உதவ, உங்கள் விபரங்களை பதிவு செய்யுங்கள்.**



Availability of New Family Doctor at Carefirst Family Health Team - Dr. Rajaratnam

**Clinic Location:**
Carefirst One-Stop Multi-Services Centre
300 Silver Star Blvd., 2/F
Scarborough, ON M1V 0G2
Tel: (416)502-2029
www.carefirstontario.ca

11/24








Toronto சிட்டி கவுன்சிலர்

# PAUL AINSLIE

WARD 24, SCARBOROUGH-GUILDWOOD

## HELP IS AVAILABLE

வட்டார மக்களின் தேவை கருதி பின்வரும் சேவைகள் எம்மால் கவனிக்கப்படுகின்றன.

குறைந்த கட்டனத்தில் வீட்டுவசதி
**விலங்கு சேவைகள்**
உயர்மாடி கட்டட சட்டங்கள்
**கட்டட அனுமதி பத்திரங்கள்**
பிள்ளை பராமரிப்பு சலுகை
**அவசர வீட்டு வசதிகள்**
தீயணைப்பு சேவைகள்
**கழிவுப் பொருட்கள் சேவை**
நூலகச் சேவை
**மாநகரத் தேர்தல்**
மாநகர அனுமதியும் சட்டங்களும்

**Ontario Works**
வாகனத் தரிப்பிடங்கள்
**பூங்காக்கள்**
காவல் துறை
**பொதுச் சுகாதாரம்**
வீதிகள்
**ஆதன வரிகள்**
பொதுப் போக்குவரத்து
**மீள் சுலட்சியும் பசுமை திட்டமும்**
மரங்கள்
**நீர் விநியோகம்**

**நியமன அலுவலகம்**
Scarborough Civic Centre
150 Borough Drive, 2nd Floor
Scarborough, ON M1P 4N7
Phone: 416-396-7222
Fax: 416-392-4006

**ரொரன்ரோ சிட்டி ஹால் அலுவலகம்**
100 Queen Street West,
2nd Floor - Suite C52
Toronto, ON M5H 2N2
Phone: 416-392-4008
Fax: 416-392-4006

councillor_ainslie@toronto.ca
Ward 24 Scarborough-Guildwood
@cllrainslie
www.paulainslie.com
@Ainslie_Ward24
Paul Ainslie (City of Toronto)

**www.paulainslie.com 416-396-7222**



# VILLAGE NISSAN

## தமிழ் பேசும் வாடிக்கையாளர்களுக்கு சேவையாற்றுவதில் நாம் பெருமையடைகிறோம்

*DAA ROTATION



**25 SENTRA**
*S CVT* ULTRA-LOW
**$69** WEEKLY | **39** MOS. LEASE $2,695 Down
+$1,000 60th Anniversary Cash

*DAA ROTATION



**25 KICKS PLAY**
*S* ULTRA-LOW
**$69** WEEKLY | **39** MOS. LEASE $2,192 Down
+$1,000 60th Anniversary Cash

*DAA ROTATION




**25 ROGUE**
*S AWD*
**0.99%** | **30** MOS. LEASE
+$1,000 60th Anniversary Cash



**Sajanthan Vijayakumar**
SALES CONSULTANT
905.477.3337 647.631.9054
saj@villagenissan.com

VILLAGE NISSAN
25 South Unionville Ave,
Unionville, ON L3R 6B8
www.villagenissan.com




கோண்வோல் சிவன் ஆலயம் - கனடா
CORNWALL SHIVAN TEMPLE - CANADA
தெய்வத் திரு. சண்முகலிங்கம் வேலாயுதபிள்ளையின் ஆசீர்வாதத்துடன்
மஹோற்சவ விஞ்ஞாபனம் 2025
15 யூலை 2025 முதல் 26 யூலை 2025 வரை
கொடியேற்றம் 15.07.2025 செவ்வாய்க்கிழமை
சப்பிரத் திருவிழா 22.07.2025 செவ்வாய்க்கிழமை
தேர்த் திருவிழா 23.07.2025 புதன்கிழமை
தீர்த்தத் திருவிழா 24.07.2025 வியாழக்கிழமை
பூங்காவனம் 25.07.2025 வெள்ளிக்கிழமை
வைரவர் மடை 26.07.2025 சனிக்கிழமை
CORNWALL SHIVAN ஆ TEMPLE :: CANADA
தேர்த் திருவிழாவிற்கு
Toronto,mississauga, Brampton வில் இருந்து பஸ் சேவைகள் நடைபெறவுள்ளதால்
முற்பதிவிற்கு அழையுங்கள் ( கட்டணம் இருவழிச்சேவைக்கு $20)
416-564-9642
www.cornwallshivan.ca
1730 Vincent Massey Dr, Cornwall, ON K6H 5R6


உங்கள் வீட்டை புதுப்பிக்க வேண்டுமா?
Legalize your basement now!
* Basements
* Bathrooms
* Kitchen
* Flooring
* Accent Walls
* Painting
* Custom Closets
Coverall Group Inc.
Contact: Siva
416-706-8160 OR 416-893-3216


Perfect Family Home/ Investment in Pickering
FOR SALE
For Sale $1,148,888
Detached 2-Storey
Bedrooms: 4 + 2 Washrooms: 4
Apx Sqft: 2000 -2500, 5 Year Old
1034 Pelican Trail, Pickering . (Whites/Taunton)
Well Maintained & Upgradeded
Legal Basement / Sep Entrance
9Ft Main Floor, smooth ceilings And Double Door Entrance, Upgraded Throughout Hardwood floors and California Shutters, Family size eat in kitchen is all about style and functionality equipped with Gas stove & stainless steel appliances, Quartz Counter top, Under mount Sink With Pullout Faucet, Extra pantry for additional storage, large dining area, Upgraded Stained Oak Stairs, Access To the Garage From Inside the house, Large Family room with Gas Fireplace. Upstairs, enjoy the privacy of a luxurious primary bedroom with a spa - like unsuited and walk-in closet, plus three additional large bedrooms and the convenience of second - floor laundry. Master bedroom is with SPC unsuited, Stand-Alone Soaker Tub and Double Sink Vanity, Huge walk in closet, complete with a stand-up shower.
(Mortgage) அடமான ஒழுங்குகளும் செய்து கொடுக்கப்படும்
கமல் நவரட்ணம்
KAMAL NAVARATNAM
Sales Representative
Direct:
416-450-2424
E mail:kamal@kamalrealtor.ca
www.kamalrealtor.ca
REMAX
COMMUNITY
Realty Inc., Brokerage
RAISING YOUR VALUE
Office:416-287-2222
Fax: 416-282-4488
1265 Morningside Ave.,
Suite 203, Toronto, ON M1B 3V9
KAMAL NAVARATNAM REAL ESTATE
Trusted and reliable services

இலங்கை செய்திகள் Sri Lanka News

# தமிழ் மக்கள் உயிரோடு பு(வி)தைக்கப்பட்ட பிரதேசம் — செம்மணி பற்றிய ஆய்வு

**பொன்னையா சிந்துயன்**
**சட்டத்துறை இறுதியாண்டு மாணவன்- இங்கிலாந்து**



யாழ்ப்பாணத்தின் ஆரம்ப பகுதியாக உள்ள செம்மணி அமைதியான மற்றும் அழகான நகரமாகும். ஆனால் இன்று சர்வதேச சமூகமே திரும்பிப் பார்க்கும் அளவுக்கு மாறியுள்ளது. காரணம் என்னவெனில் நிலத்தில் தோண்ட தோண்ட மனித எலும்புக்கூடுகள் குட்டிக் குழந்தைகள் முதல் முதியவர்கள் வரை குடும்பம் குடும்பமாக, சகோதரர்களாக, சகோதரிகளாக இருந்தவர்கள் வன்புணர்வு செய்யப்பட்டு கைகள் கட்டப்பட்ட நிலையில், வாய்கள் மூடப்பட்ட நிலையில் எலும்புக்கூடுகள் கண்டுபிடிக்கப்படுவதாலாகும்.

இவ்வாறு இன்று உலகையே திரும்பி பார்க்க வைத்துள்ள செம்மணி புதைக்குழியின் கதை 1996ம் ஆண்டு இடம் பெற்ற கிருஷாந்தி குமாரசாமி வழக்குடன் பின்னிப் பிணைந்துள்ளது. 1996 செப்டம்பர் 7ம் தேதி யாழ்ப்பாணத்தில் உள்ள ஒரு சோதனைச் சாவடியில் 18 வயது தமிழ் பள்ளி மாணவியான கிருஷாந்தி இலங்கை இராணுவத்தால் கூட்டுப் பாலியல் வன்கொடுமை செய்யப்பட்டு கொலை செய்யப்பட்டார். அவரது தாயார், தம்பி மற்றும் ஒரு குடும்ப நண்பர் அவரைத் தேடிச் சென்ற போது அவர்களும் கடத்தப்பட்டு கொடூரமாக கொல்லப்பட்டனர். நான்கு உடல்களும் பின்னர் செம்மணியில் ஆழமற்ற கல்லறையில் புதைக்கப்பட்டனர்.

இந்த குற்றத்தின் மீதான சீற்றம் பல வீரர்களை கைது செய்து விசாரணைக்கு உட்படுத்தியது. ஜூலை 1998ல் சோமரத்தன ராஜபக்' உட்பட ஐந்து இலங்கை இராணுவத்தினர் கிருஷாந்தியின் பாலியல் வன்கொடுமை மற்றும் கொலை மற்றும் அவரது குடும்ப உறுப்பினர்களுடைய கொலைகளுக்கு தண்டனை பெற்றனர். இந்த விசாரணை முடிவில் தான் ராஜபக்ஷ ஒரு அதிர்ச்சிகரமான தகவலை வெளியிட்டான், கிருஷாந்தி வழக்கின் உடல்களைத் தாண்டி இன்னும் பல உடல்கள் செம்மணியில் இருப்பதாக கூறினான். தான் யாரையும் கொல்லவில்லை எனவும் கொல்லப்பட்ட உடல்களை மட்டுமே புதைத்தேன். செம்மணியில் "200 முதல் 400" பேர் புதைக்கப்பட்ட இடங்களை, குறிப்பாக 1995-1996ல் இராணுவத்தின் பிரசாரத்தின் போது காணாமல் ஆக்கப்பட்ட தமிழர்களை தன்னால் அடையாளம் காண்பிக்க முடியும் என அவன் கூறினான். இந்த ஒப்புதல் வாக்குமூலம் மனித உரிமை குழுக்களும், தமிழர்களும் பல ஆண்டுகளாக பேசி வந்ததை உறுதிப்படுத்தியது.

1996ம் ஆண்டு யாழ்ப்பாணத்தில் 600 பேர் வரை காணாமல் போனதாகவும் உடல்கள் "கழிவறை, குழிகள், கிணறுகள் மற்றும் ஆழமற்ற புதைகுழிகள்" ஆகியவற்றில் வீசப்பட்டதாகவும் சர்வதேச மன்னிப்புச் சபை முன்னர் நம்பகமான ஆதாரங்களை அறிவித்திருந்தது. ராஜபக்ஷவின் சாட்சியம் இந்த குற்றச்சாட்டுகளுக்கு ஒரு உறுதியான இடத்தை அளித்தது. ஆனால் கிருஷாந்தி வழக்கில் தண்டனை விதிக்கப்பட்ட இராணுவத்தினர் 2000ம் ஆண்டு பிணையில் வெளியே வந்து விட்டனர். கிருஷாந்தியினுடைய வழக்குக்கு மிகவும் அழுத்தம் கொடுத்த நபராக காணப்பட்ட S.T. ஞானநாதன் 2007 ஆம் ஆண்டு இராணுவத்தினரால் இராணுவ முகாம் அருகே சுட்டுக் கொல்லப்பட்டார். அதன் பின்னர் செம்மணி, கிருஷாந்தி வழக்கு, சோமரத்னா வழக்கு என்பன என்ன நடந்தது? எப்படி போனது? எத்தனை பேர்? என யாரும் அதனைப் பற்றி பேசவில்லை.

இவ்வாறு இருக்கையில் உண்மையை யாராலும் மறைக்க முடியாது என 13 பெப்ரவரி 2025 அரியாலை சிந்துபதி மயானத்திற்கு கட்டுமான வேலையை மேற்கொள்வதற்காக குழி தோண்டப்பட்டது. அப்போது அங்கே மனித எச்சங்கள் கண்டுபிடிக்கப்பட்டன. உடனடியாக வழக்கு நீதிமன்றம் செல்கின்றது. நீதிமன்ற உத்தரவின் பேரில் மீண்டும் தோண்டப்படுகின்றது. இன்றுவரை 33 மனித உடல்கள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. அதில் 3 மற்றும் 1 வயது குழந்தைகளின் உடல்களும் பாடசாலை புத்தகப்பைகள் என்பனவும் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

இதற்காக வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவுகளும், இளைஞர்களும், தமிழ் மக்களும், மனித உரிமை அமைப்புகளும் குரல் கொடுத்து வரும் நிலையில் அவற்றின் தன்மையை காணாமல் செய்யவும், நீதிக்கான போராட்டத்தின் திசையினையும் போக்கினையும் மாற்றியமைக்க செயற்படுகின்றனர் சில தமிழின துரோகிகளும், இவற்றுக்கு காரணமான இனவாத அரசியல்வாதிகளும், இராணுவத்தினர்களும் தமிழ் இனப்படுகொலையில் உந்தையாக இருக்கும் திரனகம மற்றும் அகிலன் கதிர்காமர் நெட் வொர்க்குகள் என்பவற்றுடனும் இலங்கை இராணுவத்தினர் மற்றும் இலங்கை அரசுடனும், துணை ஆயுத குழுக்களுடன் தொடர்புடைய அருண் சித்தார்த், ஒரு பெண் மற்றும் சிங்கள யூடியூப்பர்கள் குழுவுடன் இணைந்து அரச ஆதரவுடன் இணைந்து பிரச்சார நடவடிக்கையில் ஈடுபட்டு வருகின்றார். இந்தப் பிரச்சாரம் செம்மணி மனிதப் புதைகுழிகள் தொடர்பான உண்மைகளை சிதைக்க முயல்கின்றது. இந்த செம்மணி மனிதப் புதைக்குழி இனப்படுகொலை போரின்போது அரசு மற்றும் அதன் துணை இராணுவப் படைகளால் நடத்தப்பட்ட நீதிக்குப் புறம்பான கொலைகள் மற்றும் தமிழ் பொது மக்களின் பெருமளவிலான அடக்கங்களுடன் தொடர்புடைய ஒன்றாகும். அருண் சித்தார்த் குழுவின் ஒரு பகுதியாக, 1990 மார்ச் மாதம் தமிழ் பொது மக்களின் அடக்கத்திற்கு தமிழீழ விடுதலை புலிகள் [LTTE] பொறுப்பு என்று குற்றம் சாட்டும் ஒரு தவறான கதையை இந்தக் குழு பிரச்சாரம் செய்கிறது.

இந்தப் பிரச்சாரத்தில் அருண் சித்தார்த்தின் மனைவி என குறிப்பிடப்படும் அந்தப் பெண் தனது தந்தையை மார்ச் 1990 இல் தமிழ் ஈழ விடுதலை புலிகள் கடத்தி, சித்திரவதை செய்து புதைத்ததாக குற்றம் சாட்டுகிறார். அந்த நேரத்தில் இந்திய அமைதி காக்கும் படை (IPKF) மற்றும் அதன் கூட்டணி துணை ராணுவ குழுக்களின் கட்டுப்பாட்டில் ,ருந்த அந்தப் பகுதியில் தமிழீழ விடுதலை புலிகளின் செயல்பாட்டு இருப்போ, அல்லது முகாம்களோ இல்லை. மேலும் உள்ளூர் சமூக உறுப்பினர்கள் விசாரித்த போது சம்பவம் நடந்ததாக கூறப்படும் நேரத்தில் தனக்கு ஆறு வயது தான் என அந்தப் பெண் ஒப்புக் கொண்டுள்ளார். இது தான் ஒரு சாட்சி என அவர் வெளியிட்ட முந்தைய காணொளி அறிக்கைக்கு நேர் எதிரானதாகும். மாநகர, நகர, பிரதேச சபைகளில் ஆட்சியமைப்பதற்காக செம்மணி மனித புதைகுழியில் பல தமிழ் மக்கள் புதைக்கப்படுவதற்கு காரணமாக இருந்த அரச துணை ஒட்டுக் குழுவான ஈ.பி.டி.பி யின் அலுவலகம் சென்ற எம்.ஏ சுமந்திரன் செம்மணியில் இடம்பெற்ற சர்வதேச நீதிக்கான "அணையா தீபம்" போராட்டத்தில் கலந்து கொள்ளாமல் இருந்தது அவரால் தமிழருக்கு எதிராக இழைக்கப்பட்ட மேலுமொரு துரோகச் செயலாகும்.



அகிலன் கதிர்காமர் இலங்கை அரசுக்கு சார்பாக சர்வதேச புலனாய்வு அமைப்புக்களுடன் சேர்ந்து செம்மணிப் போராட்டத்தை திசை திருப்பும் வகையில் காசா, இஸ்ரேல் தொடர்பான பல தகவல்களை வெளிப்படுத்தி தமிழ் மக்களுக்கு மேலுமொரு துரோகத்தை மேற்கொண்டு வருகின்றார். சந்திரிக்கா பண்டாரநாயக்க குமாரதுங்கவின் ஆட்சிக்காலத்தில் அரசிடம் காசு பெற்று யாழ்ப்பாணப் பல்கலைக்கழக ஆசிரியர் சங்கம் (Jaffna University Teachers Union) என்ற ஒன்றை உருவாக்கி தமிழீழ விடுதலைப் புலிகளுக்கு எதிராக பல நடவடிக்கைகளை இராணுவத்தினருடனும், ஒட்டுக்குழுக்களுடனும் இணைந்து மேற்கொண்டார். அதுமட்டுமல்லாமல் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் உடற் கூறியல் (Anotamy) தலைவராக இருந்த மனித உரிமை செயற்பாட்டாளரான ரஞ்சனி திரணகம வினை (Ranjani Thiranagama) EPRLF அமைப்பினை பயன்படுத்தி கொலை செய்ததுடன் அதனை விடுதலை புலிகள் செய்ததாக குற்றம் சுமத்தினார்.

இவ்வாறு எமது தமிழ் சமூகத்தில் காணப்படும் பல துரோகிகளும் செம்மணி மனித புதைக்குழி விடையத்தினை திசை திருப்பும் வகையில் பல நிகழ்வுகளையும், அரசியல் நாடகங்களையும் அரங்கேற்றி வருகின்றனர். "எதிரிகளை பிறகு பார்த்துக் கொள்ளலாம் முதலில் துரோகிகளை ஒழிக்க வேண்டும்" என்ற வகையில் தமிழ் மக்கள் அனைவரும் ஒரே பாதையில் இணைந்து போர் குற்றங்களை புரிந்த இலங்கை இராணுவத்தையும், இலங்கை அரசினையும் மஹிந்த, கோத்தபாய உட்பட்ட அப்பாவி தமிழ் மக்கள் காணாமல் ஆக்கப்பட்டு சித்திரவதை, வன்புணர்வு செய்யப்பட்டு கொலை செய்யப்பட்டதற்கு காரணமானவர்களையும் தமிழின துரோகிகளான சுமந்திரன், அருண் சித்தார்த், அகிலன் கதிர்காமர், டி.பி.எஸ் ஜெயராஜ், பாக்கிய சோதி சரவணமுத்து, ராஜன் ஹோல் (Rajan Holle), EPDP, PLOT, TELO, EPRLF போன்றவர்களுக்கும் தகுந்த தண்டனையும் எமது உறவுகளுக்கான நீதியினையும் சர்வதேச விசாரணையும் பெற்றுக் கொடுக்கும் வரை போராட வேண்டும். செம்மணியில் எமது உறவுகள் உயிரோடு நிலத்தில் விதைக்கப்பட்டமைக்கான நீதி வேண்டி ஐக்கிய நாடுகள் சபை (United Nation Organization) வரை தொடர்ந்து பயணிப்போம்.

*(10 பக்கத் தொடர்ச்சி)*

## *செம்மணியும் ஐநாவும்*

தமிழ் மக்கள் மத்தியில் அதற்கு தேவையான எத்தனை சட்டச் செயற்பாட்டு அமைப்புக்கள் உண்டு?

தமிழ் சட்டவாளர்கள் அரசியல்வாதிகளாக இருக்கிறார்கள். அரசியல் செயல்பாட்டாளர்களாக மனிதஉரிமை செயற்பாட்டாளர்களாக இருக்கிறார்கள். ஆனால் சட்டச் செயற்பாட்டு மையங்கள் என்று பார்த்தால் மிகக் குறைவு. கொழும்பை மையமாகக் கொண்ட சட்டவாளர் ரட்ணவேலும் அவருடைய அணியும் செம்மணியில் நிற்கிறார்கள். இந்த விவகாரத்தில் மட்டுமல்ல சரணடைந்து காணாமல் போனவர்களின் வழக்குகளையும் பெருமளவுக்கு ரட்ணவேல்தான் கையாண்டு வருகிறார். அவருடைய மனித உரிமைக்கும் அபிவிருத்திக்குமான மையம் தமிழ் மக்கள் மத்தியில் உள்ள போற்றுதலுக்குரிய சட்டச் செயற்பாட்டு அமைப்பாகும்.

அதனால்தான் கடந்த ஜனாதிபதித் தேர்தலின் போது, தமிழ்ப் பொது வேட்பாளரைத் தெரிவு செய்யும் சந்திப்பில் முதலில் பரிந்துரைக்கப்பட்டது சட்டத்தரணி ரட்ணவேல்தான். ஆனால்அவர் அதற்கு மறுத்து விட்டார். பொது வேட்பாளருக்காக உழைத்த மக்கள் அமைப்போடு சிவில் சமூக செயற்பாட்டாளராகிய சட்டத்தரணி புவிதரன் இணைந்து வேலை செய்தார். குருபரன் சில குறிப்பிட்ட உதவிகளைச் செய்தார். எனினும் தமிழ் மக்கள் மத்தியில் குறிப்பிட்டுச் செல்லக்கூடிய சட்ட உதவி மையங்கள் சட்ட செயற்பாட்டு மையங்கள் எத்தனை உண்டு?

இத்தனைக்கும் நீதி கேட்டுப் போராடும் ஒரு மக்கள் கூட்டம். எனவே நீதிக்கான போராட்டம் என்பது குற்றம் தொடர்பான தகவல்களைத் திரட்டுவதில் இருந்துதான் தொடங்குகின்றது. அதற்கு வேண்டிய கட்டமைப்புகளை உருவாக்க வேண்டும். அதன் மூலம் முதற்கட்டமாக உள்நாட்டு நீதியின் விர-ிவை பரிசோதிப்பதற்கான வழக்குகளைத் தொடுக்கலாம். உள்நாட்டு நீதியின் போதாமை நிருபிக்கப்படும்போது அனைத்துலக நீதிப் பொறிமுறைக்கான தேவை மேலும் நிரூபிக்கப்படும். அனைத்துலக அளவில் சான்றுகளையும் சாட்சிகளையும் சேகரிப்பதற்கான ஒரு அலுவலகம் - அது பலவீனமானது என்ற போதிலும் - ஓர் அனைத்துலக யதார்த்தமாக மாறியிருக்கிறது. அது தமிழ் மக்களுக்குப் பலமானது.

தமிழ் மக்கள் நீதிக்காகப் போராடுகிறோம் என்று கூறிக்கொண்டு கற்பனையில் திளைக்காமல் கட்டமைப்பு சார்ந்து சிந்திக்க வேண்டும். முதலில் விஞ்ஞானபூர்வமாகத் தகவல்களைத் திரட்டும் தளங்களைத் திறக்க வேண்டும். இரண்டாவதாகசட்டச் செயற்பாட்டு அமைப்புகளை உருவாக்க வேண்டும். தமிழ் மக்கள் கட்டமைப்பு சார்ந்து சிந்திக்க வேண்டும்.கட்டமைப்புகளை உருவாக்க வேண்டும். அதாவது தேசத்தைக் கட்டியெழுப்பத் தேவையான கட்டமைப்புகள்.

இலங்கை செய்திகள்
Sri Lanka News

# தேசிய பிரச்சினையைத் தீர்ப்பதற்கு தொழிற்சங்கங்கப் பிரதிநிதிகளோடு கலந்துரையாட நாள் ஒதுக்குவதை தட்டிக்கழிக்கும் அரசு!

ஐக்கிய அமெரிக்கா இலங்கை மீது விதித்துள்ள வரிகளால் நாடு எதிர்கொண்டுள்ள நெருக்கடிக்குத் தீர்வாக மாற்று முன்மொழிவுகளை முன்வைக்க தொழிற்சங்க பிரதிநிதிகளுக்கு வாய்ப்பளிக்கத் தவறியுள்ளதாக அரசாங்கம் கடுமையாக குற்றம் சாட்டப்பட்டுள்ளது.



இந்த விடயம் தொடர்பில் அமெரிக்க நிர்வாகத்தால் ஏற்றுக்கொள்ளக்கூடிய ஒரு வரித்திட்டத்தை இலங்கை அரசாங்கம் முன்வைக்கும் என்பதில் தமக்கு சிறிதும் நம்பிக்கை இல்லை எனவும் இதன் விளைவுகள் இலங்கையின் தொழிலாளர்களை வெகுவாக பாதிக்கும் எனவும், கொழும்பில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கருத்து தெரிவித்த சுதந்திர வர்த்தக வலயங்கள் மற்றும் பொதுச் சேவைகள் ஊழியர் சங்கத்தின் இணைச் செயலாளர் குறிப்பிட்டுள்ளார்.

"விடுதலை நாள்" என குறிப்பிடப்பட்டு 2025 ஏப்ரல் 2ஆம் திகதியன்று அறிவிக்கப்பட்ட உயர் வர்த்தக வரிகளை மூன்று மாதங்களுக்கு தற்காலிகமாக நிறுத்தி வைக்க டொனால்ட் ட்ரம்ப் நடவடிக்கை எடுத்தபோதும், ஜூலை 9 ஆம் திகதி முதல் அதனை மீண்டும் அமலுக்குக் கொண்டுவருவதற்கு திட்டமிடப்பட்டுள்ளதாக வெள்ளை மாளிகை அறிவித்துள்ளது.

சுதந்திர வர்த்தக வலயங்கள் மற்றும் பொதுச் சேவைகள் ஊழியர் சங்கத்தின் இணைச் செயலாளர் அன்டன் மார்கஸ் இவ்விடயம் தொடர்பில் கலந்துரையாடுவதற்கு கோரப்பட்ட வாய்ப்பை இதுவரை அரசாங்கம் வழங்கவில்லை எனத் தெரிவிக்கிறார்.

"இது பாரதூரமான ஒரு பிரச்சினை. இது ஒரு தேசிய பிரச்சினை. ஏனென்றால் இதன் தாக்கம் தொழிலாளர்களை விசேடமாக பாதிக்கிறது. மட்டுமல்லாது ஏற்றுமதி துறையில் உள்ள அனைவரையும் பாதிக்கிறது. இறுதியில் இரு மக்களையும் பாதிக்கும்."

உலகளாவிய வரி நெருக்கடி தொடர்பிலான மாற்று தீர்வுகளை முன் வைக்கும் சமூக இயக்கம் பெயரில் ஒன்றிணைந்த 29 அமைப்புகள் உடனடி முன்மொழிவுகளை உள்ளடக்கி இவ்விடயம் தொடர்பில் ஜனாதிபதியுடன் கலந்துரையாடுவதற்கு ஒரு நாளை ஒதுக்கி தருமாறு கடந்த மே மாதம் ஒரு கடிதத்தைச் சமர்ப்பித்தது.

முதலில் அதற்காக ஜூன் 20 ஆம் திகதி ஒரு நேரத்தை ஒதுக்கியிருந்தாலும் அன்றையதினம் முற்பகற்பொழுதில் ஜனாதிபதி செயலகத்திலிருந்து வந்த ஒரு தொலைபேசி அழைப்பினூடாக குறித்த சந்திப்பு மறு அறிவித்தல் வரை பிற்போடப்பட்டுள்ளதாக தெரிவிக்கப் பட்டதாக சுதந்திர வர்த்தக வலயங்கள் மற்றும் பொதுச் சேவைகள் ஊழியர் சங்கத்தின் இணைச் செயலாளர் அன்டன் மார்கஸ் குறிப்பிடுகிறார். இதுவரைக்கும் அக்கலந்துரையாடலுக்காக தொழிற்சங்க தலைவர்களுக்கு எந்த விதமான வாய்ப்பையும் ஜனாதிபதி செயலகம் ஏற்படுத்தித் தரவில்லை.

வர்த்தக வரி குறித்த கலந்துரையாடல்களில் அரசாங்கத்தைப் பிரதிநிதித்துவப்படுத்த ஐக்கிய அமெரிக்காவுக்கு அனுப்பப்பட்ட குழுவில் எந்தவொரு தொழிலாளர் பிரதிநிதியும் இடம்பெறவில்லை எனக் குற்றஞ்சாட்டிய தொழிற்சங்கத் தலைவர், ஜனாதிபதிக்கு சமர்ப்பிக்கப்பட்ட கடிதத்தில் முதன்மையாகக் குறிப்பிடப்பட்டிருந்த விடயம் வரிக் கட்டணப் பிரச்சினையை ஒரு தேசிய பிரச்சினையாகக் கருதி, தொடர்புடைய அனைத்து பங்குதாரர்களையும் உள்ளடக்கிய ஒரு தேசியக்குழுவை அமைக்க வேண்டும் கோரிக்கையாகும் எனக் குறிப்பிட்டார்.

"இது ஒரு தேசிய பிரச்சினை. இந்தப் பிரச்சினைக்கு தீர்வு காணும்போது அனைத்துப் பங்குதாரர்களையும் உள்ளடக்கிய தேசிய குழு ஒன்றை அரசாங்கம் நியமிக்க வேண்டும் என நாம் குறிப்பிட்டோம்."

ட்ரம்பின் வர்த்தக வரிகள் காரணமாக எந்த ஒரு தொழிலாளருக்கும் தொழில் இல்லாமல் போகாது என அரசாங்கம் ஒரு கொள்கை ரீதியான தீர்மானத்தை மேற்கொள்ள வேண்டும், ஏதேனும் ஒரு நிறுவனத்தை நடத்திச் செல்ல முடியாத நிலைமை தோன்றுமானால் அந்த நிறுவனத்துக்கு நிவாரணம் வழங்கும் ஒரு கொள்கையை அரசாங்கம் கைக்கொள்ள வேண்டும் எனவும் உலகளாவிய வரி நெருக்கடி தொடர்பிலான மாற்று தீர்வுகளை முன் வைக்கும் சமூக இயக்கம் அக்கடிதத்தின் ஊடாக ஜனாதிபதியிடம் வலியுறுத்திக் கேட்டுக்கொண்டுள்ளது.

அமெரிக்க ஜனாதிபதியின் வர்த்தக வரிகள் தொடர்பில் இலங்கைக்கு சாதகமானதொரு தீர்வு கிடைக்கப்பெறும் என அரசாங்கத்தின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் தெரிவிக்கும் கருத்துக்களை இந்நாட்களில் கேட்கக் கூடியதாக இருந்தாலும் கிடைக்கவுள்ள சாதகமான தீர்வுகள் எவை என வினவும் சிரேஷ்ட தொழிற்சங்கத் தலைவர் அன்டன் மார்கஸ் அத்தீர்வானது இலங்கை முன்வைக்கும் தீர்வை அடிப்படையாகக் கொண்டதாகவே அமையும் என வலியுறுத்திக் கூறினார்.

நாட்டு மக்களுக்கு அரசாங்கத்தின் முன்மொழிவுகள் எவை என்பது குறித்து அறிந்துகொள்வதற்கான உரிமை இருந்தபோதிலும் அரசாங்கம் அம் முன்மொழிவுகள் எவை என அறிவிக்கவில்லை என்பதைச் சுட்டிக்காட்டும் சுதந்திர வர்த்தக வலயங்கள் மற்றும் பொதுச்சேவைகள் ஊழியர் சங்கத்தின் இணைச் செயலாளர் ஜூன் 07ஆம் திகதி கொழும்பில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின்போது தமக்கு அமெரிக்கா திருப்தியடையக்கூடிய ஒரு முன்மொழிவை அரசாங்கம் முன்வைக்கும் என்ற நம்பிக்கை அறவே இல்லை எனக் குறிப்பிட்டார்.

அரசாங்கம் ஒரு கலந்துரையாடலுக்குத் தயார் என்றால் உலகளாவிய வரி நெருக்கடி தொடர்பிலான மாற்று தீர்வுகளை முன் வைக்கும் சமூக இயக்கம் என்ற வகையில் முன்மொழிவுகளை முன்வைக்க முடியும் எனவும் அது தொடர்பில் அரசாங்கத்திடமிருந்து சாதகமான பதில் எதுவும் கிடைக்காத பட்சத்தில் அம் முன்மொழிவுகளை மக்களிடம் கொண்டு செல்வதாகவும் அவர் உறுதியாகக் கூறியுள்ளார்.

"இதனால் பாதகமான விளைவுகள் ஏற்படும் என்பதை நாம் தெளிவாக கூறுகிறோம். அரசாங்கம் அதற்கான ஆயத்தங்களை மேற்கொள்வதற்கு தயாராக இல்லை என்றால், எமக்கு இந்நாட்டின் தொழிற்சங்கங்கள் பொதுமக்கள் அமைப்புகள் மற்றும் மகளிர் அமைப்புகள் ஆகியவற்றுடன் இணைந்து செயற்பட நேரிடும். இந்நெருக்கடியின் விளைவுகளை தொழிலாளர்கள் மீதும் பொதுமக்கள் மீதும் சுமத்துவதற்கு முயற்சித்தால் சமூக அமைப்பு என்ற வகையில் மக்களை இதற்காக தயார்படுத்தி தெளிவுபடுத்தி அதற்கு எதிராக நடவடிக்கை எடுப்பதற்கு நாம் தயார் என்பதைக் கூறிக் கொள்ள விரும்புகிறோம்." என அன்டன் மார்கஸ் மேலும் குறிப்பிட்டார்.



அதேவேளை அமெரிக்க தீர்வை வரிகள் தொடர்பில் இலங்கைக்கு சாதகமான பதில் கிடைக்கப்பெறும் என தொழில் அமைச்சர் மற்றும் பொருளாதார அபிவிருத்தி பிரதி அமைச்சர் கலாநிதி அனில் ஜயந்த நம்பிக்கை தெரிவித்திருந்தார்.

## சுவாமி விவேகானந்தர்

கொல்கொத்தா சிம்லா பகுதியில் கோலோச்சிய
குணவான் வழக்கறிஞர் விசுவநாதர்
கல்வியும் கலைகளும் கற்றவர் புவனேஸ்வரி
கணவன் மனைவி இருவருக்கும்
ஆயிரத்து எண்ணூற்று அறுபத்து மூன்றில்
ஆண்மகன் ஒருவன் பிறந்தான்
பாயிரம் படைத்த பாலகன் நரேந்திரன்
பேருடன் வாழ்ந்தான் பூமியிலே!

கல்வியும் கலைகளும் கருத்தொடு கற்றே!
கண்ணிய வானாக திகழ்ந்தார்
சொல்லிலும் செயலிலும் சோடை போகா
சொன்னதைச் செய்து காட்டினார்
பட்டப் படிப்பை படித்த போதிலும்
பகட்டு வாழ்வை வெறுத்தார்
சட்டம் படிக்க தந்தை கேட்டும்
சன்மார்க்க நெறியைத் தேர்ந்தாரே!

வங்க மொழியே வாரீசு மொழியாக
வாய்த்து இருந்த போதிலும்
தங்கு தடையிலா ஆங்கிலப் புலமையால்
தத்துவம் வரலாறு கற்றாரே!
இளமையில் இராமகிருஸ்ணரை சந்தித்தே!
இந்துசமயப் போதனை பெற்றார்
வளங்கள் குறைந்த இந்தியாவை வளர்த்திட
வாழ்க்கை பண்பாடு அறிந்தாரே!

இந்தியா முழுவதும் இராப்பகல் சுற்றியே!
இனிய பிரசங்கம் செய்தார்
இந்தியர் ஏற்றிட்ட சமயத் தலைவராய்
இறவாப் புகழை அடைந்தார்
கன்னியா குமரியில் கடலின் நடுவில்
கல்லில் கடுந்தவம் செய்தார்
கிண்கிணி நாதம்போற் குரல்வளத் துடனே!
கனிவாய்ப் பாடவும் செய்வாரே!

பிரமச் சாரியாய் வாழ்நாளில் பரிமளித்தே!
பிரமச்சா ரியத்துக்கு உயிரளித்தார்
பிரசாரம் செய்வதில் பிரபலமாய் விளங்கிய
பலரும் போற்றும் பண்பாளர்!
கடமை கண்ணியம் கறையிலா வாழ்ந்து
கற்றவர் மத்தியில் கந்தமானார்
"கடவுளைத் தேடி" கவிதையும் எழுதியே!
கவிதைத் திறனைக் காட்டினாரே!

சிக்காகோ நகரிலே சொற்பொழிவாற்றியே!
சிந்தை தெளிய வைத்தார்
மக்களின் வேண்டுகோள் மனமாய் ஏற்றே!
மேலும் சிலநாட் தங்கினார்
வேதாந்தக் கருத்தை விளக்கமாய்ச் சொல்லியே!
வேதாந்த மையங்கள் நிறுவினார்
மாதக் கணக்கில் மாநகரம் தங்கியே!
மகத்தான பிரசங்கம் செய்தாரே!

குருநாதர் இராம கிருஸ்ணருக்கு குவலயத்தில்
குறைவற மடங்கள் நிறுவியே!
குருவின் பாரிய கடமை முடித்தே!
குலமகனாய் வாழ்ந்து காட்டினார்
ஆயிரத்து தொளாயிரத்து இரண்டாம் ஆண்டு
ஆடிமாதம் நான்காம் திகதி
தாயினைப் போன்ற தயாள தத்துவன்
தரணிவிட்டுத் தேயிடம் சென்றாரே!

பாயிரம் – வரலாறு, தருமன் – புத்தர், அறக்கடவுள்
கிண்கிணி – சதங்கை, தேயிடம்... இறைவனிடம்.

குவலயம் – பூமி, வேதாந்தம் – உபநிடதம்,
தத்துவன் – ஞானி.

ஆக்கம் ... பாவலர் மார்க்கம் சந்திரன்
(416) 844-7453

# ‘தமிழர’சைப் பாதுகாக்கும் குறு நில மன்னர்கள்



**“குறு நில மன்னர்கள் தமது நிலத்தில் தமிழரசுக்கு விசுவாசமாக போரிட்டு வெற்றிகளைப் பெற்றுக்கொடுத்து துரோகிகள், எதிரிகளை கிட்டவும் நெருங்க விடாது மகாராஜா, மாமன்னரின் மானம் காத்து தனி ஆட்சியமைத்த நிலையில், மகாராஜாவினதும் மாமன்னரினதும் நேரடிக் கட்டுப்பாட்டிலுள்ள நிலங்களில் ஆட்சியமைக்க மகாராஜாவும் மாமன்னரும் துரோகிகள், எதிரிகளின காலடியில் மண்டியிட்டமையும் முக்கிய சபை-களை பறிகொடுத்தமையும் மாமன்னர் தனது தொகுதி ஆட்சிகளைக்கூட பறி கொடுத்தமையும்தான் தமிழரசுக்கு பெரும் இழுக்கையும் இழிநிலையையும் ஏற்படுத்தியுள்ளது.”**

----------------------------------------------------------------------------------------------------- - கே. பாலா ----

**சி.**.வி.கே.சிவஞானத்தை மகாராஜாவாகவும் எம்.ஏ. சுமந்திரனை மாமன்னனாகவும் கொண்ட “தமிழரசு” ஆட்சியில் (கட்சியில்) சில குறுநில மன்னர்கள் மகாராஜாவுக்கோ மாமன்னருக்கோ கட்டுப்படாது தனித்து செயற்படுவதாகவும் இதனால் தமிழரசு ஆட்சியின் கட்டுக்கோப்பு பாதிக்கப்படுவதாகவும் ஆட்சி அதிகாரம் கேள்விக்குட்படுத்தப்படுவதாகவும் இதனால் தமிழரசு ஆட்சியின் மாண்புக்கு பங்கம் ஏற்படுவதாகவும் எனவே குறு நில மன்னர்களை கட்டுப்படுத்த வேண்டும் அல்லது அவர்களின் குறு நில ஆட்சி அதிகாரத்தை பறிக்க வேண்டுமென மகாராஜாவுக்கும் மாமன்னருக்கும் சாமரம் வீசும் சில தற்பெருமை விற்பன்னர்கள் தினமும் ஓதிக்கொண்டிருக்கின்றனர்.

அதாவது மகாராஜாவும் மாமன்னரும் தமிழரசு ஆட்சியை வடக்கு கிழக்கு மாகாணங்களில் விஸ்தரித்துவரும் நிலையில் இந்த தமிழரசின் குறுநில மன்னர்களின் இவ்வாறான மகாராஜா, மாமன்னருக்கு கட்டுப்படாத போக்கினால் தமிழரசு ஆட்சியை விஸ்தரிக்கும் போரில் மகாராஜாவுக்கு மாமன்னருக்கும் சில இடங்களில் தோல்விகளை சந்திக்க வேண்டிய கள நிலைமைகள் ஏற்பட்டதாகக்கூறி இந்த சாமரம் வீசும் தற்பெருமை விற்பன்னர்கள் அந்த குறுநில மன்னர்களுக்கு எதிராக மகாராஜாவையும் மாமன்னரையும் உசுப்பேத்தி குறுநில ஆட்சியை அவர்களிடமிருந்து பறிக்குமாறும் தமிழரசின் ஆட்சியிலிருந்து விலக்கி வைக்குமாறும் தூண்டி விட்டுக்கொண்டிருக்கின்றனர்.

உண்மையில் இந்த சாமரம் வீசும் தற்பெருமை விற்பன்னர்கள் கூறுவது போல் தமிழரசின் குறு நில மன்னர்களினால் மகாராஜாவினதும் மாமன்னரினதும் ஆட்சிக்கு ஏதாவது ஆபத்து, பாதிப்பு, இழுக்கு ஏற்பட்டுள்ளதா என்று பார்த்தால் நடந்து முடிந்த உள்ளூராட்சி சபைகளுக்கு ஆட்சிப் போரில் இந்த மகாராஜாவினதும் மாமன்னரினதும் ஆடை களையாது மானத்தை காத்தவர்களாகவும் வடக்கு, கிழக்கு மாகாணங்களில் பல இடங்களில் பறிபோகவிருந்த தமிழரசின் ஆட்சியை பாதுகாத்தவர்களாகவும் தனித்து நின்று போராடி தமிழரசுக்கு வெற்றியை பெற்றுக் கொடுத்தவர்களாகவும் இந்த குறு நில மன்னர்களே உள்ளதைக்காண முடிகின்றது.

இந்த தமிழரசின் மகாராஜாவுக்கும் மாமன்னருக்கும் சாமரம் வீசும் இந்த தற்பெருமை விற்பன்னர்கள் தமிழரசின் வடக்கு ஆட்சியின் கிளிநொச்சி மாவட்ட குறு நில மன்னராக சிறீதரனையும் முல்லைத்தீவு மாவட்ட குறுநில மன்னராக ரவிகரனையும் மன்னார் மாவட்ட குறுநில மன்னராக சார்ள்ஸ் நிர்மலநாதனையும் குறிப்பிடுகின்றனர் யாழ்ப்பாண மாவட்டம் மாமன்னர் சுமந்திரனின் நேரடி ஆட்சியில், கட்டுப்பாட்டில் உள்ளது. வவுனியா மாவட்டம் மாமன்னரின் விசுவாசி சத்தியலிங்கத்தின் கட்டுப்பாட்டில் உள்ளது. அதேவேளை கிழக்கு மாகாணத்தில் தலைமைக்கு கட்டுப்படாத குறுநில மன்னராக திருகோணமலை மாவட்டத்தின் குகதாசனையும் குறிப்பிடுகின்றனர். இவ்வாறான நிலையில் இந்தக் குறுநில மன்னர்களினால் தமிழரசின் உள்ளூராட்சிப்போர் வெற்றி பாதிக்கப்பட்டுள்ளதா என்று பார்த்தால் அவர்கள் தமது குறி நிலங்களுக்கான போரில் பெரு வெற்றிபெற்றுள்ள நிலையில் மகாராஜா சிவஞானமும் மாமன்னர் சுமந்திரனும் அவர்களின் விசுவாசியான சத்தியலிங்கமும் தான் தமது நிலத்துக்கான போரில் மண் கவ்வியுள்ளனர். ஆட்சிகளைப் பறி கொடுத்துள்ளனர். தமிழரசுக்கு இழுக்கை ஏற்படுத்தியுள்ளனர்.

குறு நில மன்னரான சிறீதரனின் ஆட்சியிலுள்ள கிளிநொச்சி மாவட்டத்தில் உள்ள அனைத்து சபைகளையும் அவரின் தலைமையிலான படையணி எவரினதும் துணையின்றி தனித்து வெற்றி கொண்டு தமிழரசின் தனி ஆட்சியை ஏற்படுத்தி தமிழரசின் மானம் காத்துள்ளது. குறு நில மன்னரான ரவிகரனின் ஆட்சியிலிருந்த முல்லைத்தீவு மாவட்டத்தில் உள்ள அனைத்து சபைகளையும் அவரின் தலைமையிலான படையணி எவரினதும் துணையின்றி தனித்து வெற்றி கொண்டு தமிழரசின் தனி ஆட்சியை நிறுவியுள்ளது. இவ்வாறு தமிழரசுக்கு தனிப்பெரும் வெற்றியை ரவிகரன் பெற்றுக்கொடுத்தாலும் மாமன்னரின் குடைச்சலாலும் கள நிலைவரம் தெரியாத தலையீடுகளினாலும் குறுநில ஆட்சிப் பொறுப்பிலிருந்து ரவிகரன் தானாகவே விலகியுள்ளார்.

குறு நில மன்னரான குகதாசனின் ஆட்சியிலுள்ள மூவினங்களையும் கொண்ட திருகோணமலை மாவட்டத்தில் வெருகல் பிரதேச திருகோணமலை மாநகர சபை, திருகோணமலை பட்டணமும் சூழலும் பிரதேச சபை, மூதூர் பிரதேச சபை என முக்கிய ஆட்சி அதிகாரங்களை தமிழரசு கைப்பற்றியது. அதேநேரம் மன்னார் மாவட்ட குறுநில மன்னரான சாள்ஸ் நிர்மலநாதனுடன் தமிழரசின் மகாராஜாவும் மாமன்னரும் மோதல்போக்கை கடைப்பிடித்ததால், குறுநில மன்னரின் கோரிக்கைகளை ஏற்காததால், அங்குள்ள கள நிலைவரம் தெரியாமல் தாம் நினைத்ததையே செய்ய வேண்டுமென அவரை வற்புறுத்தியதால் மன்னார் மாவட்டத்தின் ஆட்சி அதிகாரத்தை தமிழரசு பறிகொடுத்தது. முதலில் வெற்றிபெற்ற சபைகளைக்கூட மாமன்னரின் பிடிவாதத்தாலும் தலைக்கனத்தாலும் இறுதிப்போரில் தமிழரசு பறிகொடுக்க வேண்டி ஏற்பட்டது.

இவ்வாறு குறு நில மன்னர்கள் தமது அரசுக்கு விசுவாசமாக வெற்றிகளைப் பெற்றுக்கொடுத்து துரோகிகள் எதிரிகளை கிட்டவும் நெருங்க விடாது தமிழரசின் மானம் காத்த நிலையில், மகாராஜாவினதும் மாமன்னரினதும் நேரடிக் கட்டுப்பாட்டிலும் கண்காணிப்பிலுமுள்ள யாழ் மாவட்டத்திற்கான உள்ளூராட்சி சபைகளுக்கான ஆட்சியமைப்பில் மகாராஜாவும் மாமன்னரும் துரோகிகளினதும் எதிரிகளினதும் காலடியில் மண்டியிட்டமையும் முக்கிய சபைகளை பறிகொடுத்தமையும் தான் தமிழரசுக்கு பெரும் இழுக்கையும் இழிநிலையையும் ஏற்படுத்தியுள்ளது.

அதுவும் தமிழரசின் தலைநகரான யாழ் நகரின் ஆட்சியைக்கூட துரோகிகளினதும் எதிரிகளினதும் காலடியில் மண்டியிட்டு ஆதரவு பெற்றே கைப்பற்றவேண்டிய நிலையிலேயே மகாராஜாவினதும் மாமன்னரினதும் ஆட்சி பலவீனமான நிலையில் இருந்தது.சில இடங்களில் மாமன்னர் சகுனி வேலைகளில் ஈடுபட்டும் ஆட்சியை பின் கதவால் பிடித்துக் கொண்டார். அதுமட்டுமன்றி மாமன்னரால் தான் பிறந்த வடமராட்சி மண்ணின் பருத்தித்துறை, வல்வெட்டித்துறை நகரசபைகளைக் கூட கைப்பற்ற முடியவில்லை. அங்குள்ள பிரதேச சபைகளில் கூட துரோகிகள், எதிரிகளோடு சேர்ந்தே ஆட்சியமைத்துள்ளார். மாமன்னரின் தொகுதி மக்கள் கூட அவரின் பேச்சைக்கேட்க தயாரில்லாத நிலையே அங்குள்ளது. மாமன்னரின் விசுவாசியான சத்தியலிங்கத்தின் கட்டுப்பாட்டிலுள்ள வவுனியா மாவட்டத்திலும் தமிழரசு ஆட்சியை இழந்துள்ளது. இந்நிலையிலேயே வடக்கு, கிழக்கு முழுவதும் தனது பேச்சைக்கேட்க வேண்டும், குறுநில மன்னர்கள் நான் கிழிக்கும் கோட்டைதாண்டக்கூடாது என மாமன்னர் எதிர்பார்க்கின்றார்.

இவ்வாறான நிலையில்தான் தமிழரசு 58 சபைகளில் போட்டிட்டது, 12 சபைகளில் தமிழ் மக்கள் எண்ணிக்கையில் மிகவும் குறைவாகவே இருக்கின்றார்கள். ஒன்று அல்லது இரண்டு பிரதிநிதிகளைப் பெறுவதற்காகவே அவற்றில் நாம் போரிட்டோம். அப்படிப் போரிட்டுப் பிரதிநிதித்துவத்தையும் பெற்றும் கொண்டோம். மிகுதி 46 சபைகளில் 34 சபைகளில் இலங்கைத் தமிழரசுக் கட்சி நிர்வாகங்களை அமைத்துள்ளது. ஆகவே, 58 சபைகளில், 46 இல் எமது இலக்கை அடைந்துள்ளோம். மிகுதி சபைகளிலும் இரண்டாவது இடத்தை வகிக்கின்றோம். இது தமிழரசுக்கு கிடைத்த பெரு வெற்றி என்பதற்கு அப்பால், மக்கள் எமக்குக் கொடுத்திருக்கும் ஆணையாக நாம் ஏற்றுக்கொண்டு உள்ளூராட்சி சபைகளின் முழு அதிகாரங்களையும் உபயோகித்து மக்களுக்குச் சேவையாற்றுவோம் என மாமன்னர் கூறியுள்ளார்.

தமிழ் அரசு போரிடுகின்ற சகல உள்ளூராட்சி சபைகளிலும் ஆட்சியைக் கைப்பற்றும். யாழ் மாவட்டத்தில் உள்ள 17 உள்ளூராட்சி சபைகளிலும் நாம் ஆட்சியமைப்போம் என மாமன்னர் தேர்தல் போருக்கு முன்னர் சூளுரைத்திருந்தார் ஆனால் யாழ் மாவட்டத்தில் உள்ள 17 உள்ளூராட்சி சபைகளில் 11 சபைகளை மட்டுமே கைப்பற்ற முடிந்தது. அதுவும் துரோகிகள், எதிரிகளோடு சேர்ந்தே கைப்பற்றினார். ஒரு குறித்த சபையில் தமிழரசுக்கு கூடுதலான மக்கள் ஆதரவு கிடைக்கப் பெறுகின்றபோது அந்த மக்கள் தீர்ப்பை மதித்து இலங்கைத் தமிழரசுக் கட்சி ஆட்சியமைப்பதற்கு ஆதரவளிக்க வேண்டியது ஏனைய கட்சிகளின் ஜனநாயகக் கடமை என மாமன்னர் உபதேசம் செய்தார். ஆனால் அவரே ஏனைய தமிழ் தேசிய கட்சியொன்று பெரும்பான்மை பெற்ற சபையில் சட்டச் சகுனித்தனம் செய்து மக்களின் தீர்ப்பை புறக்கணித்து ஆட்சியைக் கைப்பற்றினார்.

ஆகவே “அண்ணன் எப்போது சாவான் திண்ணை எப்போது காலியாகும்” எனக் காத்திருந்து பதில் தலைவரான மகாராஜாவும் தமிழரசின் தலைவராக போட்டியிட்டும் பாராளுமன்றத்தேர்தலில் போட்டியிட்டும் இரண்டிலுமே தோல்வியடைந்த நிலையில் உள்வீட்டு சதிகளினால் பதில் பொது செயலாளரான மாமன்னரும் தமது நேரடி கட்டுப்பாட்டிலுள்ள இடங்களில் துரோகிகள், எதிரிகளோடு சேர்ந்தும் சகுனித்தனங்கள் செய்தும் சில வெற்றிகளைபெற்றுக்கொண்டு, உணர்வோடும் நேர்மையோடும் வீரத்தோடும் போரிட்டு தமிழரசாக ஆட்சிகளைக் கைப்பற்றி தமிழரசுக்கும் தமிழர்களுக்கும் பெருமை சேர்த்த, வெற்றிபெற்றுக்கொடுத்த, துரோகிகள், எதிரிகளிடமிருந்து தமிழரசை பாதுகாத்த குறுநில மன்னர்களை எதிரிகளாக்க, துரோகிகளாக்க முயன்றால் மகாராஜாவும் மாமன்னரும் அவர்களின் தமிழரசும் காணாமல்போனோரின் பட்டியலிலேயே சேரும் என்பதனை மறந்து விடக்கூடாது.

------------------------------------------------

**வீணாவின் கவிக்கணை**

**சில நேரங்களில் வினோதமாக தோன்றும் சிலரின் நடவடிக்கை, ஆனால் நாட்கள் செல்ல செல்லத் தான் உணர முடிகிறது அது தான் அவர்களின் உண்மையான குணம் என்று!**

# செம்மணி மனித புதைகுழியில் பொலித்தீனால் கட்டப்பட்ட எலும்புக் குவியல்!

இலங்கை செய்திகள்
Sri Lanka News



போரினால் பாதிக்கப்பட்ட வடக்கில் புதிதாக கண்டுபிடிக்கப்பட்ட - இலங்கையின் மிகப் பெரிய நான்காவது மனித புதைகுழி வளாகத்தின் அகழ்வாய்வு தளத்தின் இரண்டாவது பகுதியில் பொலித்தீனால் சுற்றப்பட்ட மனித எலும்புகளின் ஒரு குவியல் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

செம்மணி சித்துப்பாத்தி மனித புதைகுழியில் 2025 மே மாத நடுப்பகுதியில் இருந்து ஜூலை 10ஆம் திகதியான இன்று வரை அகழந்து எடுக்கப்பட்ட (சிறுவர்கள் உட்பட) மொத்த மனித எலும்புக்கூடுகளின் எண்ணிக்கை 65 ஆகும்.

இரண்டாம் கட்ட அகழ்வாய்வு 15 நாட்கள் இடம்பெற்ற பின்னர், அகழ்வாராய்ச்சி குழுவினருக்கு ஓய்வு அளிக்கும் வகையில், 09-07-2025 அன்றைய தினம் புதன்கிழமையன்று அகழ்வாராய்ச்சிகள் தற்காலிகமாக நிறுத்தப்பட்டன.

பொலித்தீனில் கட்டப்பட்ட எலும்புகள் அடங்கிய குவியல் தொடர்பில் ஆய்வு அறிக்கையை சமர்ப்பிக்குமாறு சட்ட வைத்திய அதிகாரிகள் குழுவுக்கு நீதவான் ஏ.ஏ. ஆனந்தராஜாவினால் உத்தரவிடப்பட்டதாக பாதிக்கப்பட்டவர்கள் சார்பாக முன்னிலையாகும் சட்டத்தரணி ரணிதா ஞானராஜா குறிப்பிட்டார்.

“அகழ்வுப்பணி பிரதேசம் இரண்டில் ஒரு பொலித்தீனினால் கட்டப்பட்ட எலும்புக் குவியல் ஒன்று கண்டுபிடிக்கப்பட்டது. அந்த தொகுதியில் சிறிய மற்றும் பெரிய எலும்புப்துண்டுகள் காணப்பட்டதால், அந்த எலும்புகள் குறித்து ஆய்வு குறித்த அறிக்கை ஒன்று நீதிமன்றுக்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென பாதிக்கப்பட்டவர்கள் சார்பில் முன்னிலையாகும் சடடத்தரணிகளால் கோரிக்கை விடுக்கப்பட்டது. அதன் அடிப்படையில் சட்ட வைத்திய அதிகாரி பிரணவன் தலைமையில் சட்ட வைத்திய அதிகாரிகள் குழு ஒன்றை உருவாக்கி, எடுக்கப்பட்ட அந்த எலும்புகளை ஆராய்ந்து ஆகக் குறைந்த மனித உடல்களின் எண்ணிக்கை தொடர்பிலான அறிக்கையை சமர்ப்பிக்குமாறு நீதவான் அறிவித்தார்.”

இதுவரை, செம்மணி சித்துப்பாத்தி மனித புதைகுழி வளாகத்தில் மூன்று இடங்களில் மனித எலும்புகள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன, மேலும் அந்த இடங்கள் தடயவியல் அகழ்வாய்வுத்தளம் 1, 2 மற்றும் 3 என பெயரிடப்பட்டுள்ளன.

மனித புதைகுழியின் இரண்டாம் கட்ட அகழ்வாய்வு குறித்த அறிக்கையை ஜூலை 15 ஆம் திகதிக்கு முன்னர் நீதிமன்றத்தில் சமர்ப்பிக்குமாறு தடயவியல் தொல்பொருள் ஆய்வாளர் பேராசிரியர் ராஜ் சோமதேவாவுக்கு நீதவான் ஏ.ஏ. ஆனந்தராஜா உத்தரவிட்டதாக, பாதிக்கப்பட்டவர்கள் சார்பாக முன்னிலையாகும் சட்டத்தரணி ரணிதா ஞானராஜா ஊடகங்களுக்கு குறிப்பிட்டார்.

நீல நிறப் பை, காலணிகள் மற்றும் சிறு பிள்ளையினுடையது என சந்தேகிக்கப்படும் பல மனித எச்சங்களுடன் கண்டெடுக்கப்பட்ட 25 ஆம் இலக்க மனித எலும்புக்கூடு குறித்த அறிக்கையை ஜூலை 15 ஆம் திகதிக்கு முன்னதாக நீதிமன்றத்தில் சமர்ப்பிக்குமாறு சட்ட வைத்திய அதிகாரி, செல்லையா பிரணவனுக்கும் நீதவான் உத்தரவிட்டுள்ளார்.

நீதி அமைச்சு 45 நாட்களுக்கு அகழ்வாய்வுக்குத் பணிக்காக கோரப்பட்ட முழுத் தொகையையும் வழங்கியுள்ளதாக ஊடகங்களுக்குத் தெரிவித்த சட்டத்தரணி ரணிதா, அந்தத் தொகையை வெளியிடவில்லை.

அகழ்வாய்வினை தடையின்றித் தொடர போதுமான நிதி வழங்கப் பட்டுள்ளதாக உறுதியளித்த காணாமல் போனோர் பற்றிய அலுவலகம் சார்பான சட்டத்தரணி மிராக் ரஹீம், மனித புதைகுழி வளாகத்திற்கு 24 மணி நேரம் பொலிஸ் பாதுகாப்பு வழங்கப்பட்டுள்ளதாக ஊடகங்களிடம் தெரிவித்துள்ளார்.

அகழ்வாய்வுக் குழுவினருக்கு ஓய்வளிக்கும் வகையில் இன்றைய தினம் (ஜூலை 10) தற்காலிகமாக நிறுத்தப்பட்ட அகழ்வுப் பணிகள் ஜூலை 21 ஆம் திகதி மீண்டும் ஆரம்பிக்கப்படும் என ஊடகங்களிடம் தெரிவித்த சட்டத்தரணி வி.எஸ். நிரஞ்சன், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் தொல்லியல் பிரிவு மாணவர்களுடன், வைத்தியத்துறை மாணவர்களும் இன்று அகழ்வுப் பணிகளில் பங்கேற்றதாக மேலும் குறிப்பிட்டார்.





நீதிமன்றத்தால் குற்றம் இடம்பெற்ற இடமாக அறிவிக்கப்பட்டுள்ள செம்மணி சித்துப்பாத்தி மனித புதைகுழி வளாகத்தில் தற்போதுள்ள மூன்று சிசிடிவி கமராக்களுடன் மேலதிகமாக இரண்டு சிசிடிவி கமராக்கள் பொருத்தப்பட உள்ளதாக அகழ்வாய்வுப் பணிகளை அறிக்கையிட்ட உள்ளூர் ஊடகவியலாளர்கள் தெரிவிக்கின்றனர்.

இலங்கை செய்திகள்
Sri Lanka News

# மட்டக்களப்பில் இருவரிடம் சிஜடி என பொய்கூறி பணம்வாங்கி மோசடி செய்த நபருக்கு 14 நாட்கள் விளக்கமறியல்

**கனகராசா சரவணன்**

மட்டக்களப்பில் இருவரிடம் விசேட குற்ற விசாரணை பிரிவு சிஜடி என பொய்யான தகவலைச் சொல்லி ஒரு இலச்சத்து 28 ஆயிரம் ரூபாவை வாங்கி மோசடி செய்த சம்பவம் தொடர்பாக கைது செய்யப்பட்ட போலி நபர் ஒருவரை எதிர்வரும் 21ம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு மட்டக்களப்பு நீதவான் நீதிமன்ற நீதவான் செவ்வாய்க்கிழமை 8ம் திகதி உத்தரவிட்டார்.

மட்டக்களப்பு தலைமையக பொலிஸ் பிரிவிலுள்ள பிரதேசத்தைச் சேர்ந்த இருவர் வெளிநாட்டு முகவர் ஒருவரிடம் வெளிநாடு செல்வதற்காக பணத்தை கொடுத்து எமாறிய நிலையில் அந்த வெளிநாட்டு முகவருக்க எதிராக மாவட்ட விசேட குற்ற விசாரணைப் பிரிவில் முறைப்பாடு செய்தனர்.

இதனை அறிந்து கொண்ட அந்த பகுதியைச் சேர்ந்தவரும் முன்னாள் இராணுவ புலனாய்வு பிரில் செற்பட்டுவந்தவர் அவர்களிடம் நெருங்கி தான் விசேட குற்ற விசாரணைப் பிரிவு சிஜடி எனவே குறித்த வெளிநாட்டு முகவரிடம் உடன் பணத்தை பெற்று தருவாகவும் உடன் இந்த பணத்தை வாங்கி தரமுடியும் அதற்கு பணம் தரவேண்டும் என தெரிவித்துள்ளார்.

இதனையடுத்து போலியான சிஜடி யிடம் ஒருவர் ஒரு இலச்சத்து 25 ஆயிரம் ரூபாவையும் மற்றவர் 3 ஆயிரம் ரூபா உட்பட ஒரு இலச்சத்து 28 ஆயிரம் ரூபாவை வழங்கியுள்ளனர்.

இந்த நிலையில் வெளிநாட்டு முகவரிடம் பணத்தை வாங்கி கொடுக்காமல் போலியான சிஜடி நீண்ட நாட்களாக ஏமாற்றி வந்துள்ளதையடுத்து அவருக்கு எதிராக பணத்தை கொடுத்து ஏமாறிய இருவரும் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்தனர்.

இதனையடுத்து போலி சிஜடியாக நாடகமாடி வந்த அவரை அவரது வீட்டில் வைத்து திங்கட்கிழமை (7) இரவு கைது செய்து விசாரணையையடுத்து அவருக்கு எதிராக வழக்கு தாக்குதல் செய்து செவ்வாய்கிழமை மட்டக்களப்பு நீதவான் நீதிமன்றில் நீதவான் முன்னிலையில் ஆஜர்படுத்தப்பட்டபோது அவரை எதிர்வரும் 21ம் திகதி-வரை 14 நாட்கள் விளக்கமறியலில் வைக்குமாறு நீதவான் உத்தரவிட்டார்.





**Sapphire Banquet & Catering**

**Specializing in Videography & Photography**

- Anniversary Party - Birthdays
- Graduation Party
- Bridal Shower - Engagement - Wedding Showers

SHIVA SUBRAMANIAM (647) 406-4868

இலங்கை செய்திகள் Sri Lanka News

# விவசாயிகள் எதிர்கொள்ளும் இடர்பாடுகளுக்கு நிரந்தரத் தீர்வை வழங்குங்கள் என்கிறார் சிறீதரன் எம்.பி!

யாழ்ப்பாண மாவட்ட விவசாயிகள் எதிர்கொள்ளும் பிரச்சினைகள் தொடர்பில் உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படாமையால், வடக்கின் உப உணவுப் பயிர்ச்செய்கை வீழ்ச்சியடைந்து வருவதுடன், விவசாயிகளின் வாழ்வாதாரமும் முற்றாகப் பாதிப்படைந்து வருவதாக நாடாளுமன்ற உறுப்பினரும், இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் நாடாளுமன்றக் குழுத் தலைவருமான சிவஞானம் சிறீதரன் தெரிவித்துள்ளார்.

9ம் திகதி புதன்கிழமை அன்றையதினம் நடைபெற்ற பாராளுமன்ற அமர்வில், பாராளுமன்ற நிலையியற் கட்டளை 27.2 இன் கீழ், பாராளுமன்றக் குழுத் தலைவராக, வர்த்தக, வாணிப, உணவுப் பாதுகாப்பு மற்றும் கூட்டுறவு அபிவிருத்தி அமைச்சர் கௌரவ வசந்த சமரசிங்ஹ அவர்களிடம் வாய்மொழி மூல விடைக்கான வினாக்களை முன்வைக்கும் போதே அவர் இவ்விடயம் தொடர்பில் வலியுறுத்தியுள்ளார்.

இவ்விடயம் சார்ந்து, அண்மையில் யாழ்ப்பாண மாவட்டத்தின் அச்சுவேலி மற்றும் பத்தைமேனி பிரதேச விவசாயிகளுடன் நடைபெற்ற சந்திப்பை மேற்கோள்காட்டி அவர்களால் சுட்டிக்காட்டப்பட்ட விடயங்கள் சார்ந்து அவர் மேலும் குறிப்பிட்டதாவது,

விவசாய மாவட்டமான யாழ்ப்பாணத்தில் நெற்செய்கைக்கு மேலாக உப உணவுப் பயிர்களான சின்ன வெங்காயம், வேதாளக்காய் வெயங்காயம், உருளைக்கிழங்கு, திராட்சை, கரட், கரணைக்கிழங்கு, பீற்றூட், வாழை, மரவள்ளி, மிளகாய் போன்ற பயிர்கள் வலிகாமம் வடக்கு, வலிகாமம் கிழக்கு, வலிகாமம் மேற்கு, வடமராட்சி தெற்கு மேற்கு, வடமராட்சி கிழக்கு, தீவகம், தென்மராட்சி போன்ற பெரும் பிரதேசங்களின் பேரூர்களில் செய்கை பண்ணப்பட்டு வருகின்றன.

குறிப்பாக, இவ்வூர்களில் வாழும் விவசாயிகள் சின்ன வெங்காயம் உற்பத்தி செய்து, அறுவடை செய்யும் போது இறக்குமதி வரி விதிப்பு செய்யப்படுவது வழமை. ஆனால் கடந்த மூன்று வருடங்களாக இவ்வரி விதிப்பு நடைமுறைப்படுத்தப்படவில்லை. காலநிலைப் பாதிப்புகளையும் கடந்து உப உணவுப் பயிர்ச்செய்கையில் ஈடுபடும் யாழ்ப்பாண விவசாயிகளின் நடைமுறை இடர்பாடுகள் எவை என்பதையும், யாழ்ப்பாணச் சின்ன வெங்காயத்துக்கான கேள்வி தற்போது வெகுவாகக் குறைந்துள்ளதையும், கடந்த இரண்டு வருடங்களாக உற்பத்திக்கான மானிய அடிப்படையிலான விதை உருளைக்கிழங்கு கிடைக்கப்பெறவில்லை என்பதையும், இத்தகைய காரணிகளால் விவசாயிகளின் வாழ்வாதாரம் முழுமையாக பாதிக்கப்பட்டுள்ளது என்பதையும் சுட்டிக்காட்டியதுடன் சின்ன வெங்காயம் அறுவடை செய்யப்படும் காலத்தில், விவசாயிகளைப் பாதுகாக்கும் வகையில் அரசால் இறக்குமதிகளுக்கு எதிரான வரி விதிக்கப்படுமா? என்பதையும், கடந்த மூன்று ஆண்டுகளாக ஏன் இந்த வரி விதிப்பு நடைமுறைப்படுத்தப்படவில்லை என்பதையும் அமைச்சர் சபைக்கு அறிவிக்க வேண்டும் எனவும் வலியுறுத்தினார்.

அதேவேளை, இவ்வருடம் தொடர் மழை காரணமாக சின்ன வெங்காயச் செய்கையில் ஈடுபடும் விவசாயிகள் தங்கள் முதலை முழுமையாக இழந்துள்ளதுடன், உற்பத்திப் பொருளின் தரமும் குறைந்துள்ளது. இத்தகைய பாதிப்பை எதிர்கொண்டுள்ள விவசாயிகளின் வாழ்வாதாரத்தை மீளமைக்கும் வகையில் நட்டஈடு வழங்கும் திட்டம் அரசிடம் உள்ளதா என்றும் காலாகாலமாக யாழ்ப்பாண மாவட்டத்தில் சிறப்பாக உற்பத்தி செய்யப்பட்ட உருளைக்கிழங்குச் செய்கை பாதிப்படையும் வகையில், மானிய அடிப்படையிலான விதைக் கிழங்கு கிடைக்கப் பெறாமைக்கும், தரமான புதிய இனங்கள் அறிமுகம் செய்யப்படாமைக்கும் காரணம் என்ன என்பதை அமைச்சர் இச்சபைக்கு அறிவிப்பாரா என்றும் கேள்வி எழுப்பியிருந்தார்.

பார உலோகம் நிறைந்துள்ளதாக கூறப்படுவதன் அடிப்படையில் கிருமிநாசினிப் பயன்பாடு குறைவடைந்துள்ள நிலையில், இறக்குமதி செய்யப்படும் வெங்காயத்திற்கு பார உலோகம் உண்டா - இல்லையா என்பதை மக்களுக்கு எவ்வாறு தெளிவுபடுத்துவது என்பதற்கு அமைச்சரின் பதில் என்ன என்றும், வடக்கு மாகாணத்தில் மட்டும் இந்த உற்பத்திப் பொருட்களுக்கு பத்திற்கு ஒன்று கழிவு செய்யப்படுகிறது. ஆனால் இந்தக் கழிவுமுறை தம்புள்ள, மற்றும் ஏனைய நாடுகளிலிருந்து இறக்குமதி செய்யப்படும் வெங்காயங்களுக்கு ஏன் பின்பற்றப்படுவதில்லை என்றும் சிறீதரன் எம்.பியால் எழுப்பப்பட்ட கேள்விகளுக்கு எதிர்வரும் வெள்ளிக்கிழமை பதிலளிப்பதாக உணவுப் பாதுகாப்பு அமைச்சர் தெரிவித்தமையும் குறிப்பிடத்தக்கது.

# தமிழ் பேசும் பாராளுமன்ற உறுப்பினர் ஒருவரின் தலையீட்டல், தனியார் காணியை அபகரிக்கும் பொலிஸாரின் முயற்சி தடுக்கப்பட்டது



வடக்கில் ஒரு தனியார் காணியை பொலிஸார் கையகப்படுத்துவதைத் தடுக்கும் வகையில், அரசாங்கத்தின் உயர்மட்டத்திடமிருந்து உத்தரவைப் பெறுவதற்கு, ஒரு தமிழ் மக்களின் தலைவர் ஒருவர் நாடாளுமன்றம் வரை செல்ல வேண்டிய நிலைமை ஏற்பட்டுள்ளது.

ஓமந்தை பொலிஸ் நிலையத்திற்கு அருகில் உள்ள தனக்குச் சொந்தமான சுமார் அரை ஏக்கர் தனியார் காணியை பொலிஸார் கையகப்படுத்த முயற்சிப்பது குறித்து காணி உரிமையாளர் வவுனியா பிரதேச செயலாளரிடம் முறைப்பாடு செய்திருந்தார்.

ஜூலை 7ஆம் திகதி, வவுனியா பிரதேச செயலாளர் இ.பிரதாபன், பொலிஸ் நிலையத்திற்கு அருகில் உள்ள காணியை கையகப்படுத்தி மேம்படுத்துவதை உடனடியாக நிறுத்துமாறு பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரிக்கு கடிதம் மூலம் தெரிவித்திருந்தார்.

ஜனநாயக்க தமிழ் தேசிய கூட்டணியின் நாடாளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதனின் கேள்விகளுக்கு முகங்கொடுத்த நிலையில், தேசிய மக்கள் சக்தி அரசாங்கத்தின் இரண்டு முக்கிய அமைச்சர்கள் ஜூலை 8ஆம் திகதி நாடாளுமன்றத்தில் காணியை கையகப்படுத்தும் முயற்சியை நிறுத்துமாறு பொலிஸாரிடம் தெரிவித்ததாக குறிப்பிட்டனர்.

காணியை அபகரிக்க பொலிஸார் மேற்கொண்ட முயற்சி குறித்து சபையில் நாடாளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன் எழுப்பிய கேள்விக்கு பதிலளித்த சபைத் தலைவர் பிமல் ரத்நாயக்க, கூட்டுறவு அமைச்சர் உபாலி சமரசிங்கவால் “தனியார் காணியில் பொலிஸாரால் மேற்கொள்ளப்படும் சுத்தப்படுத்தும் பணியை” மேற்கொள்ள வேண்டாம் என அறிவிக்கப்பட்டுள்ளதாகக் கூறினார்.

காணி கையகப்படுத்துதலை நிறுத்த பொலிஸார் தேவையான நடவடிக்கைகளை எடுத்துள்ளதாக பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் ஆனந்த விஜேபாலவும் தெரிவித்தார்.

“வவுனியாவில் உள்ள ஓமந்தை பொலிஸ் நிலையத்தைச் சுற்றியுள்ள காணியை, பொலிஸார் துப்பரவாக்குவதாக தான் நினைப்பதாக, அந்த பிரதேசத்தைச் சேர்ந்த எங்கள் நாடாளுமன்ற உறுப்பினர்கள் எங்களுக்குத் தெரிவித்தனர். இது குறித்து இன்று ஐஜிபியிடம் தெரிவித்தேன். அது நிறுத்தப்பட்டது. இதுவரை எந்தப் பிரச்சினையும் இல்லை. அதன் சட்டரீதியிலான நிலைமையின் கீழ் நீங்கள் மேலும் நடவடிக்கை எடுக்கலாம். அது தனியார் காணியாக இருந்தால், அதற்குத் தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்படும். அதை கையகப்படுத்த பொலிஸார் நடவடிக்கை எடுக்க மாட்டார்கள்.”


முப்படைகள், மகாவலி அபிவிருத்தி அதிகார சபை, சுற்றுலா அபிவிருத்தி அதிகாரச் சபை, தொல்லியல் திணைக்களம் மற்றும் வன பாதுகாப்புத் திணைக்களம் மற்றும் வனஜீவராசிகள் திணைக்களம் ஆகியவை வடக்கு மற்றும் கிழக்கில் உள்ள தமிழ் மக்களின் காணிகளை வலுக்கட்டாயமாக கையகப்படுத்துவதாக தொடர்ந்து குற்றம் சாட்டப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

TRADITIONAL CHINESE
ACUPUNCTURE THERAPY

| | |
|---|---|
| எல்லாவிமான வலிகளுக்கும் | All Pain & Aches, Arthritis |
| ஆஸ்மா, பீனிசம், ஒவ்வாமை | Asthma, Sinusitis, Rhinitis Allergies |
| மனத்தளர்ச்சி, தலைவலி | Stress, Migraine & All Types of Headaches |
| நீரிழிவு நோய், வயிற்றுவலி | Diabetes, Gastric Pain, Ulcer |
| மாதவிடதய் சம்மந்தமானவையும் | Menstruation |
| உடற்பருமன் குறைத்தல் | Weight Loss |

முதலான சகலவிதமான நோய்களுக்கும்
Mrs. K. Vasanthakumar ஐ
Acupuncturist (R.A.C)
தொடர்புகொள்ளவும்.
(416) 754-4024
5200 Finch Ave., East -- Suit #349
Scarborough, ON M1S 4Z5

# 20 வயதுப் பெண்கள் இலங்கையின் தேசிய அணியில் தெல்லிப்பளை மகாஜனாக் கல்லூரி வீராங்கனைகள் மூவர்



தெற்காசிய உதைபந்தாட்ட வெற்றிக்கிண்ணப் போட்டியில் பங்குபற்றும் இலங்கை 20 வயதுப் பெண்கள் தேசிய அணியில் மகாஜனக் கல்லூரி வீராங்கனைகள் மூவர் இடம்பிடித்துள்ளனர்.

J.லயன்சிகா, T.சஸ்மி, S.கம்சியா ஆகிய வீராங்கனைகளே இடம்பெற்றுள்ளனர். இப்போட்டி பங்களாதேஸில் ஜூலை 11 தொடக்கம் 21 வரை நடைபெறவுள்ளது. இவ்வீராங்கனைகளை வாழ்த்திப் பாராட்டுவதோடு, இவ்வீராங்கனைகளை தேசிய அணியில் இடம்பிடிக்கும் வகையில் சிறப்பான பயிற்சிகளை வழங்கிய பாடசாலைப் பயிற்றுநர் திரு. சி.சாந்தகுமார் அவர்களையும் மகாஜனாக் கல்லூரி பெற்றோர் - ஆசிரியர் மற்றும் மாணவச் சமூகங்கள் பாராட்டியுள்ளன.





# இவ்வார ராசிபலன்

**11-07-2025 வெள்ளி தொடக்கம் 17-07-2025 வியாழன் வரையும்**

**மேஷம்:** விசேஷமான பலன் கிடைக்கும் வாரம். நாடிய பொருள் கிடைக்கும். முன் கோபத்தை தவிர்க்க வேண்டும். சுபக்காரியம் தடைப்படும். பழிச்சொல் தேடி வரும். மனவேதனை அதிகரிக்கும். உத்தியோக சோதனை ஏற்படும். இழுபறி நிலை நீங்கும். உறவினர்களால் பாதகம் உண்டாகும். உஷ்ண நோய் ஏற்படும். புதிய வாய்ப்புக்கள் தேடி வரும். கடன் வாங்க நேரிடும். அரசு வகை ஆதாயம் கிட்டும். வெற்றிகள் குவியும். கூட்டுத் தொழிலில் லாபம் தரும். பணிமாற்றம் ஏற்படும். உத்தியோகத்தில் திருப்தி ஏற்படும். குடும்ப வாழ்வில் வளம் பெருகும். சோதனைகள் குறையும். தொழில் போட்டி மறையும். எதிர்பாராத நன்மை கிட்டும். கல்விச் சலுகைகள் கிடைக்கும். காதலும், நட்பும் மலரும் காலம். வெளியூர் பயணம் லாபம் தரும். தந்தை உடல் நிலையில் கவனம் தேவை. வாகனங்களில் முதலீடு உண்டாகும். சொந்த பந்தங்களால் உதவி உண்டு. கலைஞர்களுக்கு புகழ் கூடும். திட்டமிட்ட காரியம் வெற்றி முகமாகும். வீடு, மனை யோகம் உண்டு. நட்பு வட்டம் விரிவடையும். தொழிலில் முதலீடு செய்வதை தவிர்க்கவும். சிரமப்பட்ட காரியங்கள் நிறைவேறும். வி.ஐ.பியின் தொடர்பு கிடைக்கும். வாழ்க் கைத் துணையால் வளம் பெருகும். அணிமணிகள் சேரும். பிரிந்த குடும்பம் ஒன்று சேரும். நிர்வாகப் பொறுப்புக்கள் கூடும். விருந்தினர் வருகை உண்டு. பொருளாதார வளம் மேம்படும். வயிறு சம்பந்தமான நோய் வந்து நீங்கும். விருந்தினர் வருகை உண்டு. விளையாட்டுத் துறையில் வெற்றி கிட்டும். வரவுகள் மிகுதியாகும். விவேகமான செயல்பாடுகள் அவசியம். சொந்த வீடு வாங்க முயற்சி செய்யலாம். திருமண முயற்சி வெற்றியை தேடி வரும்.

வழிபட வேண்டிய தெய்வம்: ஆஞ்சநேயர், அதிர்ஷ்ட எண்: *4,3,5,9*

அதிர்ஷ்ட நிறம்: பால் வெண்மை, அதிர்ஷ்ட எழுத்துக்கள்: K,Q

**ரிஷபம்:** தொழில் முன்னேற்றம் கிடைக்கும் வாரம். இதமான நிகழ்வுகள் இஷ்டம் போல் நடந்தேறும் காலம். நல்ல மனிதர்களின் நட்பு பெருகும். நலிவுற்ற தொழில் பொலிவு பெறும். புதிய ஆடைகள் சேரும். அலுவலகப் பணியில் ஈடுபாடுகள் அதிகரிக்கும். விரக்திகள் குறைந்து திருப்தி பெருகும். வாகனச் செலவுகள் ஏற்படும். ஆடம்பர சுகங்கள் கூடும். காதலில் புரிந்துணர்வு இருக்கும். உணவுப் பிரியம் அதிகரிக்கும். மாலை நேரத்தில் மங்களச்செய்தி வரும். பிள்ளைகளால் மதிப்பு உயரும். பிரயாணம் தொல்லைத் தரும். பெயர், புகழ், கௌரவம் செல்வாக்கு உயரும். பொது விஷயங்களில் நாட்டம் ஏற்படும். மதிப்பும், மரியாதையும் உயரும். தொழிலில் முன்னேற்றம் தரும். வேண்டாத உறவுகளை தவிர்க்கவும். விவசாயிகளின் கோரிக்கை நிறைவேறும். டிரான்ஸ்போர்ட் தொழில் லாபம் தரும். கண்ணாடித் தொழில் முன்னேற்றம் தரும். நல்லோர்களின் வாழ்த்து கிடைக்கும். உடன்பிறப்புக்களால் உதவிகள் கிட்டும். வயிற்று உபாதை தோன்றி மறையும். கடல் போல் லாபம் சேரும் காலம். பணநடமாட்டம் கூடும். இயற்கை காட்சிகளை கண்டு இன்புறுவீர்கள். மனக்கசப்பு நீங்கும். பாக்யவான்களை சந்திப்பீர்கள். சகோதரியினால் நன்மை உண்டு. குடும்ப மனநிறைவு ஏற்படும். அடுத்தவர் பிரச்சனையில் தலையிடுவதை தவிர்க்கவும். அந்நியர் நட்பு ஆக்கம் தரும். பயணத்தால் அனுகூலமுண்டு. முத்தான வாய்ப்புக்கள் பெருகும். புனிதமான காரியங்களில் ஈடுபடுவீர்கள். அந்நியர் நட்பு ஆக்கம் தரும். கற்ற வித்தையால் கௌரவம் சேரும். நிர்வாகத்திறன் அதிகரிக்கும். அரசாங்க அனுகூலம் உண்டு. முன்னேற்றம் காணும் முக்கியமான நாளாக அமையும்.

வழிபட வேண்டிய தெய்வம்: ஸ்ரீநித்ய கல்யாணப் பெருமாள்

அதிர்ஷ்ட எண்: *6,4,3,9*, அதிர்ஷ்ட நிறம்: ஊதா, அதிர்ஷ்ட எழுத்துக்கள்: E,V

**மிதுனம்:** சுபவிரயம் ஏற்படும் வாரம். பெண்களுக்கு நாவடக்கம் தேவை. அச்சுத்தொழில் ஆதாயம் தரும். பிரியமானவர்களை சந்திப்பீர்கள். அரசு வழி ஆதாயம் உண்டு. உணவுவிடுதி லாபம் தரும். உழைப்பிற்கான பலனை பெறுவீர்கள். துன்பங்கள் விலகும். கலைந்த குடும்பங்கள் ஒன்று சேரும். கடன்சுமைகளில் இருந்து விடுபடுவீர். அரசியலில் புகழ் கூடும். வீண்பழி அகலும். மனைவியின் அன்பு அதிகரிக்கும். மற்றவர் தொல்லைகள் குறையும். ஜவுளித்தொழில் உயர்வு தரும். காரியம் இழுபறியாகும். உடல் உஷ்ணம் ஏற்படும். பொருளாதார உயர்வு ஏற்படும். இனிமையான எண்ணங்கள் உதயமாகும். பழையக்கடன் ஒழியும். வாழ்க்கை வசதி பெருகும். முனைந்து செயல்பட்டு முன்னேற்றம் காணக்கூடிய அற்புதமான காலம். நீண்ட நாள் கனவு நிறைவேறும். மனக்கசப்பு ஏற்படும். காதலில் கவனம் தேவை. பயணங்களால் பணம் கரையும். வாக்குவாதத்தை தவிர்ப்பது நல்லது. பழைய பாக்கிகள் வசூலாகும். கணவன், மனைவி வாக்குவாதம் ஏற்படும். கலைஞர்களுக்கு வாய்ப்பு வரும். பழைய நண்பர்களை சந்திப்பீர்கள். கருத்து வேறுபாடுகள் அகலும். மனைவி உறவு சீராகும். அலைச்சல் குறையும். பழைய பகை மாறும். வாய்ப்புக்கள் தேடி வரும். வேலைபளு அதிகரிக்கும். பங்குச்சந்தையில் லாபம் கிட்டும். பொதுப்பணிகளில் ஆர்வம் கூடும். சோதனைகள் சாதனையாக மாறும். பெரியோர்களின் வாழ்த்துக்கள் கிட்டும். விளையாட்டுத்துறையில் வெகுமதி கூடும். வயிறு சம்பந்தமான நோய் விலகும். கால்நடைகளால் பலன் உண்டு. வழக்கு வெற்றித் தரும். சொத்துப் பிரச்சனைத் தீர்வுக்கு வரும். சுபகாரிய செய்தி வரும்.

வழிபட வேண்டிய தெய்வம்: உலகளந்த பெருமாள், அதிர்ஷ்ட எண்: *9,5,4,3*

அதிர்ஷ்ட நிறம்: இளம் ஊதா, அதிர்ஷ்ட எழுத்துக்கள்: W,H

**கடகம்:** உண்மையான நன்மைகளை சந்திக்கும் வாரம். விபரீத எண்ணங்கள் விலகும். நற்காரியங்களில் ஈடுபடுவீர்கள். குடும்ப நலம் மகிழ்ச்சி தரும். வருமானம் உயரும். சச்சரவுகள் அகலும். மாணவர்களுக்கு கல்வியில் கவனம் தேவை. உறவினர்களின் வருகை உண்டு. வாய்ப்பேச்சில் நிதானம் தேவை. சேமிப்பு உயரும். நோய், நொடிகள் அகலும். வீண் வம்புகள் அகலும். ஆடை, அணிகலன் சேர்க்கையுண்டு. சுபகாரியச் செய்தி வரும். வேலைதிறன் கூடும். தொழில் மாற்றம் ஏற்படும். தொலைபேசித் தகவல் நல்ல செய்தி தரும். கலைஞர்களுக்கு வாய்ப்புக்கள் தேடி வரும். மனம் மகிழும் நாளாக அமையும். உள்ளம் பூரிப்படையும். மனைவியால் அமைதி கெடும். முக்கிய எண்ணங்கள் நிறைவேறும். உடன்பிறந்தோரால் உதவி கிடைக்கும்.




ஒரு மனிதனை யார் கைவிட்டாலும் ஆன்மீகம் கைவிடாது! என்ற உறுதியோடு உங்கள் 'ராஜயோகம்'

"ஜோதிட மகரிஷி"

Dr. K. RAM.Ph.D (USA)

தொடர்புக்கு: 0091-9840160068 9940431377


பெற்றோர்களால் பாராட்டு பெறுவீர்கள். சொத்து பிரச்சனை தீர்வுக்கு வரும். பங்குச்சந்தை வியாபாரம் லாபம் தரும். வழக்கு வெற்றியைத் தரும். இஷ்டம் போல் வாழ்க்கை அமையும். தனவரவில் தாமதம் ஏற்படும். அரசியல் ஆதாயம் உண்டு. வேண்டாத நட்பு விலகும். குடும்ப சச்சரவு ஏற்படும். வருமான வரி தொல்லை ஏற்படும். புத்திரர் வழியில் தொல்லையுண்டு. கடன் வாங்க நேரிடும். ஆடம்பர பொருள் சேரும். வாழ்வில் மேன்மை உண்டாகும். வீண் பேச்சைத் தவிர்க்கவும். சொந்த முயற்சியால் முன்னேற்றம் காணக்கூடிய காலம். இனிய எண்ணம் உதயமாகும். அந்தஸ்து அதிகமாகும். சந்தோஷம் அதிகமாகும். உத்தியோகத்தில் சலுகைகள் கிடைக்கும். மாணவர்கள் திறமை பளிச்சிடும். ஆண்களுக்கு ஆதாயம் உண்டு. காரியம் நிறைவேறும். வீண் பழி அகலும். மங்கள செய்தியால் மனம் மகிழும். பெண்களுக்கு ஆனந்தம் குடிக்கொள்ளும்.

வழிபட வேண்டிய தெய்வம்: முருகர், அதிர்ஷ்ட எண்: *2,7,9,1*

அதிர்ஷ்ட நிறம்: வெண்பட்டு, அதிர்ஷ்ட எழுத்துக்கள்: G,J

**சிம்மம்:** அசையா சொத்துக்கள் சேரும். எதிர்பார்த்த தொகை தாமதமாகும். திருடு போன பொருள் மீண்டும் கிடைக்கும். பெண்களுக்கு மங்கள செய்தி வரும். மற்றவர்களிடத்தில் அன்பாக நடந்துக் கொள்வீர்கள். இறை விழிப்புணர்வு கூடும். தேவையில்லா பயங்கள் நீங்கும். மனோ தைரியம் கூடும். திருமகள் கிருபைகள் உண்டு. உடல்நலம் கவனம் தேவை. பிள்ளைகளிடத்தில் அன்புடன் நடந்துக் கொள்வீர்கள். புதுதொழிலை ஆரம்பிக்க முன் வருவீர்கள். மனதில் அளவில்லா சந்தோஷம் உண்டாகும். தொலைபேசித் தகவல் தொல்லை தரும். உணவுத்தொழில் உயர்வு தரும். புதிய எண்ணங்கள் அதிகமாகும். பங்குச்சந்தைத் தொழில் பணம் தரும். குடும்பத்தில் கருத்து வேறுபாடு தோன்றும். எதிர்பார்த்த தொகை தாமதமாகும். பிறர்க்கு உதவி செய்வதால் நன்மை உண்டாகும். உறவினரால் முன்னேற்றம் உண்டு. பொன்னான நேரங்களாக அமையும். உற்சாகத்தோடு செயல்படுவீர்கள். மங்களச்செய்தி வரும். வீண் வம்பு விலகும். சேய் நலம் கூடும். குடும்ப சண்டைகள் முற்றிலும் அகன்றுவிடும். குழந்தைகளால் அல்லல் ஏற்படும். உடல்நோயிலிருந்து பூரண குணமடைவீர்கள். உணவு பிரியம் அதிகரிக்கும். ஆதலால் கவனம் தேவை. தொல்லைகள் குறையும். தோல்விகள் விலகும். ஏற்றமான தருணம் அமையும். காதல் விவகாரத்தில் நன்மை பயக்கும். நினைத்த தொழில் அமையும். சமுதாய விழிப்புணர்வோடு செயல்படுவது நல்லது. அடுத்தவர் தலையீட்டை தவிர்க்கவும். ஆடம்பர எண்ணம் அதிகரிக்கும். பதவி வாய்ப்பு வரும். வீடு தேடி வெற்றி வரும். மருத்துவச் செலவு உண்டு. பொன், பொருள் சேர்க்கையுண்டு. தொல்லைத் தந்தவர் விலகிடுவர். பிள்ளைகளால் பெருமை சேரும். மாற்று இன நட்பு பெருகும். ஆடம்பர செலவு அதிகரிக்கும்.

வழிபட வேண்டிய தெய்வம்: சந்திர பகவான், அதிர்ஷ்ட எண்: *7,9,5,1*

அதிர்ஷ்ட நிறம்: ஊதா நிறம், அதிர்ஷ்ட எழுத்துக்கள்: A,K

**கன்னி:** அன்பும், அரவணைப்பும் கிடைக்கும் வாரம். தொழில் வளர்ச்சி மேன்மை தரும். தொல்லைத் தந்தவர் விலகி விடுவர். பிள்ளைகளால் பெருமை சேரும். வங்கி சேமிப்பு உயரும். வயிற்று உபாதை வந்து சேரும். மாற்று இன நட்பு பெருகும். ஆடம்பரச் செலவு அதிகரிக்கும். களவுப்போன பொருள் திரும்ப கிடைக்கும். பங்குச்சந்தையில் லாபம் கிட்டும். ஆனந்தம் குடிக்கொள்ளும். அணிகலன் ஆர்வம் அதிகரிக்கும். பெண்களின் ஆலோசனைகள் பூர்த்தியாகும். குடும்பத்தில் கருத்து வேறுபாடுகள் தோன்றும். சகோதர வகையில் சகாயம் கிடைக்கும். மனைவியால் மதிப்பு உயரும். தெம்பும்இ தைரியமும் கூடும். மங்கையருக்கு திருமண பாக்கியம் கூடும். பூமி வாங்கும் யோகம் உண்டு. கண்ணாடித் தொழில் முன்னேற்றம் தரும். புத்தி சாதுர்யம் கூடும். இளைஞர்களுக்கு படிப்பிற்கு ஏற்ப உத்தியோகம் கிட்டும். அலைபேசி தகவல் ஆதாயம் தரும். பயணத்தால் வெகுமதி கிடைக்கும். எதிரிகளின் தொல்லை குறையும். பணிவும், துணிவும் கூடும். புதிய கடன் வாங்க நேரிடும். வாழ்வில் புகழ் கூடும். எதிரிகளால் ஏற்றம் கிட்டும். ஆன்மீக சிந்தனை மேலோங்கும். மங்களச் செய்தியால் மனம் மகிழும். காரிய வெற்றி உண்டு. இல்லத்தில் சந்தோஷம் அதிகரிக்கும். ஆபரணப் பொருள் களவு போகும். நெருப்பினால் அபாயம் உண்டு. மறைமுக எதிர்ப்புகள் உருவாகும். அடுத்தவர் தலையீடு குறைக்கவும். செலவுகள் அதிகமாகும். உறவினர் வருகை உற்சாகம் தரும். நண்பர்களால் நன்மையுண்டு. நட்டமில்லாத நன்மை அதிகரிக்கும். திட்டமிட்ட செயல் வெற்றி பெறும். கடன் சுமை குறையும். மாணவர்களுக்கு கல்வியில் ஆர்வம் ஏற்படும். நீண்ட நாள் கனவு நிறைவேறும். தனவரவு திருப்தி தரும்.

வழிபட வேண்டிய தெய்வம்: அக்னீஸ்வரர், அதிர்ஷ்ட எண்: *5,9,8,1*


அதிர்ஷ்ட நிறம்: சில்வர் கிரே, அதிர்ஷ்ட எழுத்துக்கள்: H,F

**துலாம்:** பக்குவமான பணவரவு சேரும் வாரம். கைமேல் காசு கிடைக்கும். கௌரவ வாய்ப்பும் அதிகரிக்கும். எதிர்ப்புகள் ஓடி ஒழியும். வாகனச் செலவு ஏற்படும். ஏற்றுமதி தொழில் லாபம் தரும். கல்வியில் கவனம் தேவை. பூர்வீகச் சொத்து கிடைக்கும். பேச்சில் கம்பீரம் இருக்கும். பெற்றோரின் ஆசி கிடைக்கும். திடீர் செலவுகள் ஏற்படும். விருப்பமான தொழில் அமையும். விபரீத போக்கு மறையும். உடல்வலி தோன்றி மறையும். குடும்ப பாசம் அதிகரிக்கும். எதிலும் கவனம் தேவை. வெளிநாட்டு நபரால் வெகுமதி உண்டு. ஆடை, அணிகலன் சேரும். தோதான எண்ணம் உருவாகும். கடன்தொல்லை நீங்கும். மன சந்தோஷம் அதிகரிக்கும். நண்பர்களால் அலைச்சல் உண்டு. கமிஷன் தொழில் லாபம் தரும். சிரமங்கள் குறையும். பொல்லாத காலங்கள் சொல்லாமல் விலகும். கலைத்துறையில் ஆர்வம் ஏற்படும். காரியம் கைகூடும். குழந்தைகளால் பெருமை சேரும். குடும்ப அன்யோன்யம் கூடும். பொருளாதார வளம் மேம்படும். மனமகிழ்ச்சி அதிகரிக்கும். வரவுக்கு மீறிய செலவு ஏற்படும். முன்னோர்கள் ஆசீர்வாதம் கிடைக்கும். வழக்குகள் சாதகமாகும். உடன்பிறப்புக்களால் உதவி கிட்டும். பொது வாழ்வில் புகழ் கூடும். பயணம் அனுகூலம் தரும். போட்டிகள் உருவாகி மறையும். வில்லங்கம் விலகும். புத்திரர்களால் மேன்மையுண்டு. வீடு, மனை யோகம் உண்டாகும்.

(தொடர்ச்சி 22 பக்கம்)



மேலதிக தகவல்களுக்கு:
திருமதி. வசந்தா நடராசன் B.A.
(416) 332-0269
vasantha@rogers.com



# ஈழத்துத் திருக்கோயில்கள் (வரலாறும் மரபும்)

வரலாறும் மரபும் 1154

## ரம்பொட ஆஞ்சநேயசுவாமிகள் ஆலயம், ரம்பொட. மலையகம்

" சீருடைய வாயுமகன் சீர்த்த முகம் ஒன்றே
சிறுநரசிம்மமெனச் சேர்ந்த முகம் ஒன்றே
பேறுடைய வராகமெனப்பெற்ற முகமொன்றே
பெற்றியுடைய கயக்கிரீவான முகமொன்றே
சீருடைய ஓர் கருடரான முகமொன்றே
செஞ்சொலுடைப் பஞ்சமுகரான அனுமனொன்றே
பாருடையோர் போற்றுகின்ற மாருதியை இன்றே
பாடுமனமேஇனியும் பயமுமில்லை என்றே. "

இராமபக்த அனுமானின் அவதாரங்களில் பஞ்சமுக ஆஞ்சநேயர் வடிவம், வேண்டுவதை அருளும் சிறப்புடையதாகக் கருதப்படுகின்றது. பஞ்சமுக ஆஞ்சநேயரை மனதிருத்தி வணங்கும்பொழுது, ஆஞ்சநேயரின் குணஇயல்புகள் வணங்குவோரின் உடலிலும் உள்ளத்திலும் பதியும் என ஆன்றோர் கூறியுள்ளனர். மேற்கூறிய பாடல்வரிகளில் ஆஞ்சநேயரின் பஞ்சமுகச் சிறப்புக்கள் அழகாகக் கூறப்பட்டுள்ளது. பஞ்சம்படை வந்தாலும், பாரெல்லாம் வெந்தாலும் அஞ்சவேண்டாம் என்று அபயகரத்தோடு காட்சியளிக்கும் ஸ்ரீ ஆஞ்சநேயர் எழுந்தருளியுள்ள ஆலயத்தின் வழிபாட்டு முறைகள், ஏனைய ஆலயங்களினின்றும் மாறுபட்டவையாகக் காணப்படுகின்றன. கோவிலுக்குச் செல்லும் பக்தர்கள் உடல், உள சுத்தியோடு செல்லவில்லையென்றால், அதனால் பல நேர்மாறான விளைவுகள் ஏற்படும்.

இராமதூதனாகச் சீதையைத்தேடிச் சென்ற அனுமான், அசோகவனத்திலே சிறைவைக்கப்பட்டிருந்த சீதையைக் கண்டுபிடிக்கு முன்னர், பல இடங்களிலே தங்கித் தேடிச் சென்று, இறுதியிலே அசோவனத்திலே சீதையிருப்பதைக் கண்டுபிடித்தார். இவ்வாறு அவர் தேடிய இடங்களுள் ஒன்றாக, அவரது பாதம்பட்ட புனிதபூமியாக ரம்பொட ஆஞ்சநேயர் ஆலயம் அமைந்துள்ள வேவன்டன் குன்று விளங்குகின்றது என்பது ஐதீகமாகக் காணப்படுகின்றது. இவ்விடத்திலே ஆஞ்சநேய சுவாமிகளுக்கு ஆலயமெழுப்ப எண்ணங்கொண்ட பக்தர்கள், வேவன்டன் மலை உச்சியில் பத்து ஏக்கர் நிலத்தை இலங்கை அரசிடமிருந்து வாங்கி, பெரியகோவிலொன்றையும் ஆஞ்சநேய சுவாமிகளுக்குக் கட்டினர். ரம்பொட வேவன்டன் ஆஞ்சநேய சுவாமிகளின் ஆலயத்தின் கருவறையிலே எழுந்தருளியுள்ள, ஆஞ்சநேயசுவாமிகளுடைய சிலை, பதினெட்டு அடி உயரங் கொண்டதாகக் காணப்படுகின்றது.

ஆஞ்சநேயசுவாமிகளின் சிறப்புக்கள் அளவிடற்கரியது. கடலினும் பெரிது கற்றவர். அன்பால் அனைவரையும் ஆட்கொள்பவர். தாயினும் சாலப் பரிந்து அணைப்பவர். பண்பு, அடக்கம் இவற்றின் தலைமகனாக விளங்குபவர். இவ்வாறான ஆஞ்சநேயப் பெருமானுக்குக் காரணப் பெயர்கள் பலவாகக் காணப்படுகின்றது. அஞ்சனையின் மகனாதலால் ஆஞ்சநேயர் என்றும், மாருதத்தின் சேயாக விளங்குவதால் மாருதி எனவும், வாயுவின் புத்திரனாகத் திகழ்வதால் சமீரணன் மகன் என்றும் போற்றுவர். வாயுபுத்திரன், கேசரி, காலின் மதலை, இராமதூதன், சொல்லின் மைந்தன், அஞ்சனை சிங்கம், குரவரச்சியம், இராகவன் தூதன், நம்பன் போன்ற பல்வேறு சிறப்புப் பெயர்களும் ஆஞ்சநேயருக்கு உண்டு. இவ்வாறான போற்றுதலுக்குரிய ஆஞ்சநேயசுவாமிகள் பதினெட்டடி உயரங் கொண்டவராக மலையகத்திலுள்ள ரம்பொடப் பிரதேசத்திலே எழுந்தருளியுள்ளார். ரம்பொட ஆஞ்சநேயசுவாமிகளின் திருவுருவச்சிலையைத் தமிழ் நாட்டிலுள்ள மாமல்லபுரத்தின் தலைசிறந்த ஸ்தபதிகளுள் ஒருவராகிய முத்தையா அவர்கள் உருவாக்கியுள்ளார்கள். ஈழத்தில் மட்டுமன்றி இந்தியாவிலுள்ள ஆஞ்சநேய சுவாமிகளின் திருவுருவச்சிலைகளும் இவ்வாறாகவே உயர்ந்து அமைந்திருக்கும்.

ரம்பொட ஆஞ்சநேயசுவாமிகளின் பக்தர்கள் பலஅடி நீளம்கொண்ட வெற்றிலைமாலைகளையும், மலர் மாலைகளையும், ஆஞ்சநேயசுவாமிகளுக்கு வேண்டுதல்செய்து சமர்ப்பிப்பது வழக்கம். குறிப்பாக நவக்கிரகங்களில் கொடிய கிரகங்களாகக் கருதப்படும் சனி, ராகு ஆகியவற்றைப் பிரீதி செய்ய, விசுவரூப ஆஞ்சநேயருக்கு வடைமாலைசாற்றியும், பலவகைத் திரவியங்களால் அபிடேகங்கள் செய்தும், மலர்களாலும் வாசனைமிகு சந்தனத்தினாலும் அலங்காரங்கள் செய்து பிரார்த்தனைகளைச் செலுத்துவது மரபு. இவ்வாறான பிரார்த்தனைகளைப் பதினெட்டடி உயர ஆஞ்சநேயருக்குச் செலுத்துவதற்கு வசதியாகச் சிலையின் இருபக்கமும் ஏணிப்படிகள் அமைக்கப்பட்டுள்ளன. இப்படிகளில் ஏறியே ஆஞ்சநேயசுவாமிகளுக்கு மாலைகளைப் பூசகர் அணிவிப்பார்.

அசோகவனத்திலே சீதாப்பிராட்டி, வெற்றிலையைக் கிள்ளி, ஸ்ரீ ஆஞ்சநேயரின் சிரசிலேபோட்டு "சோக நாசகனாகிய ஸ்ரீ அனுமா! நீ என்றும் சிரஞ்சிவியாக வாழ்வாயாக" என வாழ்த்தியதால், வெற்றிலைச் சுருள் மாலையும், துளசி மாலையும் ஆஞ்சநேயருக்குச் சாற்றி வழிபடும் வழக்கம் ஏற்பட்டது. இயற்கைச்சூழலில் அமைந்திருக்கும் ரம்பொட ஆஞ்சநேயர் சந்நிதியில் அமைதியாக வணங்கிய பின், தியானம் செய்வதற்கு வசதியாக, ஆலயத்தின் கீழ் தியான மண்டபம் அமைக்கப்பட்டுள்ளது. இவ்வாறான சிறப்பு ஏனைய ஆலயங்களில் காணப்படுவது அபூர்வம். தியானம் செய்வதற்குரிய மனஒருமைப்பாட்டைப் பெறும் ஒருவரால், வாழ்வில் பல நன்மைகளைப் பெற இயலும் என்பதற்கு முனிவர்களும், ஞானிகளும் சான்றாகி வழிகாட்டியுள்ளனர். ஒவ்வொரு மனிதனிடமும் குறைந்த அதிர்வு எண்களையுடைய அதிர்வுகள் காணப்படுகின்றன.

வளரும்...

இலங்கை செய்திகள் Sri Lanka News

## விடுதலைப் புலிகள் இயக்கத்தில் புலனாய்வுத்துறையில் பணியாற்றி அந்த அர்ப்பணிப்புள்ள கடமையின் போது உயிரிழந்த மாவீரர்கள்

**புலனாய்வுத் துறை: தமிழீழத்தின் பார்வை மற்றும் பாதுகாப்புக் கண்ணும் கேடயமும்**

உலகில் எந்தவொரு விடுதலை இயக்கமாக இருந்தாலும், அதற்கென ஒரு புலனாய்வுப் பிரிவு அவசியமாகவே இருந்திருக்கிறது. தமிழீழ விடுதலைப் புலிகளும் இதனை மிக நுட்பமான முறையில் வடிவமைத்திருந்தது. தமிழீழத்தின் புலனாய்வுத் துறை என்பது "தமிழீழ புலனாய்வு சேவை" (TIS – Tamil Eelam Intelligence Service) என்றழைக்கப்பட்டு வந்தது.

இது வெறும் எதிரியை கண்காணிக்கும் அமைப்பாக மட்டும் இல்லாமல், உள்ளக பாதுகாப்பு, இராணுவ உளவுத்துறை, வெளிநாட்டு நகர்வுகள், இராணுவப் பொறியியல் விவரங்கள், சிங்கள இராணுவ நகர்வுகள், சிக்கல் உள்ள செயலாளர்கள் மற்றும் மரபணுக்குறித்த தகவல் சேகரிப்பு போன்ற பல்வேறு அம்சங்களை நுட்பமாக இயற்றியதாகும்.

**விடுதலைப் புலிகளின் புலனாய்வுப் அமைப்பின் முக்கியப் பிரிவுகள்**

தமிழீழ புலனாய்வுத்துறை பெரும்பாலும் இரு முக்கிய பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டிருந்தது:

**சிறப்புப் புலனாய்வுப் பிரிவு** (Military Intelligence Division)**:**

இலங்கை இராணுவத்தின் நகர்வுகளை கண்காணித்து, தாக்குதலுக்கு முன் ஆய்வுகள், எதிரியின் பலவீனங்கள், பாதுகாப்பு வலையமைப்புகள் மற்றும் தீவிர நடவடிக்கைகளைச் செயல்படுத்தியது.

**உள்நாட்டு புலனாய்வுப் பிரிவு** (Internal Intelligence)**:**

இயக்கத்தில் உள்ளவர்களின் நம்பிக்கையும், மரபுகளும், உள்நோக்கங்களும் தூய்மையாக இருக்கிறது என்பதை உறுதி செய்தது.


சதிகள், ஊடுருவல்கள், அரசியல் சதிகள், வெளிப்புறப் பாசிச நடவடிக்கைகள், சட்ட விரோதத் தொடர்புகள் போன்றவற்றைத் தடுக்கும் பணிகளை மேற்கொண்டது.

**புலனாய்வுப் பிரிவில் அடங்கியிருந்த மனித உளவு மற்றும் சிறப்புத் திறன்கள்**

தமிழீழத்தின் புலனாய்வுப் பிரிவு, உயிரியல் உளவுத்திறன்கள், மருத்துவ உளவுத்தகவல், நவீன தகவல் தொடர்பு முறைகள், மாறுபட்ட மொழி அனுபவங்கள், பண்பாட்டு உடைய அணுகுமுறைகள் போன்றவற்றை பயன்படுத்தி மிகவும் நுட்பமான உளவுத்துறை அமைப்பை செயல்படுத்தியது.

இதில் பெண்களும் மிக முக்கிய பங்கு வகித்தனர். குறிப்பாக நிர்வாகத் திறமை, நம்பிக்கைக்குரிய பண்பு, உணர்வுப்பூர்வ தகவல்களை எடுக்கும் திறமை ஆகியவற்றால், பெண்கள் புலனாய்வுத் துறையில் பலரின் உயிருக்கே காரணமான முக்கியத் தகவல்களைத் திரட்டியுள்ளனர்.

**உயிரை அர்ப்பணித்து பணிசெய்த வீரர்களின் தியாகம்**




தமிழீழ புலனாய்வுத் துறையின் முக்கியத்துவம் மிகுந்த காரணமாக, இது இலங்கை இராணுவத்தின் முதன்மை தாக்குதல் இலக்காக அமைந்தது. பல புலனாய்வுத் துறைக் களவீரர்கள், தங்கள் பெயர் வெளிப்படாமல், தங்களின் பணி மட்டுமே பேசும்படி வாழ்ந்து, அதற்கே உயிரைக் கொடுத்துள்ளனர்.

பின்னணி சதிகள், அரசாங்க ஊடுருவல், சிங்கள இராணுவ இயக்கங்களின் பயங்கர நடவடிக்கைகள், சட்டவிரோத நடவடிக்கைகளால் சிக்கிய புலனாய்வாளர் களின் மரணங்கள் ஆகியவை தொடர்ச்சியாக நடந்தன.

**அவ்விதமாக உயரிய கடமையின் போது உயிரிழந்த சில வீரர்களின் எண்ணிக்கையும் மர்மங்களும் குறிப்பிடத்தக்க தியாகங்களாகும்**

- மீசைப் பாண்டி (2001) - அரசின் உளவு நடவடிக்கைகளை வெளிக்கொணர்ந்த பின்பு மர்மமான சூழ்நிலைகளில் கொல்லப்பட்டார். அவரது மரணம் இன்னும் பொது அங்கீகாரம் பெறவில்லை.
- தீபன் (2009) - அரசு உளவு அமைப்புக்குள் ஊடுருவிய நீண்டகால உளவாளி. முள்ளிவாய்க்காலின் இறுதிப் போரின் முடிவில் போது சிங்கள இராணுவத்திடம் பிடிபடாமலேயே காணாமல் போனவர்.
- மோகன் (2007) - வெளிநாட்டு தூதரக நடவடிக்கைகளைக் கண்காணித்த அரசியல் உளவு அதிகாரி. ரகசிய நடவடிக்கையின் போது எதிர் உளவு முகவர்களால் படுகொலை செய்யப்பட்டார்.

இவர்கள் நிழல் போரின் ஒரு சிறிய பகுதியை மட்டுமே பிரதிநிதித்துவப்படுத்துகின்றனர். இவர்கள் பெயர்கள் பொதுவில் பிரசித்தி பெறவில்லை என்றாலும், இயக்கத்தின் வெற்றிக்கு அவர்கள் ஏற்படுத்திய தாக்கம் வரலாற்றில் அழியாதது.

**விடுதலைப் புலிகளின் புலனாய்வுப் பிரிவினர் பயன்படுத்திய நவீன உளவுத் தொழில்நுட்பங்கள்** (தொடர்ச்சி 22ம் பக்கம்)

## இவ்வார ராசிபலன்

(20 பக்கத் தொடர்ச்சி)

**துலாம்:** மனைவியின் அன்பு அதிகரிக்கும். மாற்றங்கள் நிகழும். பளீர்ப்பேச்சுக்களால் திடீர் முன்னேற்றம் கிடைக்கும். ஏற்றுமதி தொழில் லாபம் தரும். வேலைபளு கூடும். புதிய சிந்தனை உருவாகும். பழைய நண்பரை சந்திக்க நேரிடும். பணியில் கண்டிப்பு அவசியம். தொழில் லாபம் பெருகும். கணவன், மனைவி அன்யோன்யம் கூடும்.
வழிபட வேண்டிய தெய்வம்: பிரகதீஸ்வரர், அதிர்ஷ்ட எண்: 6,9,2,1
அதிர்ஷ்ட நிறம்: இளம் ஊதா, அதிர்ஷ்ட எழுத்துக்கள்: A,J




**விருச்சிகம்:** நண்பர்களால் பணவரவு கிடைக்கும் வாரம். காதலர்களுக்குள் மனக்கசப்பு ஏற்பட்டு மறையும். முன் கோபம் தவிர்க்கவம். தேக ஆரோக்கியம் திருப்தி தரும். ஏற்றமும், மாற்றமும் அதிகரிக்கும். பாதகமான சூழ்நிலை அகலும். மேலதிகாரியின் பாராட்டு கிட்டும். கடன் தொல்லையிலிருந்து விடுபடுவீர்கள். எதிரிகள் விலகிச் செல்வார்கள். வழக்குகள் முடிவுக்கு வரும். எதிர்பார்ப்புக்கள் குறையும். பிரச்சனைகள் முற்றிலும் அகலும். சொத்துச் சேர்க்கையுண்டு. மாணவர்களுக்கு கல்வியில் ஆர்வம் ஏற்படும். பால்ய நண்பர்களைச் சந்திக்க நேரிடும். வாயில் தேடி வரன் வரும். நட்பு வட்டம் விரிவடையும். உத்தியோகத்தில் பதவி உயர்வு வரும். கலகலப்பான செய்திகள் வந்து சேரும். வராத கடன் வந்து சேரும். ஆண்களின் அதிகாரம் உயரும். ஆடம்பரத்தை விரும்புவீர்கள். இயற்கைக் காட்சிகளை கண்டு இன்புறுவீர்கள். மருத்துவர்களுக்கு நற்பெயர் கிட்டும். பிள்ளைகளால் தொல்லைகள் உண்டு. மாற்று இன உதவி கிட்டும். ஆதி முதல் அந்தம் வரை ஆதாயம் கிடைக்கும். பயணங்களால் லாபம் கிடைக்கும். பலவிதத்தில் ஷேமம் கிடைக்கும். பணி செய்யும் இடத்தில் பாராட்டு உயரும். திருமண பேச்சு முடிவிற்கு வரும். நூதன பொருள் சேர்க்கையுண்டு. உடல்நலம் சீராகும். பொல்லாதவர்கள் தொல்லை ஒழியும். மாற்று மருத்துவம் பலன் தரும். வரவுகள் மிகுதியாகும். வாகன மாற்றம் உண்டு. செயல்களில் நிதானம் தேவை. புதிய முயற்சி பலிதமாகும். வியாபாரம் சுமாராக இருக்கும். அலைச்சல் அதிகரிக்கும். தீர்த்த யாத்திரை உண்டு. திவ்யமான பலன் கிடைக்கும். தெய்வ நம்பிக்கை அதிகரிக்கும். நல்ல சம்பவங்கள் நடைபெறும். கலவரமான சூழ்நிலைகள் காணப்படும்.
வழிபட வேண்டிய தெய்வம்: அம்மன், அதிர்ஷ்ட எண்: 7,1,4,3
அதிர்ஷ்ட நிறம்: மஞ்சள், அதிர்ஷ்ட எழுத்துக்கள்: Q,B




**தனுசு:** மகிழ்ச்சிகள் அதிகரிக்கும் வாரம். விவசாயிகள் பலன் பெறுவார்கள். புத்துணர்வோடு செயல்படுவீர்கள். விளையாட்டுத் துறையில் கவனம் தேவை. மாணவர்களுக்குப் படிப்பில் ஆர்வம் உண்டாகும். எண்ணங்கள் வண்ணமயமாகும். பெண்களுக்கு அணிகலன் சேரும். நீண்ட நாள் ஆசைகள் நிறைவேறும். உடன் பிறப்புக்களால் உதவி உண்டு. முதலீடுகளால் முன்னேற்றம் உண்டு. சேமிப்பு உயரும். பதினாறு வகையான செல்வங்கள் சேரும். காதல் கைக்கூடும். நன்மைகள் நாடி வரும். வராதக் கடன் வந்து சேரும். பணவரவு உண்டு. மாற்று இனத்தவர் வாழ்த்துக் கிட்டும். கலைத்தொழில் ஏற்றம் தரும். பெற்றோர் வழி மருத்துவச் செலவு உண்டு. பயணத்தால் பலன் உண்டு. பேச்சில் நிதானம் தேவை. பிள்ளைகளால் பெருமை சேரும். கணவன், மனைவி அன்யோன்யம் அதிகரிக்கும். மனைவியால் மகிழ்ச்சி ததும்பும். மனநிம்மதி அதிகரிக்கும். கடன் வாங்க நேரிடும். பங்குச்சந்தையில் கவனம் தேவை. குடும்ப அன்யோன்யம் அதிகரிக்கும். பிள்ளைகள் நலனில் அக்கறை தேவை. கலைஞர்களுக்கு வாய்ப்புகள் அதிகரிக்கும். உரிய நேரத்தில் உதவிகள் கிடைக்கும். பெற்றோர் வழியில் பிரியம் கூடும். பிரியமானவர்களால் செலவு அதிகரிக்கும். திருமண தகவல் இல்லம் தேடி வரும். இனம் புரியாத சந்தோஷம் மனதில் குடிக்கொள்ளும். குடும்பத்தில் குதூகலம் ஏற்படும். பூர்வீகச் சொத்துக்கள் சேரும். தொழில் வகையில் மேன்மையுண்டு. தொகை தொகையாய் சேரும். புதிய வாய்ப்புக்கள் கிடைக்கும். தொழில் அபிவிருத்தி அடையும். உணவு பிரியம் அதிகரிக்கும். உடல் நோயிலிருந்து விடுதலை அடைவீர்கள்.
வழிபட வேண்டிய தெய்வம்: குலதெய்வம், அதிர்ஷ்ட எண்: 6,9,7,1
அதிர்ஷ்ட நிறம்: குங்கும கலர், அதிர்ஷ்ட எழுத்துக்கள்: V,A




**மகரம்:** கலைந்த குடும்பம் ஒன்று சேரும் வாரம். விவசாயிகள் கோரிக்கைகள் நிறைவேறும். வேண்டாத உறவுகளை தவிர்க்கவும். ஏற்றுமதி தொழில் லாபம் தரும். அடுத்தவர் பிரச்சனையில் தலையிடுவதை தவிர்க்கவும். சுபகாரியங்கள் இல்லத்தில் இனிதே நடந்தேறும். வெளிநாட்டுப் பயணம் லாபம் தரும். சமூக சேவை செய்ய முன் வருவீர்கள். தனவரவுகள் அதிகரிக்கும். நாடிய பொருளும், தேடிய வாய்ப்பும் கிடைக்கும். பெண்களின் கௌரவம் உயரும். பெற்றோர் நலனில் அக்கறை தேவை. பழைய நண்பர்களை சந்திப்பீர்கள் போட்டிகள் உருவாகி மறையும். வில்லங்கம் விலகும். வரவுக்கு மீறிய செலவு ஏற்படும். கலைத்துறையில் கௌரவம் கூடும். முன்னோர்கள் ஆசீர்வாதம் கிடைக்கும். பொருளாதார வளம் மேம்படும். ஆடம்பர எண்ணம் அதிகரிக்கும். மனைவியின் அன்பு அதிகரிக்கும். மாற்றங்கள் நிகழும். பணி செய்யும் இடத்தில் வேலைப்பளு அதிகரிக்கும். புதிய சிந்தனை உருவாகும். தொழில் லாபம் பெருகும். வழக்கு முடிவுக்கு வரும். எதிர்பார்ப்புக்கள் குறையும். மனைவியின் பேச்சு ஆறுதல் தரும். எதிரிகள் விலகி செல்வார்கள். அமைதியான மனநிலை காணப்படும். சொத்துப் பிரச்சனை தீர்வுக்கு வரும். காதலர்களிடையே கசப்பு விலகும். விளையாட்டுத்துறையில் லாபம் கிட்டும். அணிகலன் சேர்க்கையுண்டு. மேலதிகாரியின் பாராட்டுக் கிட்டும். சிரமங்கள் குறையும். பெரியோர்களின் ஆலோசனை பலன் தரும். பிள்ளைகளால் பெருமை சேரும். பேச்சில் நிதானம் தேவை. கமிஷன் தொழில் லாபம் தரும். எடுத்த முயற்சியில் வெற்றி பெறுவீர்கள். கனவுகள் பலிதமாகும். அனுகூலச் செய்திகள் வந்து சேரும். எதிரிகள் ஏமாற்றம் அடைவர்.
வழிபட வேண்டிய தெய்வம்: சித்ர குப்தர், அதிர்ஷ்ட எண்: 1,4,9,7
அதிர்ஷ்ட நிறம்: ஊதா நிறம், அதிர்ஷ்ட எழுத்துக்கள்: W,J





**கும்பம்:** நினைத்ததெல்லாம் நடக்கும் வாரம். பணியில் பாராட்டுக்கள் கிடைக்கும். விலகிச் சென்றவர் விரும்பி வருவர். திருமணப் பேச்சு முடிவிற்கு வரும். வரவு திருப்தி தரும். மருத்துவச் செலவு குறையும். உறவினர் வருகையால் கலகலப்பு குறையும். கடன் விஷயத்தில் கவனம் தேவை. புதிய ஒப்பந்தம் கையெழுத்தாகும். பணமும், பாராட்டும் சேரும். ஆசைகள் நிறைவேறும். தெய்வ நம்பிக்கை அதிகரிக்கும். அந்நிய தேசப்பயணம் உண்டு. இரும்புத்தொழில் ஏற்றம் தரும். பால்ய நண்பர் சந்திப்பு கிட்டும். முதலீடுகளால் முன்னேற்றம் உண்டு. பணப்புழக்கம் அதிகரிக்கும். பொறுப்பும், சிறப்பும் சேர்க்கும். காரிய வெற்றிக் கிட்டும். குடும்பத்தில் குதூகலம் ஏற்படும். மற்றவர்களிடத்தில் கவனம் தேவை. வாழ்க்கையில் பிடிப்பு அதிகரிக்கும். கோரிக்கைகள் நிறைவேறும். நன்மைகள் நாடி வரும். வராத கடன் வந்து சேரும். பணவரவு உண்டு. பெண் வழிப் பிரச்சனை முடிவிற்கு வரும். பகையாளியிடம் எச்சரிக்கை தேவை. கற்பனை வளம் அதிகரிக்கும். ஷேர் மார்க்கெட்டில் லாபம் தரும். கலைத்தொழில் திருப்தியை ஏற்படுத்தும். டிரான்ஸ்போர்ட் தொழில் லாபம் தரும். புண்ணிய ஸ்தலம் செல்ல வேண்டி வரும். சகோதர வகையில் சச்சரவு ஏற்படும். வீடு நிலமும், விசேஷ யோகமும் அமையும் காலம். நண்பர்களின் உதவி கிடைக்கும். நல்லோர்களின் நட்பு கிட்டும். பழையக்கடன் பஞ்சாயத்து மூலம் தீர்வுக்கு வரும். பிள்ளைகளின் கல்விச்செலவு அதிகரிக்கும். ஆடை, அணிகலன் சேரும். சாதனையான எண்ணங்கள் உதயமாகும். எதிர்கால தேவைகள் பூர்த்தியாகும். இரும்புத்தொழில் ஏற்றம் தரும்.
வழிபட வேண்டிய தெய்வம்: முருகர், அதிர்ஷ்ட எண்: 8,1,5,9
அதிர்ஷ்ட நிறம்: பொன்நிறம், அதிர்ஷ்ட எழுத்துக்கள்: X,C




**மீனம்:** பிரார்த்தனை நிறைவேறும் வாரம். பை நிறைய லாபமும், பணம் காசும் சேர்க்கையும் ஏற்படும் காலம். மாணவர் திறமை பளிச்சிடும். பொறியியல் துறை லாபம் தரும். சகோதர வகையில் சகாயம் கிட்டும். தாய்வழி உறவில் கவனம் தேவை. பணத்தட்டுப்பாடு ஏற்படும். பயணங்களால் பணம் கரையும். வாக்குவாதத்தை தவிர்ப்பது நல்லது. வயிறு சம்பந்தமான நோய் வந்து நீங்கும். உறவினர்களின் ஒத்துழைப்பு கிடைக்கும். அரசு வகை ஆதாயம் கிட்டும். திருமண முயற்சி பலன் தரும். கால்நடைகளால் லாபம் கிடைக்கும். எதிரிகள் கூடும். பொதுப்பணியில் ஆர்வம் கூடும். காதலர்கள் தம்பதியாவார்கள். தர்ம சிந்தனைகள் மேலோங்கும். பூர்வீகச் சொத்துக்கள் கிடைக்கும். தொல்லைகள் அகலும். வீட்டுத்தேவைகள் பூர்த்தியாகும். கேட்ட உதவிகள் கிட்டும். தொழில் முயற்சி பலன் தரும். நீண்ட நாளைய நோய்கள் விலகும். ஞாபகத்திறன் அதிகரிக்கும். சுமூகமான சூழ்நிலை காணப்படும். தேகப்பலம் கூடும். திட்டமிட்ட காரியம் வெற்றி முகமாகும். மறைமுக எதிர்ப்புக்கள் மறையும். சந்தோஷம் குடிக்கொள்ளும். ஆலோசனைகளால் ஆதாயம் உண்டு. கொடுத்த வாக்கை காப்பாற்றுவீர்கள். இடமாற்றம் நன்மை தரும். குடும்பத்தினர் அனுசரிப்பு கிட்டும். மதிப்பும், மரியாதையும் உயரும். உடன்பிறப்புகளின் உதவி கிடைக்கும். பணவரவு திருப்தி தரும். கூட்டுப் பிரார்த்தனையால் மாற்றம் கிடைக்கும். ஆரோக்கிய பொலிவும் அடிமனதில் தெளிவும் ஏற்படும். புதிய சிந்தனை உதயமாகும். பழைய நண்பரை சந்திக்க நேரிடும். பணியில் கண்டிப்பு அவசியம். வழக்கு முடிவுக்கு வரும்.
வழிபட வேண்டிய தெய்வம்: குபேரர், அதிர்ஷ்ட எண்: 3,9,5,1
அதிர்ஷ்ட நிறம்: இளம் பச்சை, அதிர்ஷ்ட எழுத்துக்கள்: D,Y

# விடுதலைப் புலிகள் இயக்கத்தில் புலனாய்வுத்துறையில் பணியாற்றி அந்த அர்ப்பணிப்புள்ள கடமையின் போது உயிரிழந்த மாவீரர்கள்

(21ம் பக்கம் தொடர்ச்சி)




தமிழீழ புலனாய்வுத் துறை, அனேகமாக இலங்கையின் இராணுவத்தையே மிரட்டிய ஒரே அமைப்பாக இருந்தது. 1990கள் மற்றும் 2000களின் தொடக்கத்தில், சர்வதேச தனிமை மற்றும் வளங்களின் பற்றாக்குறை இருந்தபோதும், உளவுப் பிரிவு பின்வரும் வளர்ச்சிகளை முன்னெடுத்தது:

- குறியாக்கப்பட்ட வானொலி தகவல் தொடர்பு (Encrypted radio communication lines)
- குறியீட்டு தகவல் பரிமாற்றம் (Encrypted Comms)
- இராணுவ உள்கட்டமைப்பு வரைபட முறைகள்
- எதிர் கண்காணிப்பு நுட்பங்கள்
- வேகமான போர்க்கள உளவு தகவல் பரிமாற்றம்
- தரவுகளுக்கான கடவுச்சொற் பாதுகாப்பு

அந்தக் காலத்தில் இத்தகைய முன்னேற்றங்கள், தமிழீழ உளவுப் பிரிவை இலங்கை அரசுக்கு அச்சுறுத்தலாகவும், உலகளாவிய ஆய்வாளர்களுக்கு வியப்பாகவும் ஆக்கியது.

### இறுதி மரியாதை தீர்மானச் செய்தி

தமிழீழத்தின் உளவுப் பிரிவு வீரர்கள் வெறும் உளவாளிகள் அல்ல, அவர்கள் ஒரு கனவின் காவலர்கள். அவர்கள் புகழை நாடவில்லை, பதிலாக பெயரில்லாமல் சேவை செய்தனர்.

புலனாய்வுத்துறையின் வீரர்கள், வேறு எந்தவொரு தளபதிக்கும் குறைவில்லாத முக்கியத்துவம் வாய்ந்தவர்களாக இருந்தனர். அவர்கள் தங்களது பெயர்களை வரலாற்றில் பதிக்க விரும்பவில்லை இயக்கத்தின் பாதுகாப்பு மற்றும் தேசிய விடுதலையின் நிலைத்தன்மை என்பதே அவர்களின் ஒரே நோக்கம்.

இந்த வீரர்களின் நிழல்களில், பலர் “முன்னணி இல்லாத போராளிகள்” என அழைக்கப்படுகிறார்கள். ஆனால் உண்மையில், தமிழீழ விடுதலைப் புலிகளின் வெற்றிக்கு அடித்தளம் இவர்கள் தந்ததே என வரலாறு கூறும்.

**எழுதியவர்: ஈழத்து நிலவன்**

# MORTGAGE
## FINANCIAL SOLUTIONS

COMMERCIAL · RESIDENTIAL · VACANT LAND

INDUSTRIAL · CONSTRUCTION



## OUR SERVICE



- Purchase
  - Builder Purchase
  - MLS Purchase
  - Private Purchase
- Equity line of Credit
- Refinance
- Renewal

CALL US

**NESAN**

**416-908-5656**

Office: 416-660-5656
Fax: 647-351-3099
Toll: 1-844-878-2721

www.nesan.ca

**WE DEAL WITH ALL BANKS**

CityCan Financial Corporation
NESAN SUBRAMANIAM
Mortgage Agent level 1 Licence # M15001465
CityCan Financial Corporation, Brokerage #10332

Scotiabank · TD Canada Trust · National Bank · RFA · First National Financial LP · Manulife · Desjardins · MCAP · Home Trust · Equitable Bank · radius financial · RMG mortgages

55 EGLINTON AVE E SUITE 604, TORONTO, ON M4P 1G8

மொன்றியல் நகரில்
UTHAYAN உதயன்
விளம்பரங்கள், மரண அறிவிததல்கள்,
பிறந்ததின வாழ்த்துக்கள், உள்ளூர்ச் செய்திகள் மற்றும்
அறிவித்தல்களைக் கையளிக்க நாடுங்கள்.
FRUITS HABY
பகமையான மரக்கறி வகைகள் மற்றும் பழவகைகளுக்கு மொன்றியலில் புகழ்பெற்ற தமிழர் ஸ்தாபனம்
5925 Victoria
Montreal, QC
H3W 2R9
514-342-4229
514-865-0519



மதுரையில் இருந்து மீண்டும் வருகை
ஜாதகம் பார்க்கப்படும்
பிறந்த வருடம், மாதம், திகதி சொன்னால் போதும் நாள், நட்சத்திரம், ராசி பார்த்து நடந்தது நடக்கப்போவது பற்றிய பலன் சொல்லப்படும். திருமணப் பொருத்தம் மற்றும் குழந்தைகளுக்கு குறிப்பு எழுதிக் கொடுக்கப்படும்.
கோ. காசி (மதுரை) Phone:- 437-925 5643 Whatsapp:- 437- 329 4164



Keith Sanmugathas
Broker
Sun Sanmugathas
Broker of Record

PROPERTY MAX
HIGHER ACHIEVEMENTS
Realty Inc. Brokerage
SANMUGATHAS TEAM
6888 14th Ave Markham, On L6B 1A8
Office: 416-291-3000

416-666-9464
www.iselldreamcondos.ca
416-291-0005
www.iselldreamhomes.ca



26ம் ஆண்டில்...
26 years of publishing
www.uthayannews.ca
UTHAYAN உதயன்



தமிழ் நிர்வாகத்தில் இயங்கும் நிறுவனம்
RIDE-U
- Airport
- Niagara Falls
- Ottawa
- Montreal
- Quebec City
- USA

rideu2025@gmail.com
(416)789-6556
BOOK NOW




உதயம் 1527 CHIEF EDITOR: R.N. LOGENDRALINGAM Friday July 11, 2025


# LATIKA Production ஆதரவிலும் பி. எஸ். சுதாகரனின் தயாரிப்பிலும் இயக்கத்திலும் திரைக்கு வந்துள்ள "மௌனித்த பொழுது"

### கனடிய ரசிகர்கள் பார்த்து ரசித்த மற்றுமொரு " எங்கட படம்" "இதுவாகும்"







அண்மைக்காலத்தில் எமது தாயகத்திலிருந்தும் எம்மவர்கள் புலம்பெயர்ந்து வாழும் பல வெளிநாடுகளிலிருந்தும் நம்மவர்கள் தயாரிப்பில் திரைகளுக்கு வந்த பல திரைப்படங்களில் சில மாத்திரமே "எங்கட படம்" என்று பாராட்டக்கூடியவையாக அமைந்திருந்தன. இவ்வாறு எங்கட படம்" என்று பாராட்டுவதற்குரிய அளவுகோள்கள் பல உண்டு. இந்த அளவுகோள்களை தங்கள் கைகளில் எடுத்துக் கொள்கின்ற தீவிர அல்லது ஆழமான ரசிகர்கள் தங்கள் ரசனைக்கு ஏற்ப "இது தான் எங்கட படம்" என்று தங்கள் பாராட்டும் விமர்சனத்தை வழங்குவார்கள்.

எம்மில் பலர் எதிர்பார்க்கின்ற கதைக் களம், உரையாடல் மொழி- படமாக்கப்பெற்ற இடங்கள்- ஏற்கெனவே திரைகளில் பார்த்து பாராட்டுப்பெற்ற நடிக நடிகையர்கள்- இடம்பெறும் பாடல்களில் உள்ள மண்வாசனை மற்றும் பண்பாட்டுக் கோலங்கள் ஆகியனவே "எங்கட படம்" என்று நாம் பாராட்டுவதற்கான அளவுகோள்களாக விளங்குகையில் நாம் கடந்த 6ம் திகதியன்று ஞாயிற்றுக்கிழமை மார்க்கம் நகரில் உள்ள யோர்க் சினிமா திரையரங்கில் பார்த்து மகிழ்ந்த **'LATIKA Production** ஆதரவிலும் பி. எஸ். சுதாகரனின் தயாரிப்பிலும் இயக்கத்திலும் திரையிடப்பெற்ற "மௌனித்த பொழுது" "எங்கட படம்" என்ற பாராட்டைப் பெறுவது ஏற்புடையதாகவே விளங்குகின்றது. (தொடர்ச்சி 11ம் பக்கம்)

# அதிக வசதிகளுடன்கூடிய சமூகங்களை உருவாக்க ஒன்ராறியோ அரசு EASE எனும் மானியத்தை அறிமுகப்படுத்துகிறது

மூதாளர் மற்றும் மாற்றுத்திறனாளிகள் சமுகத்துடன் முழுமையாக இணைந்த வாழ உதவும் வகையில் ஒன்ராறியோ அரசு **'Enabling Accessibility and Senior Empowerment (EASE)'** புதிய மானியத்தின் மூலம் 2.2 மில்லியனை டொலர்களை ஒதுக்கியுள்ளது. இந்நிதி, பூங்காக்கள், ஏரிக்கரை போன்ற இடங்களில் எளிதில் பயன்பாட்டைப் பெற்றுக்கொள்ளக்கூடிய வகையிலான கழிப்பறைகள், நகர்த்தக்கூடிய கடற்கரை விரிப்புகள் மற்றும் உதவி சாதனங்களுக்கான மின்னேற்றி நிலையங்கள் போன்றவற்றுக்கான திட்டங்களுக்கு வழங்கப்படும். நகராட்சிகள், இலாப நோக்கற்ற நிறுவனங்கள், பழங்குடி நிர்வாக அமைப்புகள் ஆகியன இவற்றுக்கு இப்போது விண்ணப்பிக்கலாம்.

இதுப்பற்றிக் கூறும்போது, **EASE** மானியத்தின் மூலம், எமது அரசாங்கம் தடைகளை அகற்றி, அனைத்தும் உள்ளடங்கலான சமூகங்களை உருவாக்குகிறது. முதியோரும் மாற்றுத்திறனாளிகளும் சுறுசுறுப்பாகவும், ஆரோக்கியமாகவும், சமூகத்துடன் இணைந்து வாழ்வதற்கான வழிகளை ஏற்படுத்துவதில் நாம் உறுதியாக உள்ளோம்" என அமைச்சர் விஜய் தணிகாசலம் தெரிவித்தார். ஸ்காபரோ மக்களைப் பொறுத்தவரையில் இது முதியவர்களுக்கும், மாற்றுத்திறனாளிகளுக்கும் பல வசதிகளையும் உள்ளடக்கிய பொது இடங்களுக்கான வசதியை ஏற்படுத்திக் கொடுப்பதால் அவர்களின் சமூக ஈடுபாட்டுக்கான வாய்ப்புகளைக் அளிக்கிறது.




# கனடா — ஸ்காபுறோவில் அழகுற இடம்பெற்ற குரு ஸ்ரீமதி ரேணுகா விக்னேஸ்வரனின் மாணவி அதுஸ்கா கிரிபரனின் பரத நாட்டிய அரங்கேற்றம்







ஸ்காபுறோவில் கடந்த பல வருடகளாக வெற்றிகரமாக இயங்கிவரும் குரு ஸ்ரீமதி ரேணுகா விக்னேஸ்வரன் அவர்களின் "கலையருவி" நாட்டியப் பள்ளியின் சிரேஸ்ட மாணவி அதுஸ்கா கிரிபரனின் பரத நாட்டிய அரங்கேற்றம் கடந்த 06-07-2025 அன்று ஞாயிற்றுக்கிழமை அன்று சீனக் கலாச்சார மண்டபத்தில் அழகுற இடம்பெற்றது.

அரங்ககேற்றச் செல்வி அதுஸ்கா கிரிபரன் தனது அபாரத்திறமை மற்றும் அயராத பயிற்சி ஆகியவற்றை மூலதனமாகக் கொண்டு தனது குருவின் அர்ப்பணிப்புள்ள நடனப் பயிற்சிகளை சிறப்பாகவும் அவதானமாகவும் கவனித்துப் பயின்று அன்றைய அரங்கேற்றத்தை அனைவரும் பாராட்டும் வகையில் சமர்ப்பித்தார்.

மண்டபம் நிறைந்த இந்த அரங்கேற்றத்திற்கு இங்குள்ள நடன மற்றும் இசையாசிரியர்களும் கலந்து கொண்டு சிறப்புச் செய்தார்கள்.

இங்க காணப்படும் படங்களில் குரு ஸ்ரீமதி ரேணுகா விக்னேஸ்வரன் அவர்கள் தனது துணைவர் விக்னேஸ்வரன் சகிதம் அதுஸ்கா கிரிபரனுக்கு அரங்கேற்றச் சான்றிதழ் மற்றும் கேடயம் ஆகியவற்றை வழங்கிப் பாராட்டுவதையும் மிருதங்க வித்துவான் கௌரி சங்கர் அவர்களை மேடையில் அதுஸ்கா கிரிபரனின் பெற்றோர் கௌரவிப்பதையும் மாணவி அதுஸ்கா கிரிபரனின் நடனத்தோற்றங்கள் சிலவற்றையும் இங்கு காணலாம்.


கனடா தமிழ் எழுத்தாளர் இணையம் நடத்தும் சிறுகதைத் தொகுப்பு வெளியீட்டு விழா

கனடாத் தமிழ்ப் படைப்பாளிகளின் 'கதைச்சரம்'
(சிறுகதைத் தொகுப்பு)
நூல் வெளியீடு

'கனடாத் தமிழ் எழுத்தாளர் இணையம்' 2025 ஆம் ஆண்டுக்கான சிறப்பு வெளியீடாக, 'கதைச்சரம்' எனும் சிறுகதைத் தொகுப்பை வெளியிட உள்ளது. 25 கனடாத் தமிழ் கதாசிரியர்களின் சிறுகதைகள் இதில் இடம் பெற்றுள்ளன.

வெளியீட்டு விழா இடம்பெறும்
இடம் - பைரவி நுண்கலைக் கூடம்
27 Casebridge Ct Unit 5, Scarborough, ON M1B 4Y4
நாள் - 13. 7. 2025 (ஞாயிற்றுக் கிழமை)
நேரம் - மாலை - 5.00 மணி

அனைவரையும் அன்போடு அழைக்கின்றோம்.

ரவி கனகசபை, தலைவர் | வாசுகி நகுலராஜா, செயலாளர் | இராச்குமார் குணரட்ணம், பொருளாளர்

கனடாத் தமிழ் எழுத்தாளர் இணையம்